# என்னை மரணத்தின் வருகை என்கிறார்கள்



# என்னை மரணத்தின் வருகை என்கிறார்கள்

வா.மு.கோமு

This book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the author’s prior written consent in the form of binding or cover other than that in which it is published and without a similar condition including this the right under copyright reserved above, no part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means (electronic, mechanical, photocopying, recording or otherwise), without the prior written permission of the copyright owner.

என்னை மரணத்தின் வருகை என்கிறார்கள் / Ennai Maranathin Varukai Enkiraarkakal

© Vaa.Mu.Komu

Second Edition: March 2016

# வா.மு.கோமு

வா.மு.கோமு என்ற பெயரில் எழுதிவரும் வா.மு.கோமகன் ஈரோடு மாவட்டத்தில் சென்னிமலைக்கும் மேற்கே 12 கிலோ மீட்டரில் இருக்கும் வாய்ப்பாடி என்கிற கிராமத்தை சேர்ந்தவர். 91ல் திருப்பூரிலிருந்து நடுகல் என்கிற சிற்றிதழை கொண்டு வந்தவர். 91ல் இலக்கியகளம் இறங்கியவரின் சிறுகதைகள் பல்வேறு சிற்றிதழ்களில் வெளியாகத்துவங்கின. மனதில் நினைத்தவற்றை எழுத்தில் சொல்ல சிறிதும் தயக்கம் காட்டாத எழுத்தாளர் என்ற பெயரை கூடிய சீக்கிரமே பெற்றவர். கள்ளி, சாந்தாமணியும் இன்னபிற காதல் காதல் கதைகளும், எட்றா வண்டியெ, மங்கலத்து தேவதைகள், 57 சினேகிதிகள் சினேகித்த புதினம், மரப்பல்லி, நாயுருவி, சயனம், ரெண்டாவது டேபிளுக்கு காரப்பொரி என்கிற நாவல்களை வெளியிட்டுள்ளார். கொங்கு வாழ்வியலை அப்பட்டமாக காட்டும் எழுத்துக்குச் சொந்தக்காரார்.

000

ஒரே மாதிரியான முகபாவனையோடு

நண்பர்கள் மத்தியில் எப்போதுமிருக்கும்…

பெரிய பிரச்சனைங்களாமா! என்றாலும்

அப்படிங்களா அது செரிங்க! என்றே முகபாவனையை

மாற்றாமல் பேசும்… நண்பர்…

பல்லடம் ராசுவுக்கு!

000

# Table of Contents


வா.மு.கோமு

தொழுவம் புகுந்த ஆடுகள்

என்னை மரணத்தின் வருகை என்கிறார்கள்

ஆனந்தி வீட்டு தேனீர்

இரு மனம் விலகுது

இருக்கிறார்கள் மனிதர்கள்

ஒருமுறை தான் பூக்கும்

சூரம்பட்டியில் ஓர் இரவு

காதலில் எழுந்தேன்

ஊஞ்சலாடும் உறவுகள்

பாசம் பத்தும் செய்யும்

ஸ்னேக சம்பந்தம்

சொல்வதெல்லாம் மடமை (கலாட்டா)

நான் ஒருத்தரை மனசுல நெனச்சிட்டேன்.

# தொழுவம் புகுந்த ஆடுகள்

பிரகாஷ் ஈரோடு எல்.கே.எம்.மருத்துவமனையில் தனியறையில் படுத்திருந்தான். சூரம்பட்டி நான்கு சந்திப்பு சாலைக்கு அருகில் மருத்துவமனை இருந்தது. பிரகாஷின் வலது காலில் மாவுக்கட்டு போட்டிருந்தார்கள். அந்தக்கட்டு பார்ப்பதற்கு பெரிதாக முட்டிங்காலில் இருந்து கீழ்மூட்டு வரை இருந்ததால் நாளையும் பின்னி எழுந்து நடப்பானா? என்ற கேள்விக்குறியை எல்லோர் மனதிலும் தோற்றுவித்துவிடும். தவிர கை முட்டியிலும்,முகத்திலும் சில சின்ன சிராய்ப்புகள் தான். இவனை கொண்டுவந்து சேர்த்தவர் இவனை ஆப்பரேசன் அறைக்குள் கொண்டு போனதுமே கம்பி நீட்டிவிட்டார். அவர் யாரென்றெல்லாம் இவனுக்கு தெரியாது! கொண்டு வந்து சேர்த்தவருக்காவது இவனைத்தெரியுமா? என்றால் அதுவும் இதை எழுதிக்கொண்டிருக்கும் எனக்கே இனிமேல்தான் தெரியவரும்.

பிரகாஷ் இப்படி இங்கு படுத்திருப்பதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் நாம் நேற்று என்ன நடந்தது? அதற்கு முன்பெல்லாம் என்னதான் இவன் வாழ்க்கையில் நடந்தது என்று பார்க்க வேண்டும். பிரகாஷின் சொந்த ஊர் சீனாபுரம். அது பெருந்துறைக்கும் மேற்கே நான்கு கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது! ஊரின் பேருந்து நிறுத்தம் அருகே சின்ன குன்று ஒன்றிருக்கிறது. குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான் கண்டிப்பாக! ஊரில் மொத்தமாக நூறு வீடுகள் இருக்கும். அருகில் இருக்கும் ஊர்கள் எல்லாம் பக்கம் பக்கமாக இருபதால் ஒரு பேருந்துப்பயணம் செல்லவேண்டும் என்றால் ஊர்க்காரர்கள் சீனாபுரம் வந்து தான் பேருந்து ஏறவேண்டும். கோபி நோக்கி செல்லும் பேருந்துகள் பெருந்துறையிலிருந்து சீனாபுரம் வழியாகத்தான் செல்ல வேண்டும்.

பிரகாஷிற்கு பெருந்துறையில் துணிக்கடை ஒன்றும் பெயிண்ட் கடை ஒன்றும் இருக்கிறது! கால காலமாய் துணிக்கடையை கவனித்து வந்த இவனது அப்பாவுக்கு சக்கரை, ஆஸ்துமா என்று உடல்நலக் கோளாறுகள் வந்தமையால் வீட்டிலேயே கடந்த ஒரு வருடமாக இருக்கிறார். அவரை கவனித்துக் கொள்ள அவரை போன்றே உடல்வியாதியை பெற்றிருக்கும் அம்மா! இருவரையும் கவனித்துக்கொள்ள வீட்டு வேலைக்காரி புஷ்பா. அவள் பக்கத்து தெரு தான். அவள் கணவன் ஒரு பிள்ளைப்பூச்சி. ஆயிக்கவுண்டன்பாளையத்தில் தறிக்குடோனுக்கு போய் வந்து கொண்டிருந்தான். இரண்டு குழந்தைகள். இரண்டும் பள்ளி விட்டு

வந்ததும் பிரகாஷின் வீட்டில்தான் அம்மாவின் கால்களுக்குள்ளேயே சுற்றிக்கொண்டு இருக்கும்கள். பிரகாஷுக்கு வருவோம்.

பிரகாஷிற்கு திருமணம் முடிந்து ஒருவருடம் கூட ஆகவில்லை! பிரகாஷின் மனைவிக்கு ஈரோடு சூரம்பட்டி தான். கம்ப்யூட்டரில் புலி அவள். அவள் அப்பா ஈரோட்டில் மஞ்சள் மண்டி வைத்திருக்கிறார். தவிர சென்னிமலை ரோட்டில் ஒரு பெட்ரோல் பங்க்கும் உண்டு! இரண்டுக்குமே இவள் பெயரைத்தான் வைத்திருக்கிறார். மகாலட்சுமி! பெயருக்குண்டான மகாலட்சுமி தான். கணவன் தன்னை எங்கும் சந்தோசமாய் வெளியில் கூட்டிச் செல்வதில்லை! எந்த நேரமும் அப்பாவைப்போலவே கடையையே கட்டிக் கொண்டு கிடப்பது அவளுக்குள் வேதனையை கிளப்பி விட்டது! தவிர கணவன் வீட்டில் ஆஸ்துமா தொந்தரவுள்ள மாமனார், அத்தை அவளுக்கு பயமாய்ப் போய் விட்டது! இவள் தூங்கும் நேரத்தில் கடைச் சாவிகளோடு பிரகாஷ் வருவான். காலையில் இவள் எழும் நேரத்தில் குளித்துக் கிளம்பியிருப்பான். மகாலட்சுமி எதிர்பார்த்து வந்த வாழ்க்கை இதுவல்ல! அம்மா என்றொருத்தி இருந்திருந்தாலாவது சில புத்திமதிகளை அவளுக்கு வழங்கியிருப்பாள். மகாலட்சுமியின் அம்மா போய் வருடம் பத்திற்கும் மேலாகி விட்டது! வீட்டுக்கு ஒரே மகள் வேறு. வேண்டியதை உடனே பெற்றுக் கொள்ளும் வாழ்க்கை.

“கடையையே கட்டிட்டு இருக்கிற மனுசனுக்கு மனைவி எதுக்கு? ஒருத்தியை கட்டிக்கப் போறோம்ங்றப்ப இந்த யோசனையெல்லாம் பண்ணவே மாட்டீங்களா? எந்த நேரமும் சம்பாதிக்கிறதுலயே குறியா இருந்தா எப்படி? வீட்டுல நான்  என்ன பண்ண ஒருத்தி?” என்று மெதுவாக பிரகாஷிடம் சண்டையிட ஆரம்பித்தவள் இதுவெல்லாம் கதைக்க்காகாது என்று விரைவில் ஈரோடு கிளம்பி விட்டாள். அவளுக்கு என்று சொந்தத்தில் எடுத்துச் சொல்ல யாருமில்லாமலும் போய் விட்டது! அவள் அப்பா குடும்ப விசயத்தில் பூஜ்ஜியம். மகள் என்ன சொல்கிறாளோ அதற்கு தலையாட்டுபவர். ”கிடக்குது விடும்மா! நீ ஏன் சங்கடப்பட்டுட்டு அந்த வீட்டுல கிடக்கணும்? பொண்டாட்டியோட அருமை தெரிஞ்சா மாப்பிள்ளை தன்னப்போல நம்ம வீடு வருவாப்ல! சின்ன வயசு தான.. சம்மந்திக ரெண்டும் புத்தி சொன்னா நேரா வந்துடுவாப்ல! இங்கியே துணிக்கடை ஒன்னு போட்டுக் குடுத்தாப் போச்சு. இல்லீன்னா நம்ம பங்க்கை பார்த்துக்கட்டும்!”

வாழ்க்கையை அவரவர் போக்கிலேயே வாழப்பழகிக் கொள்வதால் வரும் துன்பங்கள் பல நேரங்களில் குடும்பப் பிரச்சனைகளுக்கு காரணங்களாகி விடுகின்றன. நம்பி வந்த பெண் புரிந்து கொள்ளாமல்

தாய் வீட்டுக்கு பொட்டி தூக்கிச் சென்றதும் ஆண் ஆடிப்போய் விடுகிறான். அவனுக்கு தன் மீதே எரிச்சலும் பயமும் தோன்றி விடுகிறது! மனைவியை பூ போல வைத்துக் கொள்ளத்தான் எல்லோரும் இங்கு ஆசைப்படுகிறார்கள். சம்பாதிப்பிற்கான அலைக்கழிப்பில் பூ மாதிரிதான் வீட்டில் இருக்கிறாள் என்று நம்பிக் கொள்கிறார்கள். பூ புயலாகும் போது பேச்சு தடித்து சண்டையாகி விடுகிறது சில சமயங்களில். பிரகாஷ் மகாலட்சுமி கிளம்பும் போது "சாரி செல்லம், நீ போயிட்டா நான் என்ன ஆவேன்? யோசிச்சு பாரேண்டா" என்று நிறுத்தி கொஞ்சவில்லை. தோன்றியது உண்மைதான் என்றாலும் அதைச் செயலில் காட்ட  தயக்கம் வந்து விட்டது. ஆனால் அப்படியெல்லாம் சொல்வான் என்று மகாலட்சுமி எதிர்பார்த்தாள். அதற்கான அறிகுறிகளே அவன் முகத்தில் இல்லாதது கண்டு அதிக வருத்தமுடன் கிளம்பி விட்டாள்.

பிரகாஷிற்கு குடிப்பழக்கம் கிடையாது. அது ஏன் மற்ற கெட்ட பழக்கங்களும் கிடையாது. ஆனால் குடியை அவன்  சீக்கிரமே  தேடிக் கொண்டான். முதலில் வீட்டில் தான் இரவில் ஆரம்பித்தான். ஆரம்பித்த அன்றே மகாலட்சுமியை அலைபேசியில் அழைத்து, "ஏண்டி என்னை விட்டுட்டு போனே?" என்றான். அவள் எதுவும் பேசவில்லை. "சாரிடி! இனிமேல் நீ ஆசைப்படற மாதிரியே நடந்துக்கறேன் காத்தால கிளம்பி வாடி மகா! நீ இல்லீன்னா என்னால எதுலயும் கவனமா இருக்க முடியலடி! மகா! எதுனா பேசுடி!" என்றான்.

"போதையில எல்லாரும் நல்லாத்தான் பேசுவாங்க! எங்கப்பா கூட போதையில தங்கமா பேசுவாரு! காத்தால எல்லாத்தையும் மறந்துடுவாரு! இப்ப குடிக்க வேற ஆரம்பிச்சுட்டீங்களா? அதான் போனை போட்டு வாடி போடின்னு பேசுறீங்களா?"

"உன்னால தாண்டி குடிச்சேன். அதேன் புரியமாட்டீங்குது உனக்கு? நீ போய் ரெண்டு மாசம் ஆச்சு தெரியுமா? ஒரு போன் போட்டு பேசுறதுக்கு என்னடி வந்துச்சு உனக்கு? நான் என்ன உனக்கு எதிரியாடி?'

"ஏன் நீங்க பேசலாம்ல! இப்ப உள்ளுக்குள்ள இன்னொரு ஆள் போனதிம் தோணிடுச்சா பொண்டாட்டி நெனப்பு? அதான் அந்த அம்சவேணி இருக்காள்ல உங்களுக்கு! போயி அவளை கொஞ்ச வேண்டிது தான?"

"மகா!"

"என்ன இவளுக்கு எப்படி தெரியுமுன்னு பாக்கீங்களா?"

“மகா ப்ளீஸ்டி! நீ என் பொண்டாட்டிடி! இப்படி அசிங்கமா பேசாதேடி… நீ எப்படி வேணாலும் ஒரு விசயத்தை தெரிஞ்சிருக்கலாம்டி! யாரோ சொன்னாங்கன்னு நீயே என்னை தப்பா பேசினா என்னடி வாழ்க்கை இது? எதுக்குடி நீ படிச்சே? அதனால என்ன புண்ணியம்? கோபம் வருதுடி உன்மேல நான் போனை வச்சுடறேன்”

“பேசாம என்னை டைவர்ஸ் பண்ணிட்டு அவளை கட்டிக்குங்க” என்ற போது பிரகாஷ் போனை வைத்திருந்தான். அதன்பின் அவள் சொன்ன வார்த்தைகள் இவன் காதில் கேட்டுக்கொண்டே இருந்தது!

oooooo

“சார் உங்களுக்கு ஏற்கனவே எச்சா இருக்கும் போல, எதுக்குங்க சார் மறுபடியும் ஒரு கோட்டர் வாங்கறீங்க?” சிறுவலூர் டாஸ்மார்க் கடை சிப்பந்தி முருகன் பிரகாஷிடம் சொல்லிக் கொண்டிருந்தார்.

‘எச்சல்லாம் ஒன்னுமில்லீங்க! அரை கட்டிங் மட்டும் ஊத்திட்டு வீடு போயிடறேன்.”

“வண்டில வந்தீங்களா? இப்ப நீங்க சீனாபுரம் போறதே சிரம்மாட்ட தெரியுதுங்ளே! பேசாம வாங்கீட்டு வீடு போயி சாப்டுட்டு படுத்துக்கங்க சார்” முருகன் அவர் கேட்ட சரக்கை கொடுத்து விட்டு அடுத்த ஆளை கவனிக்க ஆரம்பித்தார். பிரகாஷ் சாக்னா கடை சாத்தியிருப்பதை கண்டு பாட்டிலை பாக்கெட்டில் திணித்துக் கொண்டே வெளியேறினான். பெட்ரோல் பங்க் அருகே நின்றிருந்த தன் பஜாஜ் டிஸ்கவர் வண்டிக்கு செல்கையில் அருகருகே நீல வர்ணத்தில் இரண்டு வண்டிகள் நின்றிருக்கவே எது தன் வண்டி என்று குழம்பினான். மகா என்று முகப்பு விளக்கருகே டூமில் இருக்கிறதா என்று உற்றுப்பார்த்து உறுதி செய்து விட்டு தன் வண்டியை சாவி போட்டு கிளப்பினான். மதிய வெய்யிலில் போதை இப்போதே கணக்காய் தான் இருந்தது. சீனாபுரம் நோக்கி கிளம்பியவன் அரசாங்க மருத்துவமனை தாண்டியதும் சாலையோரத்தில் வண்டியை நிப்பாட்டி விட்டு யூரின் போக குழிக்குள் இறங்கினான். வெகு நேரமாய் அடக்கி வைத்திருந்து இப்போது வெடித்து விடும் அளவில் அவசரமாய் இருந்தது. பாக்கெட்டிலிருந்து கோட்டர் பாட்டிலை எடுத்து மெட்டு திருகி கொஞ்சம் வாயில் கவிழ்த்துக் கொண்டு மூடி திருகி பாக்கெட்டில் வைத்துக் கொண்டவன் சாலையில் வண்டிச்சப்தமே இல்லை என்ற போது பேண்ட் ஜிப்பில் கைவைத்து இழுத்து இறக்கி விட்டு யூரின் பெய்தான். யூரின் பெய்தவன் ஜிப்பை இழுத்து விட்டு திரும்ப எத்தனிக்கையில் பொத்தென கீழே

குழிக்குள் விழுந்து அப்படியே எழ முடியாமல் படுத்துக்கிடந்தான்.

சாலையில் விரைவாக பயணிகளை கோபி சென்று சேர்த்து விடும் அவசரத்தில் ஒரு தனியார் பேருந்து தலைதெறிக்க வந்து கொண்டிருந்த்து. எதிர்க்கே மணல் லோடு ஏற்றிய இரண்டு டிப்பர் லாரிகள் வேறு தலை தெறிக்க வேகமாய் வந்து கொண்டிருந்தது! டிப்பர் லாரிக்காரர்கள் ஒருவரை ஒருவர் முந்த அவசரப்படுகையில் டமால் என்ற சப்தம் சிறுவலூருக்கே கேட்டது! ஜனம் கூடிய போது பிரகாஷின் டிஸ்கவர் பைக்கின் சேதாரம் பைசாவுக்கு பிரயோசனம் இல்லாமலிருந்தது. பேருந்தில் வந்தவர்களுக்கு சின்னச் சின்ன மண்டையடிகள் தான். டிப்பர் லாரிக்கும் சேதாரம் அதிகமில்லை. ஆனால் டிஸ்கவரின் சேதாரம் ஆள் உயிரோடு இருப்பானா என்ற சந்தேகத்தை கொடுத்துவிட்டது ஜனத்திற்கு. ஆனால் ஆளை காணோமே!

லாரி மோதி தூக்கி வீசிய ஆள் எங்கே என்று சிலர் குழிக்குள் இறங்கினார்கள். குழியிலிருந்து எட்டிப்பார்க்கையில் கீழே வேலிமுள்ளின் அருகே ஆள் கிடப்பது தெரிய கீழே இறங்கி உயிர் இருப்பதை கண்டு நான்கு பேர் அவனைத் தூக்கியபடி மேடேறி வந்தார்கள். பிரகாஷின் வலது கால் மட்டும் திரும்பிய நிலையில் தொங்கிக் கொண்டிருந்தது. நெற்றியில் ரத்தம் வடிந்திருந்தது. பக்கத்திலேயே மருத்துவமனை என்பதால் அவனை காப்பாற்ற தூக்கி ஓடினார்கள். அவசர சிகிச்சை என்று அவன் காயங்களுக்கு மருந்து போட்டு ஊசி போடவில்லை. பாக்கெட்டில் இருந்த கோட்டர் பாட்டிலை காட்டினார்கள். கால் உடைந்திருக்கிறது ஈரோடு கொண்டு போயிருங்க! என்றார்கள். காரெடுத்து அவனை எல்.கே.எம். கூட்டி வந்தவர் கொளப்பளூர் முருகேசகவுண்டர். விபத்து என்று வந்து பார்க்கையில் அவனை இன்னாரென அவருக்கு மட்டுமே அடையாளம் தெரிந்திருந்தது. அதும் அடையாளம் மட்டுமே. இவன் வீட்டில் ஒரு நாள் இரவில் சாப்பிட்டிருக்கிறார் ஊர்க்கார்களோடு. அதிக பழக்கமும் இல்லை. அவர் அலைபேசி வசதிகளையும் பயன்படுத்திக் கொள்பவரல்ல! நேராக ஈரோட்டிலிருந்து கிளம்பியவர் கொளப்பலூர் வந்து சேர்ந்த்தும் சுப்பிரமணி வீடு தான் சென்றார்.

000000

சுப்பிரமணி கொளப்பலூர்க்காரன். கோபியில் டூவீலர் வொர்க்ஷாப் வைத்திருப்பவனுக்கு ஒரே கவலை என்னவென்றால் தன் அக்காவிற்கு மாப்பிள்ளை சரியாய் அமையவே மாட்டேங்குதே என்பது தான். அப்படி

எல்லா பொறுத்தமும் அமைந்த ஜாதகம் கிடைத்து விட்டால் மாப்பிள்ளை வீட்டார் அதிகப்படியான வரதட்சணை கேட்பதால் இவர்களால் முடியாமல் ஒதுக்கி விட வேண்டி இருந்தது. சிலர் பெண்ணுக்கு சிம்மராசி என்று ஒதுக்கினார்கள். இப்படி பல ஜாதகங்கள் அக்காவிற்கு வந்தும் ஒன்றும் கூடாமல் போய்க் கொண்டிருப்பது ஏன் என்பது தான் இவனுக்கு புரியவில்லை. இன்றுகூட அப்பா அவனை சீனாபுரம் அனுப்பி வைத்திருக்கிறார். அவர் வேறொரு ஜாதகம் கிடைத்ததால் அதை தூக்கிக் கொண்டு ஆதியூர் ஜோசியரிடம் பொருத்தம் பார்க்க கிளம்பிவிட்டார் அம்மாவுடன். அக்கா அம்சவேணி கொளப்பலூரில் ஒரு செல்போன் ரீச்சார்ஜ் கடைக்கு வேலைக்கு சென்று கொண்டிருக்கிறாள். கடை வீட்டுக்குப் பக்கம் தான். தெரிந்தவர் கடை என்பதால் மூன்று வருடங்களாக வீட்டில் சும்மா இருக்கப் பிடிக்காமல் போய் வந்து கொண்டிருந்தாள்.

சுப்பிரமணி சீனாபுரத்தில் வந்து இறங்கும் போது காலை ஏழரை மணிதான் ஆகியிருந்தது. மாப்பிள்ளை பெருந்துறையில் துணிக்கடை வைத்திருக்கிறார் என்று தான் அப்பா சொல்லி அனுப்பினார். ஒருவேளை சீக்கிரம் வீட்டில் போய் பார்த்து அம்மிணியின் ஜாதகத்தை கொடுத்து விடுவது மரியாதை என்பதால் காலையிலேயே வந்து சேர்ந்து விட்டான். அருகிலிருந்த மளிகை கடைகளில் ஒன்றில் போய் சிகரெட் ஒன்றை வாங்கிப் பற்ற வைத்துக் கொண்டவன் மளிகைக் கடைக்காரரிடமே சுப்பிரமணி வீட்டை விசாரித்தான். அவரோ மொட்டைக்கட்டையாய் விசாரித்தால் எப்படி? என்றவர், என்ன வேலை? என்ன சாதி? என்று எல்லாம் கேட்டுத்தான் இவனுக்கு வழியைச் சொன்னார். சுப்பிரமணியின் வீடு ஊரின் வடக்கு கடைசியில் இருந்தது. தோட்ட வீடு என்றார்கள் சுப்பிரமணி வீட்டை. சொன்னது போல் தோட்டத்தினுள் தான் வீடும் இருந்தது. இருபது தென்னை மரங்கள் வீட்டின் முன்புறம் நின்றிருந்தன. அதற்கு சற்று தள்ளி கிழக்கு பக்கத்தில் கிணறு இருந்தது. கிணற்றின் அருகே எதையோ கவனித்து வாலை ஆட்டிக் கொண்டிருந்த நாய் இவனைப் பார்த்ததும் உறுமிக் கொண்டு பாய்ந்து வந்தது. இவன் மிரண்டு அப்படியே ஆணியடித்தது போல நின்றான். கிட்டே குலைத்தபடி வந்த நாய் இவனைச் சுற்றிலும் வந்து முகர்ந்து பார்த்து விட்டு வாலை ஆட்டிக் கொண்டு வீட்டு வாயிலைப் பார்த்து குரைத்தது.

நாயின் குரைப்பொலி கேட்டு பிரகாஷ் தான் வெளியே வந்தான். வந்தவன் இவனை யாரென அடையாளம் தெரியாமல் பார்த்தான். இவனாக தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு கை கொடுத்தான்.

கெட்டிச் செவியூர் மாமன் கிட்டதான் அந்தப்பக்கம் பொண்ணிருந்தா விசாரிக்கச் சொல்லியிருந்தேன். அவரு நேத்தே யாராச்சிம் கொளப்பலூர்ல இருந்து வருவாங்கன்னு போனு பண்ணியிருந்தார்.. என்று பேசிக்கொண்டே இவனை வீட்டினுள் கூட்டிப் போய் அமர வைத்தான். சுப்பிரமணிக்கு முதலில் வீட்டைப் பார்த்ததுமே இதெல்லாம் தன் அக்காவுக்கு அமைய வாய்ப்பே இல்லை என்று முடிவு தெரிந்து விட்டான். அப்படியே அமைந்தாலும் வழக்கம் போல வரதட்சணையில் போய் முடிந்து விடுமென முடிவே செய்து விட்டான். சுப்பிரமணிக்கு வணக்கம் வைத்தபடி பிரகாஷின் அப்பா வந்தார். இவன் எழுந்து மரியாதையாக வணங்கி நின்றவனை அவரே அமரச் சொன்னபிறகு தான் அமர்ந்தான் ஷோபாவில். அவரின் விசாரிப்புகள் பயங்கரமாய் இருந்தன. ஒவ்வொன்றுக்கும் பொறுமையாய் பதில் சொன்னான். டூவீலர் வொர்க்ஷாப்பில் என்ன வருமானம் வந்துடும் தம்பி? என்று இறுதியாய் ஒரு கேள்வியில் நிறுத்தினார். தன் அக்காவின் ஜாதகத்தை மஞ்சள் பை ஒன்றில் வைத்து எடுத்து வந்திருந்தான் சுப்பிரமணி. வொர்க்ஷாப்பில் மூன்று ஆட்கள் போட்டு வேலை வாங்கி வருவதாகவும், இப்போதெல்லாம் வண்டிகள் பல நிற்க நேரமில்லாமல் வந்து கொண்டே இருப்பதையும் சொன்னான். அக்கா வேலைக்கு சென்று வருவதை மட்டும் மறைத்து விட்டான். வீட்டில் படிப்பு முடித்து இருப்பதாய் சொல்லிவிட்டு அவர் முகம் பார்த்தான். சமயத்தில் சுடிதார் அணிந்த பெண் ஒருத்தி புன்னகையோடு இவனுக்கு தட்டில் காபி கொண்டுவந்து நீட்டினாள். அண்ணா எடுத்துக்க! என்று சொல்லி பிரகாஷிடம் நீட்டுகையில் தான் அவன் தங்கை என்று இவன் உணர்ந்தான்.

“இவள் என் தங்கச்சி கீதா. இப்பத்தான் காலேஜ் போயிட்டு இருக்கா ஈரோடு” என்று சுப்பிரமணி அறிமுகப்படுத்தவும் காபி தம்ளரோடு எழுந்து வணக்கம்ங்க! என்றான் சுப்பிரமணி. அவளோ சிரிக்கத் துவங்கினாள்.

“என்னாண்ணா எனக்கு எந்திரிச்செல்லாம் வணக்கம் வைக்கிறாப்ல!” என்றவள் மறுபடியும் சிரிக்கவே இவன் அசடு வழிந்தான். இருந்தும் அவள் சிரிப்பு அவளது அழகை இவனுக்கு மேலும் தூக்கியே காட்டிற்று. உடனே இவன் அக்காவிற்கு திருமணம் ஆகி விட்டது போலவும், அடுத்து நம்ம கல்யாணம் தான் என்று கீதாவே இவனிடன் காதில் சொல்வது போலவும் நினைத்து மகிழ்ந்தான். பார்த்த முதல் பார்வையிலேயே ஒரு பெண் எப்படி இப்படி மனதில் வந்து ஒட்டிக் கொள்கிறாள்? என்று ஆச்சரியப்பட்டான்.

“அண்ணி போட்டோ கொண்டு வந்திருக்கீங்களா/ நான் தான் முதல்ல பார்க்கணும்.” என்றாள் கீதா இவனிடம். பெண்களிடம் சகஜமாய் பேசியே அறியாத சுப்பிரமணி “கொண்டு வந்திருக்கேங்க” என்று முனகிக் கொண்டே மஞ்சள் பையில் கைவிட்டு ஜாதகத்தை வெளியில் எடுத்தான். அதை விரித்து அக்காவின் புகைப்படத்தை எடுத்தவன் கீதாவிடம் நீட்டினான். பிரகாஷ் இவனிடம் “கண்டுக்காதீங்க.. இவ எப்பவும் இப்படித்தான்” என்றான்.

“அண்ணா உனக்கு ஏத்த மாதிரி புட்டுன்னு முகத்தை வச்சிட்டு இருக்காங்க! நீ எப்பயும் இப்படித்தான இருப்பே!” என்றவள் பிரகாஷின் அருகில் அமர்ந்து அவனுக்கும், பார்த்துக்கோ! என்று காட்டினாள். அண்ணனின் பார்வையிலேயே கண்டு கொண்டவள் இவனிடம், “எங்கண்ணனுக்கும் உங்க அக்காவை பிடிச்சுப் போச்சு!” என்றாள். அவள் கண்ணை இவனைப் பார்த்து ஒருமுறை சிமிட்டிய மாதிரி தெரிந்தது இவனுக்கு.

“சரி போயி ரெண்டு பேரும் நம்ம முத்தாங்கிட்ட ஜாதகத்தை காட்டிட்டு வந்துடுங்க! இன்னிக்கி புதன்கிழமை நல்ல நாள் வேற!” என்றார் பிரகாஷின் அப்பா!

“அண்ணா நானும் வர்றேன்” என்றாள் கீதாவும்.

“நீ எதுக்கும்மா? அவிங்க ரெண்டு பேரும் போயி பார்த்துட்டு வரட்டும்” என்ற அப்பாவை முறைத்தாள் கீதா.

“இவத்திக்கி இருக்கிற முத்தான் வீட்டுக்கு அண்ணன்கூட போனா தப்பா? அம்மாக்கு தான் உடம்புக்கு முடியல. ஜாதகம் பார்க்க கூட ஒரு பொண்ணு போகணும் தெரியுமா” என்று வாயடிக்க ஆரம்பித்தவளை பிரகாஷே கும்பிட்டு இழுத்துக் கொண்டு வந்தான் முத்தான் வீட்டுக்கு. மூன்று பேரும் பக்கம் என்பதால் நடந்தே வந்திருந்தார்கள். முத்தான் இவர்களுக்கு தன் முன்னால் பாய் விரித்து அமர வைத்து இரண்டு ஜாதகங்களையும் விரித்து விரித்துப் பார்த்து தன் குறிப்பேட்டில் அரைமணி நேரம் வாய் திறக்காமல் குறித்துக் கொண்டிருந்தான். அவ்வளவு நேரம் குறித்து கால்மணி நேரமே முத்தான் பேசினான். இந்த ஜாதகம் சரியா வரும்னு தோணலைங்க! மூவருக்குமே முகம் வாடிப் போயிற்று. சுப்பிரமணி தன் அக்காவுக்காக இப்போது தான் முதன் முதலாக மாப்பிள்ளை பார்க்க ஜாதகத்தோடு கிளம்பியிருந்தான். அது வெற்றியானால் வீட்டில் பந்தா பண்ணலாம் என்றெல்லாம் காலையில் கிளம்பும் போதே நினைத்திருந்தான். தவிர கீதா வேறு உடனடியாக மனதில் வந்து உட்கார்ந்து இம்சிக்கத் துவங்கி விட்டபடியால்

ஜோதிடனின் பதில் இவன் முகத்தில் அடித்தாற்போல் ஆகி விட்டது. கீதாவும் தன்னைப்போலவே மனதில் நினைத்திருப்பாளோ என்று எண்ணிக் கொண்டான். அவள் முகமும் ஏனோ சோபை இழந்திருந்தது. இந்த நேரம் வரை அவள் முகத்தில் இருந்த ஒளி காணாமல் போய் இருட்டடித்திருந்தது.

கீதா அண்ணனிடமும் இவனிடமும் கூட சொல்லிக் கொள்ளாமலே திடீரென எழுந்து கிளம்பி விட்டாள். சரி வாங்க! என்று பிரகாஷ் இவனைக் கூட்டிக் கொண்டு பேருந்து நிறுத்தம் வரை வந்தான். ”ஒன்னும் கவலைப்படாதீங்க சுப்பிரமணி! நான் வேற ரெண்டு ஜோசியக்காரங்க கிட்ட குடுத்து உறுதியா தெரிஞ்சிக்கிறேன். உங்க நெம்பர் குடுத்துட்டு போங்க! நாளைக்கு மாலைக்குள்ள கூப்பிடறேன். ஏனோ உங்க அக்காவை போட்டோல பார்த்த அடுத்த நிமிசமே பிடிச்சுப் போச்சு எனக்கு. என் தங்கச்சிக்கும் பிடிச்சிருந்ததால தான் அவளும் ஜாதகம் பார்க்க கூட வந்தா!” என்றவனிடம் கைகொடுத்து விடைபெற்றான் சுப்பிரமணி.

சுப்பிரமணி வீடு வந்த போது அப்பா இருந்தார். இவனிடம் என்ன ஆச்சு என்று கூட இவன் அம்மாவும் கேட்கவில்லை! இவனும் ஒன்றும் அவர்களிடம் சொல்லிக் கொள்ளாமலே கோபி கிளம்புவதற்கான ஆயத்தத்தில் இருந்தான். கடைசியாக கிளம்புகையில் அப்பாவிடம் வந்து நின்றவன், நீங்க போன காரியம் என்னாச்சு? என்றான்.

“நீ போன இடம் ரொம்ப பெரிய இடமுன்னு ஆதியூர் ஜோசியகாரன் சொன்னான்பா! அவங்க கேக்குற நகையெல்லாம் நம்ம கொடுக்க முடியாதுன்னான். ஆனா அதே ஊர்ல செந்தில் ஜாதகம் நம்ம அம்சாவுக்கு ரொம்ப பொருத்தமா இருக்குது. அவுங்க வீட்டுல பேசிட்டோம். நாளைக்கு காலையில மாப்பிள்ளை வீடு பார்க்க சீனாபுரம் போறோம்” என்றார் அப்பா. மேற்கொண்டு சுப்பிரமணியும் எதுவும் பேசாமல் கிளம்பி விட்டான்.

0000

சீனாபுரத்தில் செந்தில் வீடு கிழக்கு பக்கமாய் இருந்தது. அதுவும் பிரகாஷின் வீட்டைத் தாண்டித்தான் செல்ல வேண்டி இருந்தது. செந்தில் வீடு இவர்கள் வீட்டைப் போன்றே அளவாய் இருந்தது. செந்திலுக்கு அப்பா இல்லை. அம்மா மட்டும் தான். வீட்டில் செந்திலும் அவன் மாமா அத்தை என்று சில உறவினர்கள் மட்டுமே இவர்களை வரவேற்றார்கள். இவர்களும் அப்படியொன்றும் சொந்த பந்தங்களின் கூட்டத்தோடு செல்லவில்லை. இவன் சித்தப்பா சித்தி மட்டுமே கூட

வந்திருந்தார்கள். செந்தில் பெருந்துறை பனியன் கம்பெனியில் கட்டிங் மாஸ்டராய் போய் வந்து கொண்டிருப்பதாய் அவன் மாமா சொன்னார். செந்தில் ஒல்லிப்பிச்சானாக இருந்தான். வந்தவர்களுக்கு அவனே பலகாரங்களை தட்டில் வைத்து கொண்டு வந்து டேபிளில் வைத்தான். சுப்பிரமணியைத் தவிர இவன் வீட்டில் செந்திலை அனைவருக்கும் பிடித்துவிட்டது. ஜாதகமும் எட்டு பொருத்தம் கூடி வந்தது அவர்களுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது.

அப்போது தான் சுப்பிரமணிக்கு அலைப்பேசி அழைப்பு வந்தது. புதிய எண்ணாக இருக்கவே யார் எனத் தெரியாமல் எடுத்து ”சொல்லுங்க சுப்பிரமணி பேசுறேன்!” என்றான்.

“நான் பிரகாஷ் பேசுறேன்ங்க! சீனாபுரத்துல இருந்து”

‘சொல்லுங்க பிரகாஷ். நான் உங்க ஊர்ல தான் இருக்கேன் இப்போ”

“எங்க ஊர்லயா? அதிசயமா இருக்கே! அப்ப வீட்டுக்கு வாங்க பேசிக்கலாம்”

“இங்க உங்க ஊர்ல செந்தில் அவிங்க வீட்டுக்கு தான் நாங்க வீட்டுல இருந்து வந்திருக்கோம்”

“கொஞ்சம் தெளிவா சொல்லுங்க சுப்பிரமணி, எந்த செந்தில் வீடு?”

“வீட்டுல உங்களை பார்க்க என்னை தாட்டி விட்டாரு நேத்து எங்கப்பா. அவரு இன்னம் ரெண்டு மூனு ஜாதகத்தோட ஜோசியக்காரன் வீடு போய் பார்த்ததுல உங்க ஊர்ல கம்பெனிக்கு கட்டிங் வெட்ட போயிட்டு இருக்கிற செந்தில் ஜாதகம் அக்காவுக்கு சூட் ஆகுதுன்னு நேத்தே பேசிட்டாரு. அதான் இன்னிக்கு அவுங்க வீட்டுக்கு வந்திருக்கோம்”

“என்னங்க சுப்பிரமணி நான் தான் நாளைக்கு கண்டிப்பா கூப்பிடறேன்னு உங்ககிட்ட சொன்னேனே! நான் நேத்தே ரெண்டு மூனு இடத்துல ஜாதகத்தை கொடுத்து பார்த்துட்டேன். ஏழு பொருத்தம் இருக்குது கட்டிக்கலாம்னு சொல்லிட்டாங்க! அதனால ரொம்ப சந்தோசமா இருந்தேன். இப்ப செந்தில்ங்கறீங்க! செந்திலைப்பத்தி விசாரிச்சீங்களா? அவன்… சரி வேண்டாம் நீங்க அப்புறம் தனியா பேசுங்க!”

“அது வந்துங்க பிரகாஷ்.. எங்கப்பா நேத்தே முடிவு பண்ணிட்டார் போல. நீங்க பெரிய இடம். கேக்குற நகையெல்லாம் எங்களால போட முடியாதுங்க! நான் விருப்பப்பட்டு என்ன பண்ணுறது? சொல்லுங்க!

அதனால அப்பா தகுந்த இடமா இருக்கும்னு நேத்தே முடிவு பண்ணியிருக்கார்.”

“அட என்னங்க சுப்பிரமணி பேசுறீங்க நீங்க? பொண்ணு கிடைக்குறதே இந்தக் காலத்துல பெரிய விசயம் தெரியுமா! அதும் ஜாதகம் பொருத்தமா அமையுறது அதைவிட பெரிய விசயம். இதுல அது வேணும் இது வேணும்னு கேட்டு அமைஞ்ச இடத்தையும் நழுவ விட யாரு தயாரா இருக்காங்க? ஒன்னு தெரியுமா உங்களுக்கு? எனக்கு இருபது ஜாதகம் பார்த்திருக்காங்க வீட்டுல! எனக்கு செவ்வாய் இருக்கிறதால பத்துக்கும் மேல பொருத்தமே இல்லை. அமைஞ்சதும் சிலது வேற விசயங்களால சுத்தப்படலை. ஒரு பொண்ணு தஞ்சாவூர். அது அமைஞ்சிருக்கு ஆனா போக வர சிரமம்! ஒரு பொண்ணு போட்டோவை கீதா தான் பார்த்துட்டு ஒதுக்கிட்டா! நான் பார்த்ததே உங்க அக்கா போட்டோ ஒன்னு தான். அதும் என் தங்கச்சிக்கும் பிடிச்சிருந்துது. எனக்கும் தான். போக கொளப்பலூர் இங்கிருந்து ஒரே அமுத்து அமுத்தினா நிக்கலாம். பக்கம் வேற! நீங்க சொல்ற செந்திலுக்கு குடி ஜாஸ்த்திங்க சுப்பிரமணி! எனக்கு இல்லாமப் போச்சேங்கறதால சொல்லலை. நான் உங்களை கூப்பிட்டதே சந்தோசத்துல! உங்களால உங்க அக்காவுக்கு என்ன செய்ய முடியுமோ அதை செய்ய சொல்லத்தான். ஆனா.. இருங்க என் தங்கச்சி எதோ பேசணுங்றா!”

“ஹலோ! இப்ப எங்க இருக்கீங்க நீங்க?”

“சொல்லுங்க கீதா! நான் செந்தில் வீட்டுக்கு வெளிய நின்னுட்டு பேசிட்டு இருக்கேன்”

“கிளம்புறப்ப நீங்க எங்க வீட்டுக்கு வந்துட்டு போக முடியுமா?”

“இல்ல.. என் சித்தப்பா சித்தின்னு வந்திருக்கேன்”

“வர இஷ்டமில்லைன்னா விடுங்க” போனை கட் செய்து பிரகாஷிடம் கொடுத்தாள் கீதா.

சுப்பிரமணிக்கு அவள் திடீரென போனை கட் செய்தது முகத்தில் அடித்தது மாதிரியே இருந்தது. கீதாவை பார்க்க வேண்டும் என்று அவன் மனது நினைப்பதெல்லாம் சரிதான். ஆனால் எந்த முகத்தை வைத்துக் கொண்டு மீண்டும் அந்த வீட்டு படி ஏறுவது? செந்தில் வீட்டிலிருந்து இவனை இவன் சித்தப்பா கூப்பிட்டார். இவன் வாசலில் இருந்து வீட்டுக்குள் சென்றான்.

“என்னப்பா போனு உனக்கு வந்த இடத்துலயும்? அதைத்தான் சித்த நேரம் ஆப் பண்ணி போடேன்! இப்ப இருபது நாள்லயே கல்யாணத்தை

வெச்சுக்கலாம்னு பேசியிருக்கோம். பொண்ணுக்கு நீங்க உங்களால முடிஞ்சதை செய்யுங்கன்னு மாப்பிள்ளையே சொல்லிட்டாரு! நாம என்ன பிள்ளைய அவரு சொன்னாருங்கறதுக்காக சும்மாவா தாட்டி விடப்போறோம்! கல்யாணத்தை சிம்பிளா இங்க மலைக்கோவில்ல வச்சிக்கலாம்னு சொல்றாங்க. நீ என்ன சொல்றே? உங்க அப்பா சரின்னுட்டாரு" என்றார் சித்தப்பா இவனிடம்.

"அது சரியா வருமுங்ளா சித்தப்பா? பொண்ணு ஊர்ல தான் மண்டபம் புடிச்சு வெக்கிறது வழக்கம்"

"அது சரிதான். ஆனா கல்யாணத்தை சிம்ப்பிளா வெச்சிக்கத்தான் இப்படி முடிவு. நீ வேணா ரிசப்சன்னு அக்காவுக்கு பெருசா பண்ணணும்னு நினைச்சா கொளப்பலூர்ல வெச்சிக்க. அதுக்கு யாரு தடை சொல்லப் போறாங்க? ஆனா இங்க கோவில்ல செஞ்சுட்டம்னா இவங்க உள்ளூர் ஆட்களுக்கு சிரமமில்லீன்னு சொல்றாங்க. ஒத்துத்தான் போவமே!" என்று சித்தப்பா பேசுகையில் இவனால் மறுக்க முடியாமல் இருந்தது. தவிர கீதா வேறு அவன் மனதில் புகுந்து வருவீங்ளா? மாட்டீங்ளா? என்று கேட்டுக் கொண்டேயிருந்தாள். தவிர மாப்பிள்ளை ஊரில் கல்யாணம் என்பதே வழக்கமில்லாத வழக்கமாய் இருந்தது. இத்தனை நாள் கிடைக்காத மாப்பிள்ளை அக்காவுக்கு கிடைத்து விட்டார் என்ற சந்தோசத்தில் அம்மாவும் அப்பாவும் எல்லாவற்றுக்கும் தலையாட்டி ஒப்புக்கொண்டது தான் கடைசியாய் புரிந்தது. அவர்கள் வணக்கம் கூறி விடைபெற்று கிளம்பினார்கள்.

சுப்பிரமணி அவர்களை பஸ் ஏற்றி அனுப்பி விட்டு இவன் மட்டும் தனியே பிரகாஷின் வீடு வந்தான். இங்கு எந்த வேலையும் தனக்கு இல்லை என்றாலும் கீதாவின் குரலில் இருந்த ஏதோ ஒன்று அவனை இழுத்து வந்து விட்டது. வீட்டு மாடியில் நின்றிருந்தவள் இவன் வருவதை கண்டதும் கீழிறங்கி இவனை வரவேற்க வெளி வாசலுக்கு வந்தாள். நேற்று குரைத்தபடி ஓடி வந்த நாய் இன்று தென்னை மர நிழலில் சும்மா பார்த்தபடி படுத்திருந்தது.

"வராம போயிருந்தீங்கன்னா அப்புறமில்ல தெரிஞ்சிருக்கும்.. வாங்க" என்றவள் வீட்டினுள் அழைத்துப்போய் அமர வைத்தாள். இவன் ஏதோ விஐபி போலவும் அவள் வாசல் வரை வந்து வரவேற்பது போலவும் எண்ணி தன்னையே நொந்து கொண்டான் சுப்பிரமணி. வீட்டினுள் ஆள் அரவமே இல்லாமலிருந்தது. பிரகாஷ் பெருந்துறை போயிருக்கலாம் என நினைத்தான். நேற்று அருகில் அமர்ந்து ஆயிரம் கேள்விகள் கேட்ட இவள் அப்பா என்னவானார்?

“ஏன் திடீருன்னு போனை கட் பண்ணிட்டீங்க கீதா?”

“சங்கடப்பட்டீங்களா? பின்ன வாங்கன்னு சொன்னா சரின்னு சொல்றதை விட்டுட்டு சித்தப்பா சித்தின்னு மழுப்பினா என்ன பண்ணுறது? கோபம் வந்திடுச்சு எனக்கு! ஆனா அதுக்காக சாரி எல்லாம் கேக்க மாட்டேன். என்ன சாப்பிடறீங்க?”

“எனக்கு இப்ப எதும் வேண்டாங்க கீதா”

“அட கோவிச்சுக்காதீங்க! என்னாச்சு உங்க அக்காவை எங்கண்ணனுக்கு கட்டிக்குடுக்க இஷ்டமில்லையா உங்களுக்கு?”

“நானே எதிர்பார்க்காத காரியமெல்லாம் நடந்துட்டு இருக்குங்க கீதா. நல்ல காரியம் நடக்குறப்ப இடைஞ்சலா ஒரு வார்த்தை பேசக்கூடாதுன்னு விட்டுட்டேன்”

‘”அப்ப உங்க தங்கச்சி வாழ்க்கை பெரியவங்க பேசி முடிவு பண்றதால தான் நல்லா இருக்கும்னு நீங்க நினைக்கறீங்க இல்லியா. எங்கண்ணன், செந்திலை குடிகாரன்னு சொன்னதை காதுல வாங்கிட்டு பேசுறீங்க”

“யாருங்க இப்ப குடிக்காம இருக்காங்க? அதெல்லாம் ஒரு தப்புன்னு பார்த்தா இங்க பெண்களுக்கு கல்யாணமுன்னு ஒன்னு நடக்குமாங்கறதே சந்தேகம் தான். குடிக்காம இருக்கிறவங்க வெளிப்பார்வைக்கு நல்லவங்களா தெரிவாங்க. ஆனா வேற தப்பு இருந்தா அது கல்யாணத்துக்கு பின்னால தெரிய வந்தா என்ன செய்யுறது?”

“சரி நீங்க குடிப்பீங்களா?”

“நான் வாரத்துல ஒரு நாள் குடிப்பேன்”

”அதை நான் வேண்டாமுன்னு சொன்னா நிறுத்திடுவீங்களா?”

“கண்டிப்பா!” என்றான் உடனேயே. இல்லை என்று மழுப்பினால் அப்போது போலவே கோபம் வந்து ஏதாவது சொல்லும் பெண்ணாக தெரிந்தாள் கீதா. அவள் நிஜமாகவே இவனைப்பார்த்து புன்னகை ஒன்றை வீசினாள். அது இவனுக்கு எக்காலத்துக்கும் போதுமானதாக இருந்தது. தவிர இதுவெல்லாம் புதிதாகவும் இருந்தது இவனுக்கு.

“ரொம்ப தேங்ஸ். உங்க போன் நெம்பரை எனக்கு குடுங்க” இவன் கொடுத்தான். தன் அலைபேசியில் பதிவு செய்தவள் இவனுக்கு கால் கொடுத்தாள்.

“என் பேரை பதிவு செஞ்சுக்கங்க. எப்போ கூப்பிட்டாலும் எடுக்கணும்.

நான் பண்ணுறப்ப ஹலோ யாருங்கன்னு ஒரு நாள் நீங்க கேட்டுட்டாலும் எனக்கு மசக் கோபம் வந்துடும். இப்பவே சொல்லிட்டேன்”

“ஏங்க அப்படி?”

“அது அப்படித்தான்” என்றாள் கீதா.

0000

எதிர்பார்த்த திருமண நாளும் சீக்கிரமே வந்து விட்டது. காலையில் முகூர்த்தம் என்கிற போது வழக்கமில்லாத வழக்கமாக பெண்வீட்டார் பெண்ணைக் கூட்டிக்கொண்டு மாப்பிள்ளை ஊர் வந்து சேர்ந்த போது மணி இரவு ஒன்பதை தொட்டிருந்தது. அவர்கள் ஒரு அரசாங்க பேருந்தை வாடகைக்கு எடுத்து வந்திருந்தார்கள். மாப்பிள்ளை வீட்டுக்கு நேராகச் செல்வதை விட அவர்கள் நிறுத்தத்திலேயே தங்கள் பேருந்தை கோவிலுக்கு அருகாமையில் நிறுத்தி விட்டு இரண்டு பேர் மட்டும் தகவலைச் சொல்ல மாப்பிள்ளை வீட்டுக்கு கிளம்பினார்கள்.

சுப்பிரமணி தன் சித்தப்பனுடன் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்றான். அங்கு வாசலில் பாய் போட்டு மாப்பிள்ளையின் உறவுக்காரர்கள் படுத்திருந்தார்கள். இன்னார் என்று சித்தப்பன் தான் விசயத்தை சொன்னார். அவர்கள் தடுமாறினார்கள். எங்கு தங்க வைப்பது என்பது அவர்களுக்கு பிரச்சனை. ஆனால் பேசுகையில் இரவு வந்து விடுவதாகத் தான் பேச்சு. அதற்கும் சம்மதம் சொன்ன ஆள் மட்டும் மிஸ்ஸிங். இனி விடிய விடிய பேருந்தில் வந்தவர்கள் எங்கு இந்த ஊரில் தங்குவது? சித்தப்பன் பெருந்துறையில் அறை எடுத்து தங்கும் யோசனை சொன்னார். சுப்பிரமணி இறுதியாய் கீதாவின் நெம்பரை எடுத்து அழைத்தான்.

“சொல்லுங்க! ஆச்சரியமா இருக்கு! நீங்க என்னை கூப்பிடறது?” என்றவளிடம் விசயத்தை சொன்னான் சுப்பிரமணி. இதோ அண்ணனிடம் பேசிவிட்டு உடனே கூப்பிடுவதாக கீதா சொன்னதும் தான் நிம்மதியானான். சொன்னது மாதிரி உடனே பிரகாஷ் தான் கூப்பிட்டான்.

“நம்ம வீடு இருக்கப்ப ஏங்க நீங்க தடுமாறோணும்?” என்றவன் சகல ஏற்பாடுகளையும் வீட்டின் மாடியில் செய்தான். ஐம்பது பேருக்கு உண்டான சமையலை உள்ளூர் ஆட்கள் வைத்து சிறப்பாக ஏற்பாடு செய்தான். விடியும் வரை நம்ம வீட்டில் தங்கிக் கொள்ளவேணும் என்ற அன்புக் கட்டளையையும் போட்டு விட்டான். ”இதான் நம்ம

அம்சவேணிக்கி மொதல்ல பார்த்த மாப்பிள்ளை.. சாதகம் கூடி வரலைன்னு ஊருக்குள்ளயே இவருதான் ஏற்பாடு செஞ்சவரு" என்று வந்த சனம் பேசிக் கொண்டது! பிரகாஷ் அம்சவேணியை பார்த்ததும் அசந்து தான் போனான். போட்டோவில் பார்த்ததை விட நேரில் விக்கிரகம் மாதிரி ஜொலித்தாள். இரவோடு இரவாக பேசி தாலி கட்டி விட வேண்டும் என்றெல்லாம் யோசித்து விடியும் வரை தவித்தான். இந்த நேரத்தில் கீதா சுப்பிரமணியை ஓரம் கட்டியிருந்தாள்.

"என்னை உங்களுக்கு பிடிக்குமா? பிடிக்காதா?"

"உங்களை பிடிக்கலைன்னு எந்த முட்டாளுங்க சொல்வான்?"

"உங்களை மொதல் வாட்டி பார்த்தப்பவே எனக்கு தோணிடுச்சுங்க!"

"என்னன்னு?"

"கட்டினா உங்களைத்தான் கட்டிக்கணும்னு"

"நான் சாதாரண மோட்டார் மெக்கானிக்குங்க கீதா"

"அப்ப இப்பத்தான என்னை புடிக்கும்னு சொன்னீங்க. இப்ப மாத்தி பேசுறீங்க பார்த்தீங்ளா"

"ஏங்க நீங்க எங்கே நான் எங்கே! ஆசை எல்லோருக்கும் வர்றது சகஜங்க"

"அப்ப நான் தூங்கப் போகவா? இதோட என்னை கூப்பிட மாட்டீங்க! உங்க அக்கா கல்யாணம் முடிஞ்சதும் நீ யாரோன்னு போயிடுவீங்க! அப்படித்தானே! அந்தப்பக்கம் பார்த்துட்டு இருந்தா நான் என்ன முடிவு பண்ணுறது? என்னை பாருங்க! இன்னிக்கி எவ்ளோ சந்தோசமா இருக்கேன்னு உங்களுக்கு தெரியுமா? என்னைத்தான கூப்பிட்டீங்க! அதான் எனக்கு சந்தோசம். பாக்க மாட்டிங்ளா? நான் போகவா?" என்றதும் இவன் முகம் தூக்கி அவளை இருளில் பார்த்தான். கீதாவை அருகில் இழுத்து அணைத்துக் கொள்ள வெண்டுமென்ற ஆசை தோன்றியது! கைகளை நீட்டினான். அவள் ஆச்சரியமாய் இவன் கைகளுக்குள் வந்து நுழைந்து கொண்டாள்.

"எனக்கு முத்தம் வேணும்" கேட்ட அவள் குரல் குழந்தை வடிவெடுத்திருந்தது. இவன் அவள் கன்னத்தில் இதழ் பதித்தான். பத்தாது! என்றாள்.

0000

"என்னடி உன் தம்பிகாரன் தோட்ட வீட்டுக்காரன் கூட உன்னை

ஜோடி சேர்த்தவே பார்த்தானாமா?” முதலிரவு அன்று செந்தில் அம்சவேணியிடம் பேசிய முதல் பேச்சே அப்படித்தானிருந்தது. செந்தில் முதலிரவு அறைக்குள் பாட்டிலைத் திறந்திருந்தான். அம்சவேணி எதுவும் பேசாமல் குடித்துக் கொண்டிருக்கும் அவனைப் பார்த்தாள்.

“அந்தன்னிக்கி நைட்டே விருந்து தடபுடல் பண்ணினானாமா துணிக்கடைக்காரன். அவன் எதுக்குடி செலவு பண்டி விருந்து போடணும் உங்களுக்கு? போட்டு உன்னை தூக்கிட்டு போய் காரியத்தை முடிச்சுட்டானா? என்னடி ஒன்னும் பேசாம உம்முன்னே இருக்கே? அப்படியே தாலிய கட்டச் சொல்லியிருக்கலாம்ல நீயி! என்னை எதுக்கு வந்து கட்டிக்கிட்டே? நானு ஒரு கட்டிங் மாஸ்டரு. துணிக்கடைக்காரன் செவப்புத் தோலுக்காரன். நீ செந்திலையே கட்டிக்க! அப்பப்ப நான் உன்னை வெச்சிக்கறேன் அப்படின்னுட்டானா? சொல்லுடி!” என்று தள்ளாடி எழுந்தவனை பயத்துடன் பார்த்தாள் அம்சவேணி.

கிட்டே வந்த செந்தில் சுவற்றில் இந்த நேரம் வரை சாய்ந்து நின்று கொண்டிருந்தவள் கன்னத்தில் அறைந்தான். “நான் ஒருத்தன் பேசிட்டே இருக்கன் நீ ஊமச்சியாட்ட ஒன்னும் பேசாம கேட்டுட்டே இருக்கியாடி? கொளப்பலூர்காரிக எல்லாரும் ஊமச்சிகளாடி? ஒன்னு அப்படி எல்லாம் இல்லீன்னு சொல்லணும்! இல்ல ஆமான்னு சொல்லணும்!”

“எனக்கு நீங்க சொல்ற துணிக்கடைக்காரன் யாருன்னு கூட தெரியாதுங்க!” என்றாள்.

“பாத்தியா என்னை கேனையன்னு நெனச்சிட்டு சொல்றே! ஏண்டி அவன் வீட்டுலயே போயி வெடிய வெடிய கிடந்துட்டு இப்ப யாருன்னு தெரியாதுங்றே?”

“உங்க வீட்டுல எடம் இல்லீன்னு பேசிட்டு இருந்தாங்க! எங்க சித்தப்பன் தான் அந்த வீட்டுக்கு கூட்டிட்டு போனாருங்க! அந்த வீடு இந்த ஊர்ல எவத்திக்கி இருக்குன்னு கூட இப்ப எனக்கு தெரியாதுங்க!”

“அட என் வித்தாரகள்ளி! பழமொழி தெரியுமா? வித்தாரகள்ளி வெறவுக்கு போனாளாம் கத்தாழ முள்ளு கொத்தோட ஏறுச்சாம்! எனக்கு சின்ன வயசுலயே காது குத்திட்டாங்கடி! அப்ப அந்த ஊட்டுல துணிக்கடைக்காரனை நீ பாக்கவே இல்லியா? உங்க ஊர்க்காரனுக அவனுக்கே உன்னை கட்டி வெச்சிடலாம்னு பேசினானுகளாமா!”

அம்சவேணி கண்ணீர் சிந்தினாள். இப்படி ஒருத்தனுக்கு வாழ்க்கைப்பட்ட கொடுமைக்கு வீட்டில் சும்மா இருந்திருக்கலாமென

நினைத்தாள்! இவன் சொல்லும் துணிக்கடைக்காரனை அந்த வீட்டில் இவள் பார்க்கத்தான் செய்தாள். அவன் இவன் ஊர்க்கார்களோடு ரொம்ப நாள் பழகியவன் போலத்தான் பேசிக் கொண்டிருந்தான். அவன் ஜாதகமும் இவள் ஜாதகத்தோடு சேர்ந்திருந்ததாய் பேசிக்கொண்டு தான் இருந்தார்கள். அவன் தங்கை கீதா இவளிடம் அப்படி அன்பாய் பேசினாள்.

பேசிக்கொண்டிருந்த செந்தில் பாயில் சாய்ந்து முனகிக் கொண்டே கிடந்தான். இவள் கதவு நீக்கி வெளிவந்தாள். இவள் மாமியார் வாசல்படியில் படுத்திருந்தாள். அவள் தூங்கவில்லை போலும்.

“என்னத்த ஒளறிட்டே இருந்தானே? உன்னை அடிச்சு வெச்சிட்டானா? இத்தன நாளு என்னை அடிச்சுட்டு இருந்தான். நீ வந்ததும் எல்லாம் சரியாயுடும்னு நெனச்சேன்.” என்றது.

00000

ஈரோடு பழனியப்பா மண்டப வாசலில் ப்ளக்ஸில் பிரகாசும் மகாலட்சுமியும் சிரித்தபடி நின்றிருந்தார்கள். வீடு தேடி வந்து பத்திரிக்கை கொடுத்து வந்திருந்தான் பிரகாஷ் சுப்பிரமணிக்கு. அதனாலேயே இரவில் மண்டபத்திற்கு வந்து விட்டான் சுப்பிரமணி. வந்த இடத்தில் இத்தனை கசமுசாக்கள் நடக்குமென நினைத்திருந்தால் வந்திருப்பானா? முதலில் மண்டபத்தில் நுழைந்ததுமே இவனுக்கு அதிர்ச்சி கொடுத்தவன் பிரகாஷ் தான். அழையா விருந்தாளி வந்துவிட்டது போல முகத்தை திருப்பிக் கொண்டான். சுப்பிரமணிக்கு ஒன்றும் விளங்கவில்லை. இவனாக அவனை நோக்கிச் சென்றாலும் அவன் இவனைத் தவிர்த்து வேறொருவரிடம் பேச்சு கொடுத்து பிசியாய் இருப்பது போல் காட்டிக் கொண்டான். வந்ததிலிருந்து கீதா வேறு இவன் கண்ணில் படவில்லை. என்னதான் இருந்தாலும் அண்ணன் திருமணத்தில் வரவேற்பில் அவள் நிற்க வேண்டுமல்லவா!

தனித்து ஒரு சேரை இழுத்துப்போய் ஓரம்போட்டு அமர்ந்தான். மண்டபத்தில் தெரிந்த முகம் என்று ஒருவரும் கண்ணில் படவில்லை. கண்ணில் பட்ட ஒன்றிரண்டு சீனாபுரம் பெண்களும் தலையை ஆட்டிவிட்டு சாப்பாட்டு பந்திக்கே சென்றார்கள். மேடையில் மணமக்கள் சிரித்தபடி வணங்கிக் கொண்டிருந்தார்கள். போன் செய்தாவது கீதாவை கூப்பிடலாமா என்று நினைத்தான். அப்படியே அவள் வந்தாலும் இத்தனை சொந்தபந்தங்கள் உள்ள இடத்தில் தன்னிடம் வந்து எப்படி பேசுவாள்? என்ற நினைப்பு வந்ததும் அவளை கூப்பிடும் எண்ணத்தை விட்டொழித்தான். அந்த நேரத்தில் தான்

“மச்சினா டேய்! இங்க ஏண்டா தனியா உக்காந்துட்டே?”என்று கொஞ்சம் தள்ளாட்டமுடன் செந்தில் இவன் அருகில் வந்து நின்றான். இவன் எழுந்து “உக்காருங்க மாமா, நான் இன்னொரு சேரை எடுத்துட்டு வர்றேன்” என்று போய் காலியாய் இருந்த இன்னொரு சேரை எடுத்து வந்து செந்தில் அருகில் போட்டு அமர்ந்தான்.

“மாமா அக்காவை கூட்டிட்டு வந்தீங்களா?” என்றான்.

“எதுக்கு? உங்கொக்கா அதா மேடையில நிக்கானே துணிக்கடைக்காரன் அவனை கூட்டிட்டு ஓடறதுக்கா?”

“மாமா என்ன மாமா இப்படி பேசறீங்க?”

“பின்ன எப்படிடா பேசுறது? கூறுகெட்ட குடும்பமுடா உங்க குடும்பம். எப்படியோ எங்கிட்ட கொண்டாந்து தள்ளி உட்டுட்டீங்க! இந்தக்காலத்துல எவண்டா பத்து பவுனுக்கு செரீன்னு சொல்லி ஒருத்தி கழுத்துல தாலி கட்டுவான்? அவ என்னடான்னா கலியாணத்தன்னிக்கே துணிக்கடைக்காரன் ஊட்டுல படுத்து எந்திரிச்சி வர்றா?.. டேய் மச்சினா! ஏண்டா நீ பாட்டுக்கு போறே? டேய்!” என்று செந்தில் போட்ட சப்தத்தில் மண்டபமே திரும்பி, ’யாரது?’ என்று பார்த்தது.

சுப்பிரமணிக்கு மாமனை ரெண்டு காட்டு காட்டலாம் என்று கோபம் வந்ததால் தான் கிளம்பி வந்தான் வெளிவாசலுக்கு! என்ன இப்படி பேசுகிறார்? தண்ணி அடித்து விட்டால் என்ன பேசுவது என்று கூட தெரியாமல் பேசுவதா? அக்கா இவரோடு வீட்டில் என்ன பாடு படுகிறதோ? கார்கள், பைக்குகள் நிற்குமிடம் வந்து சிகரெட் ஒன்று பற்ற வைத்து இழுத்தான். அப்போது இவன் அலைபேசி அலறியது! எடுத்து யாரென பார்த்தான். கீதா தான்.

“சொல்லுங்க கீதா! எங்க மண்டபத்துல உங்களை எங்க தேடியும் காணோமே? கீதா அழறீங்களா கீதா? என்னாச்சு?” என்று இவன் கேட்டும் அவள் அழுகை தொடர்ந்து கொண்டே இருந்தது.

“என்னான்னு சொல்லிட்டு அழுங்க கீதா! இப்ப எங்க இருக்கீங்க?”

“மண்டபத்துல அண்ணன் ரூம்ல தான் இருக்கேன்ங்க. அண்ணன் உங்களை எதாச்சும் சொல்லுச்சா?”

“இல்லைங்களே கீதா! ஆனா என் கிட்ட முகம் கொடுத்து பேசலை. நான் கிட்ட போனாலும் ஒதுங்கிப் போயிடுறார்.”

“நீங்க சாப்புட்டீங்களா?”

“இன்னும் இல்லங்க கீதா”

“இங்க நீங்க சாப்பிட வேண்டாம். இங்க இருக்கவும் வேண்டாம். நீங்க போயிடுங்க”

“இப்படி திடீருன்னு சொன்னா எனக்கு ஒன்னும் விளங்கலைங்க கீதா”

“நான் சொன்னா கேப்பீங்ளா மாட்டீங்ளா?”

“கேட்குறேன் சொல்லுங்க கீதா”

“எங்கண்ணன் கிட்ட இன்னிக்கி உங்களை விரும்புறேன்னு சொன்னேன். காச்சு மூச்சுன்னு கத்திட்டார். அடிக்கவே வர்றார். அம்மா தான் தடுத்துச்சு! நான் மறுபடி ரெண்டு நாள்ல உங்களுக்கு போன் பண்ணுறேன்ங்க! ஆனா இதுக்காக நீங்க சங்கடப்பட வேண்டாம். நான் பாத்துக்கறேன். நீங்க புறப்படுங்க! சரியா?”

“சரிங்க கீதா, வெளிய தான் நிக்கேன் அப்படியே கிளம்பிடறேன்”

“சங்கடமில்லீங்களே உங்களுக்கு?”

“இங்க பாருங்க கீதா சும்மா அழுதுட்டே இதை சொன்னீங்கன்னா நான் எப்படி போவேன் இங்க இருந்து? உங்களை பார்க்கணும்னு தான் வந்தேன். உங்களை காணோம். எனக்கு இங்க என்ன வேலை? ஆனா ரொம்ப சண்டை போட்டுட்டு இருக்காதீங்க. நான் கிளம்புறேன்” இவன் போனை அணைத்து விட்டு கிளம்பலாம் என்ற போது செந்திலை தள்ளிக் கொண்டு இருவர் வந்தனர். இவன் அவர்களை நோக்கி ஓடினான்.

“தண்ணியப் போட்டுட்டு வந்து மண்டபத்துல என்ன பேசுறதுன்னு தெரியாம சவுரீத்துக்கு பேசுனா என்னடா அர்த்தம்? வெளிய கொண்டி வீசிட்டு வாங்கடா!” ஏனுங் ஏனுங்! என்று இவன் ஓடி அவர்கள் முன் நின்றான்.

“வாடா மச்சினா! என்னை அடிக்கிறானுகடா இவனுக! அப்படி நான் என்னத்த சொல்லிட்டேன். உங்கொக்காளை ஊருக்குள்ள துணிக்கடக்காரன் வெச்சிட்டு இருக்கான். இங்க பெரிய மனுசன் மாதிரி பெட்ரோல் பங்க் ஓனர் புள்ளைய கட்டுறான்னு சொன்னேன் தப்பாடா?” சுப்பிரமணி அவர்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு செந்திலை மண்டபத்தை விட்டு வெளியே கூட்டி வந்தான். வந்த பேருந்திலேயே செந்திலை ஏற்றி சீனாபுரம் வந்திறங்கினான். சாய்ந்து சாய்ந்து விழப் போனவனை தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு வீடு வந்தான் சுப்பிரமணி. அக்காள் தான் கதவு நீக்கி வெளிவந்ததும்

அழுதாள். உள்ளே கொண்டு போய் பாயில் படுக்க வைத்து விட்டு வெளிவாசல் திண்ணையில் வந்தமர்ந்தான்.

”மாமன் தண்ணி போடுதுன்னு ஏன் வீட்டுக்கு கூட நீ சொல்லாம விட்டுட்டே அக்கா?”

“அவரு போடாத நாள் தான் இல்லடா. இதை என்னன்னு உனக்கு சொல்ல? வீணா சண்டை தான் வரும். இது கூட பரவால்லடா எந்த நேரமும் துணிக்கடைக்காரனோட நான் தப்பு பண்ண போறதா சொல்லிட்டே இருக்காப்ல”

“அப்படி எல்லாம் இல்லன்னு சொல்ல உனக்கு வாய் இல்லியாக்கா?”

“சொன்னா மட்டும்? தண்ணி போடலின்னா தங்கமா இருக்காப்ல”

“அவரு மாமன் கிட்ட நான் போய் பார்த்து பேசவாக்கா?”

“அதும் வேஸ்டுடா! அவரு இவருக்கும் மேல பேசுவாரு. அன்னிக்கி கடைவீதியில பிரகாஷ் எதேச்சையா பார்த்து பேசினாரு! அதை பார்த்துட்டு யாரோ இவருக்கு சொல்லியிருக்காங்க? எங்க சந்திக்கறீங்க ரெண்டு பேரும்னு அடிக்கிறாப்லடா!”

“பேசாம நம்ம வீட்டுல கொஞ்சம் நாள் வந்து இருந்திடேன் அக்கா”

“அங்க வந்து உக்கார்ந்துட்டா அம்மா அப்பாக்கு சங்கடம்டா! போக ஊர்ல வேற தப்பா பேசுவாங்க. நான் இங்கியே இருக்கேண்டா”

“இந்த வீட்டுக்கு நான் முதல்ல வந்தப்பவே கொஞ்சம் வாய் திறந்து பேசியிருந்தன்னா இப்ப இவ்ளோ துன்பம் இருந்திருக்காதுக்கா! ஆனா என்னமோ எனக்கு மனசுல ஒப்பலைதான் அப்பவே”

“இனிப்பேசி என்ன பண்ணமுடியும்டா! வீட்டுல மட்டும் சொல்லிடாதடா சுப்பு. அவங்களா பேசி பண்ணி வச்சாங்க. நானும் போகப் போக சரியாயுடும்னு நம்பிட்டு இருக்கேண்டா. சாப்டுட்டு போறியாடா?”

“இல்லக்கா மண்டபத்துலயே சாப்டுட்டு தான் வந்தேன். நான் கிளம்புறேன்க்கா” என்றவன் எழுந்து அக்காவின் வாழ்வை எண்ணி கவலைப்பட்டுக் கொண்டே நிறுத்தம் வந்தான். அதைத் தவிர வேறென்ன செய்ய முடியும் அவனால்! நாலு பெரிய மனிதர்களை வைத்து பஞ்சாயத்தா பேசமுடியும் சந்தேகப்படுவதற்கெல்லாம்?

000000000

கொடுவேரி நீர்வீழ்ச்சியில் தலை கொடுத்து சின்னப்பிள்ளை போல

விளையாடிக் கொண்டிருந்தாள் கீதா. கூடவே நின்றிருந்த சுப்பிரமணியின் வெற்றுடம்பின் மீது தண்ணீரை வாறி அடித்துக் கொண்டிருந்தாள். ”போலாம்டி நடுங்குது ஒன்னரை மணிநேரமா தண்ணிலயே இருக்கோம்டி” என்று கெஞ்சிக் கொண்டிருந்தான் அவளிடம் சுப்பிரமணி. அவளோ ”இன்னம் பத்தே நிமிசத்துல கரை ஏறிடலாம்டா!” என்று பல தடவை சொல்லி விட்டாள். இருந்தும் அவள் முகத்தில் இருக்கும் சந்தோச களைக்காவே இவனும் ஒன்றும் கடுமையாகவும் கூப்பிடவில்லை.

“குளுருதுன்னா என்னை கட்டிக்கோங்க கிட்ட வந்து”

“இங்க நீயும் நானும் மட்டும் தான் தண்ணீல இருக்கோம்னா நீ இதை சொல்லணுமாடி?”

“யாரோ இருந்துட்டு போறாங்க நமக்கு என்ன? அவங்க என்ன நம்மையவா பார்த்துட்டு இருக்காங்க? இங்க பாருங்க உங்க லைசென்ஸ் இருக்கு” என்று இரண்டு நாள் முன்பு மருத மலையில் இவன் கட்டிய தாலியைக் காட்டினாள். அருவி நீரில் குளித்துக் கொண்டிருந்த அனைவருமே அவரவர் பாட்டுக்குத் தான் குளித்துக் கொண்டிருந்தார்கள்.

“நீங்க இதுக்கும் முன்ன இங்க வந்திருக்கீங்ளா?”

“பலதடவை வந்திருக்கேன் கீதா நண்பர்களோட. என்ன வர்றப்ப சரக்கை அடிச்சுட்டு போதையில தான் தண்ணியில இறங்கியிருக்கேன். இன்னிக்கி உன்கூட வந்ததால கம்முன்னு வந்துட்டேன்.”

“அதான் போலாம் போலாம்னு சொல்லிட்டே இருக்கீங்ளா? என் கிட்ட சொல்ல வேண்டிது தான. நானும் உங்களுக்கு கம்பெனி குடுத்து ஒரு டம்ளராவது அடிச்சுட்டு வந்து இறங்கி இருப்பேனே”

“வாயிலயே அடிப்பேண்டி”

“எங்கே அடிங்க பார்க்கலாம்” என்றவள் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு இவனை நெருங்கி வர கையெடுத்து கும்பிட்டு பின்வாங்கினான் சுப்பிரமணி. “பேடி” என்றாள் தலை சாய்த்து.

“சரி போலாம்” என்றாள்.

“பார்த்து கால் வச்சி வா கீதா சின்னச் சின்ன மொட்டுப் பாறைகள் எல்லாம் வழுக்கும்”” என்றவன் அவள் கைப்பிடித்து தண்ணீரில் கரை நோக்கி முன் நகர்ந்தான். ஆனால் இவனே ஒரு சிறு பாறை வழுக்கி தண்ணீரில் தலைநனைய விழுந்தான்.

“என்னை சொல்லிட்டு பல்ட்டி போடறது யாரு? நாங்க காலேஜ் ப்ரண்ட்ஸ் எல்லாம் ரெண்டு முறை இங்க வந்திருக்கோம். ஆனா பசங்க ரொம்ப கிண்டல் பண்ணதால சீக்கிரம் கிளம்பிட்டோம்.”

“மீன் சாப்பிடறியா கீதா?”

“எனக்கு வேண்டாம் இன்னிக்கி. அதும் வெள்ளிக் கிழமை. நீங்க வேணா சாப்பிடுங்க”

“எனக்கு கிழமையெல்லாம் ஒரு கணக்கில்ல கீதா. நீ வேண்டாம்னு சொன்னதால எனக்கும் வேண்டாம்”

“எனக்கு இன்னிக்கி பர்ஸ்ட் நைட் வேண்டாம். அத்தை சொல்லிட்டு இருந்திச்சு காலையில. உங்களுக்கு?”

“அது மட்டும் முடியாது. எனக்கு வேணும்”

“எனக்கு பயமா இருக்குப்பா அதை நெனச்சா!”

“பயக்குற பிள்ளையா வீட்டுல அண்ணன் சொன்னதை கேக்காம என்னைத் தேடி என் வீடு வரும்?”

“நான் வந்து பிடிக்கலையா உங்களுக்கு?”

“பிடிக்குது. ஆனா இப்படி உன் வீட்டார் யாரும் இல்லாம என் அப்பா அம்மாவை மட்டும் கூட்டிட்டு மருதமலை போய் கல்யாணம் செஞ்சது தான் சங்கடம்”

“எங்க அப்பா அம்மா தான் சந்தோசம்னு சொல்லிட்டாங்களே! அப்புறம் என்ன?”

“என்ன இருந்தாலும் அவங்களும் வந்திருந்தா எனக்கு சந்தோசம்”

“அவங்களுக்கு ஒடம்புக்கு முடியாதுங்க. ஆனா என் விருப்பப்படி சந்தோசமா அனுப்பி விட்டாங்க. ஏன் உங்களுக்கு சிரமம்? இன்னிக்கி நேரா எங்க வீடு போகலாம்”

“ஐய்யோ உங்க அண்ணனை நினைச்சா எனக்கு பயம். நேக்கா வந்து பேசிட்டு உன்னோட காரியத்தை சாதிச்சுட்டே பார்த்தியாடான்னு கேட்டா என்ன பதில் சொல்வேன்? ஏன் அப்படியே நின்னுட்டே கீதா?”

“இப்படி பேசினீங்கன்னா எனக்கு கோபம் வரும். நான் எங்க அண்ணனுக்கு பதில் சொல்லிக்கிறேன் போதுமா! அவர் அப்படி கேட்கிறவரை நான் சும்மா இருப்பனா?”

“வேணாம்டி, என்னால உங்க அண்ணன் கூட ஏன் சண்டை உனக்கு?”

“இதென்ன வம்பு. எனக்கு உங்களை பிடிச்சிருந்துச்சு கட்டிக்கிட்டேன். அவனுக்கு என்ன இதுல சங்கடம்? எங்க அண்ணியே எங்கண்ணனை மிஷினா நீங்கன்னு சத்தம் போடுது. எங்கண்ணன் பார்த்து எனக்கு கட்டி வெச்சா அவனை மாதிரி ஒரு மிஷினைத்தான் கட்டி வைப்பான். அவன் நாலஞ்சு கடை கண்ணி டவுன்ல வச்சிருப்பான். அவனை இழுத்துட்டு கொடுவேரி வரமுடியுமா நான்? இல்ல எங்கண்ணன் தான் வாதங்கச்சி ஊட்டி போய் ப்ளவர் ஷோ பார்த்துட்டு வரலாம்னு கூட்டிட்டு போயிருக்கானா? எந்த நேரமும் கடை கடை கடை! பாருங்க எங்க அண்ணி சீக்கிரம் டாட்டா சொல்லிட்டு ஈரோடு போயிடும்”

“நல்ல வார்த்தை பேசு கீதா! அதனால உங்க அப்பா அம்மாக்கும் அண்ணனுக்கும் சிரமம்”

“சிரமம் தான். அண்ணியை கட்டிட்டு வந்த்துல இருந்து ஒரு நாள் ஜாலியா எங்காவது கூட்டிட்டு போனானா எங்கண்ணன்? பாவம் எங்கண்ணி சரி அதை விடுங்க இன்னிக்கி எங்க அம்மாவை பார்க்கணும்னு இருக்கு எனக்கு. நாம போலாம்”

“சரி போலாம். அந்த எங்கம்மா சொன்ன பர்ஸ்ட் நைட் என்னாவுறது?”

“அதான் பயமா இருக்குன்னு சொல்லிட்டனே”

“அப்ப நான்..”

“அப்ப நீங்க?”

“இல்ல விடு நீ முறைப்பே”

“இப்ப சொல்ல வந்ததை சொல்லலைன்னாலும் முறைப்பேன்”

“அப்ப நான் உங்க வீடு வர்றதை யோசிக்கணும்”

“லூசு அதுக்கும் இதுக்கும் என்ன இருக்கு?”

“ரெண்டு நாள்ல ஏகப்பட்ட தடவை லூசுன்னு சொல்லிட்டே கீதா”

“ப்ரண்ஸ் கூட பேசிப் பேசி பழக்கமாயிடுச்சுங்க.. அதான் வந்துடுது சாரி! நேரா எங்க வீடு போலாம் ப்ளீஸ்டா”

“இந்த ப்ளீஸ்டாவுக்காகா எங்க வேணாலும் வருவேன். இன்னொருக்கா சொல்லு”

“ப்ளீஸ்டா! இன்னிக்கி பர்ஸ்ட் நைட் வேணாம்”

“அதுக்கு மட்டும் அது வேலை செய்யாது”

இவர்கள் சென்ற போது அண்ணன் வீட்டில் இல்லை. அண்ணியும் இல்லை. அப்பா அம்மாவும் வேலைக்காரியும் மட்டுமே இருந்தார்கள். கீதாவின் அப்பா கேள்விகள் எதுவும் கேட்காமல் மரியாதையாகவே பேசினார். கீதா அம்மாவோடே இருந்தாள். அப்பா ப்ரகாஷுக்கு போன் போட்டு இவன் வந்திருக்கும் விசயத்தை சொன்னார். அவன் வீட்டுக்கு வருவதாக கூட சொல்லவில்லை. கடையில கூட்டம்பா! என்றான். விடைபெற்று வரும்போது கையில் ஒரு பெரிய சூட்கேஸ் கீதா கையில் முளைத்திருந்தது. கழுத்தில் நகைகள் சில முளைத்திருந்தது. இவன் எதுவும் கேட்டுக் கொள்ளவில்லை. கீதா தான் அந்த தகவலை சொன்னாள். அண்ணி காலையில் தான் வீட்டுக்கு அண்ணனிடம் சண்டை போட்டு விட்டு போய் விட்டதாக!

“நீ சொல்லி ஒரு மூனுமணி நேரம் இருக்குமா கீதா உங்க அண்ணியைப் பத்தி. அதுக்குள்ள நடந்திடுச்சு. எதுக்கும் என்னைப்பத்தி எதாச்சும் சொல்லிடாதப்பா” என்றவன் இடுப்பில் கிள்ளி வைத்தாள் கீதா. டூவீலர் சாலையில் சாய்ந்து இவளை மிரட்டியது. (பாலகுமாரன்?)

“வண்டில இருந்து விழுந்திடுவனோன்னு பகீர்னு ஆயிடுச்சு”

“அதெல்லாம் கிழ விழமாட்டோம். ஆனா அடுத்தமுறை வண்டியில போறப்ப கிள்ளிடாதே! ஒன்னுகிடக்க ஒன்னு ஆயிடும்”

“இனி உங்கண்ணன் ஈரோடு போய் கெஞ்சி கூட்டிட்டு வருவாப்லையா உங்க அண்ணியை?”

“எங்கண்ணன் போகாது அப்படியெல்லாம். போனவங்களுக்கு வழி திரும்பி வர தெரியும்னு விட்டுடும்”

“நீ என்கிட்ட கோபிச்சுட்டா என்ன பண்ணுவே? பொட்டி தூக்கிடுவியா?”

“நான் எதுக்கு பொட்டி தூக்குறேன்? நீங்க தான் பொட்டி தூக்கணும்” என்றவள் இன்னொரு கிள்ளல் போட்டாள்.

00000

இறப்பு எந்த ஊரில் யார் வீட்டில் நிகழ்ந்தாலும் சாவின் மீதான பயம் அந்த ஊருக்கே வந்து சேர்ந்து விடுகிறது. இறந்தவரை சுடுகாடு தூக்கிப்போய் புதைத்து விட்டு வரும் வரையில் ஊரே சோக முகத்துடன் தான் காட்சியளிக்கிறது. இறந்தவர் நல்லவரோ கெட்டவரோ, வேண்டப்பட்டவரோ சண்டைக்காரரோ யாராக இருந்தாலும் சுடுகாடு வரை பாடையுடன் போய் விட்டு பின் இறந்தவர் வீடு திரும்பி விளக்கை

கும்பிட்டு விட்டு வீடு போய் குளித்தபின் தான் சாப்பிடவே அமருகிறார்கள்.

சீனாபுரத்தில் இழவு விழுந்து விட்டது. செந்தில் இறந்து விட்டான். திருமணம் முடித்த ஒரு வருட காலத்திலேயே மனைவி அம்சவேணியை விதவையாக்கி விட்டு போய் விட்டான். காய்ச்சல் என்று படுத்திருந்தவனை அக்கம் பக்கத்தார் தான் கோவை மெடிக்கலுக்கு கூட்டிப் போனார்கள். பார்க்கையில் முப்பத்தி மூன்று வயதிலேயே இரண்டு கிட்னியும் போயிருந்தது. தாங்காதுங்க ஈரோடு எடுத்துப் போங்கள்! என்று சொல்லி விட்டார்கள். ஈரோடு செல்லும் வழியிலேயே முகம் வெளுத்து போய்ச் சேர்ந்து விட்டான். இதோ காரியம் எல்லாம் முடிந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டது.

அம்சவேணியின் அழுகை தான் இன்னமும் நின்றபாடில்லை. பையனை பிணமாய் வீட்டுக்குள் தூக்கி வருகையில் அவன் அம்மா கதறி அழுததோடு சரி. வீட்டின் முன் சாமியானா போடப்பட்டிருக்க நெருங்கிய பங்காளிகள் இருவரும், சுப்பிரமணியும் மட்டுமே அமர்ந்திருந்தார்கள். தாமதமாக இழவு காரியத்துக்கு வருபவர்களுக்கு கை நீட்டி, எப்படி ஆச்சு என்ற சம்பிரதாயமான அவர்களின் கேள்விக்கு செந்திலின் மாமா சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார். ப்ரகாஷ் செந்திலின் இறப்பன்று வந்திருந்து முழு நாளும் வாசலில் கிடந்த சேரில் அமர்ந்து போயிருந்தான். அவன் சுப்பிரமணியிடமும், கீதாவிடமும் ஒரு வார்த்தை பேசிக்கொள்ளவில்லை. அவனுக்கு அம்சவேணியின் அழுகுரல் மட்டுமே அந்த சமயத்தில் கேட்டுக்கொண்டே இருந்தது. அது இவனை மட்டும் பிழிந்தெடுத்தது. கடைசியாக போன வாரத்தில் தான் அவளிடம் நிறுத்தத்தில் பேசியிருந்தான். அன்று சேலைத்தலைப்பை தலைக்கு முக்காடிட்டு வலது காலை சற்று இழுத்தவண்ணம் சாலையை கடந்து கோபி செல்லும் பேருந்துக்காய் நின்றவளைக் கவனித்து கடைக்குப் போக கிளம்பி வந்தவன் கவனித்து அவளருகே சென்று பைக்கை நிப்பாட்டினான். அவள் முகம் வீங்கி இருந்தது.

“என்னங்க அம்சவேணி ஏதும் பிரச்சனையா? திடீருன்னு இப்படி கிளம்பியிருக்கீங்க?” என்றவனிடம் எந்த பதிலும் சொல்லாமல் கடை கண்ணிகளை கவனித்தாள். இவர்களை யாரும் கவனித்ததாகவும் தெரியவில்லை என்றபோது நிம்மதியானாள். இருந்தும் இந்த நிறுத்தத்தில் நின்றா பேசுவது? இதையும் பார்த்துப்போய் செந்திலிடம் யாரேனும் சொல்வார்கள். இத்தனைக்கும் கீதாவை வேறு தம்பி கட்டியிருக்கிறான்.

“அம்சவேணி என்னங்க உங்க பின்மண்டையில இருந்து ரத்தம் சேலையில கசியுது? நீங்க என் வண்டியில உக்காருங்க மொதல்ல பெருந்துறை ஆஸ்பத்திரி போவோம். எதா இருந்தாலும் அங்க போய் பேசிக்குவோம்” என்றவன் பின் இருக்கையில் பதிலேதும் பேசாமல் அமர்ந்தாள். சேனடோரியம் மருத்துவமனை நோக்கி வண்டியை கிளப்பினான் பிரகாஷ்.

தலையில் கட்டையால் அடிபட்டதால் சிலாக்கு கிழித்து ரத்தம் வடிந்து கொண்டிருந்தது. மருத்துவமனையில் மருந்து வைத்து கட்டி ஊசி போட்டதும் அவ்வளவு தான் என்றானது. மருத்துவமனை மருந்துக்கடையிலேயே மருந்துகளை வாங்கிக் கொண்டு வந்தவன் அம்சவேணியை கேண்டீனுக்கு கூட்டி வந்தான்.

“இப்பவாச்சும் சொல்லுங்க அம்சவேணி என்ன பிரச்சனை?” என்றான்.

“கல்யாணம் கட்டின நாள்ல இருந்து துணிக்கடைக்காரன் உன்னை வெச்சிட்டு இருக்காண்டின்னு சொல்லி அடிச்சுட்டே இருக்காருங்க! இன்னிக்கு காலையில வீட்டுல போய் பத்தாயிரம் வாங்கிட்டு வாடின்னு சொன்னாப்புல. அவங்களை போய் துன்பப்படுத்தணுமான்னு முடியாதுன்னு சொன்னேன். அதான் கட்டையில அடிச்சிட்டாப்ல!”

“என்னை ஏன் செந்தில் உங்க கூட சேர்த்து பேசுறான்?”

”உங்க வீட்டுல கல்யாணத்தன்னிக்கி தங்கி சாப்பிட்டதால!”

“ஓ! சரி இப்ப என்ன பண்ணப்போறீங்க?”

“நான் எங்க வீடு போகணும்”

“வேண்டாங்க அம்சவேணி. என்னடா சீனாபுரத்துக்கு கட்டிக் கொடுத்து பொண்ணு பணம் வேணும்னு எல்லாம் கேட்டுட்டு வீடு வருதேன்னு உங்க வீட்டுல நினைப்பாங்க! போக உங்க தலையில வேற அடிபட்டிருக்கு. நிஜமாவே மனசொடிஞ்சு போயிடுவாங்க அவங்க”

“இத்தனை நாள் வீடு போகாம இருந்ததுக்கு காரணம் அது தானுங்க! பணம் வேணுமுன்னு நிக்கிறாப்லயே. நான் பணத்துக்கு எங்க போவேன்?”

“ஒன்னு பண்ணுங்க, இங்கியே இருங்க நீங்க. பத்து நிமிசத்துல பணத்தோட வர்றேன். நீங்க இங்க இருங்க நான் உங்களுக்கு தர்றேன். கடனா வாங்கிக்குங்க. உங்க அண்ணன் கிட்ட சொல்லி மெதுவா வாங்கிக் குடுங்க” என்றபோது அவள் தலையாட்டினாள் சரியென.

பார்த்தால் ஒரே வாரத்தில் செந்தில் இல்லை.

அதன் பின் அம்சவேணி அவள் ஊருக்கே சென்று விடுவாள் என்றுதான் நினைத்திருந்தான் பிரகாஷ். ஆனால் அவள் செந்திலின் அம்மாவோடு சீனாபுரத்தில் தான் இருந்தாள். பிரகாஷுக்கு குடி மீறியிருந்தது. அப்படியான நாள் ஒன்றில் தான் அதுவும் நடந்தது. மகாலட்சுமியின் குரல் பிரகாஷுக்கு கேட்டுக்கொண்டேயிருந்தது. என்னை டைவர்ஸ் பண்ணிட்டு அம்சவேணியை கட்டிக்குங்க!

போதையில் சில கடினமான விசயங்கள் கூட எளிதான விசயமாகவே தெரியும். போதை செய்யும் வேலைகளில் மிக முக்கியமான வேலை அது தான். பகல் நேரத்தில் அளவான போதையுடன் அம்சவேணி வீட்டுக்கே சென்றான் பிரகாஷ். சரியான முடிவுடா! என்று அவனையே பாராட்டிக் கொண்டான். வீட்டில் செந்திலின் அம்மா இல்லை. அவள் பக்கத்து தோட்டத்திற்கு வேலைக்கு செல்வதாக அம்சவேணி சொன்னாள். இருந்தும் இவனை வீட்டினுள் அமர வைத்துத்தான் பேசினாள். அவளுக்கும் இவன் வந்தது ஏன் என்றும் தெரியவில்லை. கண்கள் சிவந்திருப்பதை பார்த்ததுமே இவனும் குடிகாரன் தானா! என்றே யோசனை அவளுக்குள் ஓடியது.

“நான் உங்களை தேடி வந்தது ஒரு முக்கியமான விசயம் பேசத்தான். இப்ப பேசலாமா?”

‘சொல்லுங்க.உங்க பணத்தை பத்தி என் தம்பிகிட்ட இன்னம் சொல்லவே இல்லை நான். கண்டிப்பா இந்த வாரத்துல கேட்டு வாங்கி தந்துடறேன்”

“இல்ல நான் பணத்துக்காக உங்களை தேடி வரலை. என் மனைவி என்னை விட்டு போய் இப்ப ஆறு மாசத்துக்கும் மேல ஆயிடுச்சு. இப்ப நான் சொல்லப்போறதை நல்லதா கெட்டதான்னு நீங்க யோசிச்சு சொன்னா போதும். உடனே சொல்லனும்னு அவசியமில்ல. அவளை ரெண்டு தடவை கூப்பிட்டு பார்த்துட்டேன். அவ டைவர்ஸ் வாங்கிட்டு உங்களை கட்டிக்கங்கன்னு சொல்றா. அவளுக்கும் யாரோ தப்பா சொல்லியிருக்காங்க. நான் ஏன் இப்படி தனியா கிடக்கணும்னு யோசிச்சேன். அதான் உங்க கிட்டயே பேசிடலாம்னு நேரா வந்துட்டேன்.” என்று சொல்லிவிட்டு அவள் என்ன சொல்லப்போகிறாள் என்று முகம் பார்த்தான்.

“இப்ப நான் எதும் சொல்ற நிலையில இல்லைங்க! அதனால....”

“நான் தான் சொன்னேனே உடனே எதும் நீங்க சொல்ல

வேண்டியதில்லே! நானே எல்லாரும் சொல்றாங்களே அந்த தப்பை ஆமாம்னு சொல்ல வேண்டியது தான்னு முடிவு பண்ணித்தான் வந்தேன். நீங்க எப்ப வேணாலும் எனக்கு பதில் சொல்லுங்க. ஆனா நல்ல பதிலா சொல்லுங்க!" என்றவன் எழுந்து கிளம்பினான்.

அதற்கும் அடுத்த நாள் தான் போதையில் குழியில் காலொடிந்து கிடந்தவனை கொளப்பலூர்காரர் எல்.கே.எம்மில் சேர்த்து விட்டு நேராக சுப்பிரமணி வீட்டில் போய் தகவல் சொன்னார்.

000000

"உங்கண்ணன் என்ன லூசா? புருசன் செத்து இரண்டு வாரம் தான் ஆச்சு. எங்கக்காகிட்ட போய் கட்டிக்கலாம்னு நின்னிருக்கான்? பெரிய தியாகம் பண்ற நெனப்போ?"

"இதை ஏன் இப்ப பேசிட்டு வர்றீங்க? நானே அண்ணனுக்கு ஏக்ஸிடெண்ட்டுன்னு என்னமோ ஏதோனு வர்றேன். அதெல்லாம் மறுபடி பேசிக்கலாம். இப்ப உங்க அக்காவெ எதுக்கு ஆஸ்பத்திரிக்கு இழுத்துட்டு வர்றீங்க? அவங்க வந்து என்ன பண்ணப் போறாங்க?"

அவர்கள் ஈரோடு பேருந்தில் சென்று கொண்டிருந்தார்கள். அக்கா முதலில் வர மறுத்தது. எனக்கு அங்க என்ன வேலை? என்றது. இருந்தும் இவன் மகாலட்சுமிக்கு தகவல் யாரும் சொல்லியிருக்க மாட்டார்கள் என்றும், அந்தப்பெண் உன்னை தப்பா பேசினதால தான் இத்தனை வம்பும் என்றும் சொல்லி இழுத்து வந்திருந்தான். அவர்கள் ஈரோடு பேருந்து நிறுத்தத்தில் சூரம்பட்டி டவுன்பஸ்ஸில் ஏறிவந்து நால்ரோட்டில் இறங்காமல் சூரம்பட்டியே சென்று இறங்கினார்கள். கீதாவுக்குத்தான் அண்ணி வீடு தெரியுமென்பதால் அவளே இவர்களை கூட்டிப்போனாள்.

மகாலட்சுமி வீட்டில் தான் இருந்தாள். தகவல் கேட்டதும் பதறினாள். சுப்பிரமணி தான் அவளை அமர வைத்து காலில் மட்டும் தான் கட்டு கவலைப்பட வேண்டாம் என்றான். அக்காவுக்கு மாப்பிள்ளை பார்க்க வந்ததிலிருந்து நடந்த விசயங்களை சொன்னான். போக நீங்களும் டைவர்ஸ் அது இதுன்னு பேசினதால் அக்காவிடம் போய் போதையில் நின்று திருமணம் செய்து கொள்வதாய் பேசிய விசயம் வரை சொன்னான். அக்கா அதன் பின் தன் நிலையை சொன்னாள்.

அவர்கள் மருத்துவமனை வந்த போது காலில் கட்டுடன் பிரகாஷ் விழித்தபடி தான் படுத்திருந்தான். அவர்களை பார்த்ததுமே அவன் கண்ணில் நீர் வழியத் துவங்கியது. எதற்கு அழுகிறோம்? என்று

தெரியாமலே அழுதான். பின் அவனாக ஓய்ந்து சுப்பிரமணியை பார்த்தான்.

"இப்ப பரவாயில்லைங்ளா? வலி எப்படி இருக்கு? எதுக்குங்க நமக்கு இந்த வேண்டாத குடியெல்லாம்? எங்க ஊரு முருகேச கவுண்டர் தான் உங்களை அடையாளம் தெரிஞ்சு இங்க கொண்டு வந்து சேர்த்தீட்டு வந்து தகவல் சொன்னார்."

"எனக்கு என்ன நடந்ததுன்னே தெரியாது. முழிச்சுப்பார்த்ததுல இருந்து இங்க தான் இருக்கேன்" என்றான்.

"என்னை மன்னிச்சுடுங்க" என்ற மகாலட்சுமி அவன் அருகாமையில் அமர்ந்து அவன் தலையை கோதி விட்டாள். பிரகாஷ் தங்கையை பார்த்து "எத்தனை மாசம்டி?" என்றான். அவள் அஞ்சு என்று விரல்களால் காட்டினாள்.

"நான் டாக்டர்கிட்ட என்ன ஏதுன்னு விசாரிச்சுட்டு வந்துடறேன்" என்று சுப்பிரமணி வராந்தாவில் நடந்தான்.

-மலைகள்.காம்

# என்னை மரணத்தின் வருகை என்கிறார்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா செல்லும் குறுக்குப் பாதையில் தனிமையான சிறுகுன்றின்மீது நானிருந்தேன். எனக்கென்று தோழர்கள் சுருட்டிக் கொள்ளும் கூடாரம் ஒன்றினையும், ஒரு மிஷின் கன்னையும், உணவு சமைக்க இரண்டு மூன்று பாத்திரங்களையும் விட்டுப் போயிருந்தார்கள். இயக்கத்தில் தீவிரமாய் இருந்தபோது சிவந்த நிறத்தில் நான் அணிந்திருந்த சீருடைகள் இரண்டையும் தீயிட்டுக் கொளுத்தி ஆறுமாதம் போலாகிவிட்டது.

கூடாரத்தினுள் தங்கி வாழும் வாழ்க்கை எனக்கு இன்று நேற்றல்ல... ஆறு ஏழு வருடங்களாகவே பழகிப் போயிருந்தது! இப்போது போன்ற தனிமை இதற்கு முன் எனக்கு இருந்ததேயில்லை. வருடக்கணக்காய் கேட்டுக் கொண்டிருந்த வெடிச் சப்தங்களும், அலறல் சப்தங்களும் என் காதுகளை மந்தமடையச் செய்திருந்தன. யாரும் உரக்கப் பேசினால்தான் எனக்கு விளங்கும். ஒருமுறை திடீரென விழுந்த ஒரு "ஷெல்'லில் களத்தில் முப்பது பேர் இறந்து போனார்கள். ஒரு ஷெல் துண்டு என் தொடையை சிராய்த்துக் கொண்டு பறந்ததில் வலது தொடையில் பெரிய தழும்பு இருக்கிறது. தவிர எனது இடதுகை கோணல்கை! பூஸா தடுப்பு முகாமில் ஆறுமாத காலம் கிடந்தபொழுது சிங்கள அதிகாரி துவக்குச் சோங்காலே அடிச்சு முறித்தான்.

ஆறு வருடங்களுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தை ஆர்மி பிடித்துக்கொண்டு ஏகப்பட்ட கட்டுப்பாடுகளைப் போட்டிருந்தது. மாலையில் ஆறு மணிக்குமேல் வீட்டைவிட்டு வீடு கூட செல்லக்கூடாது! ஆர்மிக்காரர்கள் எந்த நேரமும் கையில் தூக்கிப் பிடித்த துவக்குகளோடு வீதியில் சுற்றிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில் எனக்கு சோலி சுறட்டு ஏதுமில்லை என்றிருந்ததால் எதிர்வீட்டு காஞ்சனாவை லவ் அட்டாக் செய்து கொண்டு சலூன் கடையே கதியாய் கிடந்தேன். யாழ்ப்பாணத்தை ஆர்மி பிடிக்கும் முன்பாகவே என் அண்ணன் காஞ்சனாவை கல்யாணம் செய்து பிரான்சுக்கு கோப்பை கழுவப் போய்விட்டான். காஞ்சனா எனக்கு அண்ணியாகிப் போனாள்.

அண்ணன் எப்படியும் என்னையும் பிரான்சுக்கு கூப்பிட்டுக் கொள்வான் என்று அம்மா நம்பினாள். என்னையும் ஒரு கல்யாணம் செய்து கொள்ளும்படி அம்மா நச்சிக் கொண்டிருந்தாள். அவளுக்கு தூக்கிக்கொஞ்ச பேரனும், பேத்தியும் அட்டன்டைமில் வேணுமாம். இதை கட்டன் ரைட்டாய் சொல்லிப்போட்டாள். நான் இயக்கத்திற்கு

ஆள் சேர்த்துக்கொண்டிருந்த தமிழ்மணியோடு ஒட்டிக்கொண்டு கிளம்பி விட்டேன். காஞ்சனாவைத் தவிர யாரையும் என் மனது நேசிக்க மறுத்துவிட்டது! அவள் ஏமாற்றிப் போட்டு போனதால் சிலகாலம் சோகப்பாடல்களைக் கேட்டபடியும், பாடியபடியும் இருந்தேன்.

ஆறுமாதம் கழித்து அம்மாவை விசாரித்து ஒரு கடிதம் அனுப்பியிருந்தாள் காஞ்சனா. அதில், இயக்கம் கியக்கமெல்லாம் தலைமுடி பிடுங்கும் வேலை... இயக்கத்திற்கு நீ சீட்டு குடுத்துட்டுவா... உங்க அண்ணன் இங்கொரு வேலை ஏற்பாடு செய்து தருவார், என்று எனக்கும் குறிப்பெழுதி இருந்தாள்.

இயக்கப் பணியில் தீவிரமாய் இருக்கையில் நான் என் குடும்பத்தையே மறந்து போனேன். விடுதலைப் போராட்டத்திற்கு முழுதாக ஒப்புக்கொடுத்து விட்டேன் என்றுதான் சொல்லவேணும். ரத்தம் எந்த நேரமும் அது என் கண்முன் ஆறாய் ஓடிக் கொண்டேதான் இருந்தது! ஆறுமாதம் முன்பாக அப்படி ஒரு காட்சியை பார்ப்பேன் என்று நான் நினைக்கவேயில்லை. புத்த விகாரைக்கு பக்கத்தில் நடந்த கண்ணி வெடித் தாக்குதலுக்கு பிற்பாடு ஆர்மிக்காரர்கள் துப்பாக்கி இலக்கு என்றேதுமில்லாமல் சுட்டுத்தள்ளினர். அதை வெறியாட்டம் என்றுதான் சொல்லவேணும். கடை கண்ணிகளை தீயிட்டுவிட்டு சென்றனர். ராணுவத்தினர் ஊரையே தீக்காடாக்கி விட்டுச் சென்றபிறகு நாங்கள் நுழைந்தோம். தெருவில் காயம்பட்டுக் கிடந்த சனங்களை மருத்துவமனைக்குத் தூக்கி ஓடினோம்.

அப்போதுதான் வயிற்றில் துளைக்கப்பட்டு குடல்சரிந்து கிடந்த பெண்ணின் அருகில் ""அம்மா"என்று முகத்தைத் கட்டிக்கொண்டு அழுதுகொண்டிருந்த மிலனா பாப்பாவை தூக்கிக் கொண்டேன். அங்கு நிற்கப் பிடிக்காமல் ஆறுவயதுக் குழந்தையை தோளில் போட்டுக் கொண்டு ஓடைக் கரைக்கு வந்தேன். ஓடையில் அவள் உடையை

துவைத்து, குளிப்பாட்டிய நேரம் நான் சுத்தமாய் மாறிப்போனேன். இயக்கத்தலைவர் என் மன மாற்றத்திற்கு காரணம் எதுவும் கேட்கவில்லை. சிலகாலம் உன் விருப்பப்படி இருந்து கொள் என்று அனுமதி தந்துவிட்டார்.

முயல், அணில், எலி என்று கண்ணுக்கு எதிரே தென்படுவனவற்றை நான் வேட்டையாடினேன். பகுதி நேரத்தில் மிலனாவிற்கு தமிழும் ஆங்கிலமும் கற்றுக் கொடுத்தேன். மிலனா என்னை "டாடி' என்று அழைத்தபோதுதான் இந்த வாழ்க்கைக்கு ஒரு அர்த்தம் வந்துவிட்டதாக உணர்ந்தேன்.

தூரத்தில் புள்ளியாய் மூன்றுபேர் வந்துகொண்டிருப்பதை நான் குன்றிலிருந்து பார்த்தேன். பின்னால் கைகள் கட்டப்பட்ட நிலையில் சற்று குள்ளமான உருவத்துடன் இருந்தவன் ஒற்றையடிப் பாதையில் முன்னேவர, அவன் பின்னால் சிவப்புச் சீருடை அணிந்த இருவர் வந்து கொண்டிருந்தார்கள். நான் என் இருப்பிடத்திற்குள் நுழைந்து மேல் அங்கியை எடுத்து அணிந்துகொண்டேன். மிலனா எப்போதும் மாலை நேரத்தில் உறங்குவது வழக்கமாகையால் அவள் தூங்கிக் கொண்டுதான் இருந்தாள். இருந்தாலும் இது அவள் எழும் நேரம்தான். ஏற்கெனவே பழக்கமான பாதையில் வருவது போன்றே சீக்கிரமே அவர்கள் வந்து விட்டார்கள்.

""எப்படி சவுக்கியம் குணசீலன்?" கேட்டபடி வந்தவன் பிரபு. ஏழு வருடகாலமாக இயக்கத்தில் இருப்பவன். அவன் கூடவே வந்த இருவரையும் எனக்கு யாரெனத் தெரியவில்லை. பின்புறம் கைகள் கட்டப்பட்டிருந்தவன் தாடையில் ரத்தக்கறை படிந்திருந்தது! மற்றொருவன் இயக்கத்தில் புதிதாய்ச் சேர்ந்த பொடியன் போலும்... பூனை ரோமங்கள் அவன் மூக்கிற்கும் கீழ் எட்டிப் பார்த்திருந்தன.

""தோழர் பிரபு... உங்கள் வரவு நல்வரவாகுக!" என்றேன். ஏற்றுக்கொண்டவன் போல் பசும் புற்கள் நிறைந்த தரையில் அமர்ந்தான் பிரபு. கூடவே புதிய இயக்கப் பொடியனும் அமர்ந்து கொண்டான். கூன் விழுந்து மாநிறத்தில் இருந்தவன் என்னையும், அவர்களையும் பார்த்துவிட்டு, நிலம் பார்த்து நின்றுகொண்டான். அவனுக்கு வயது முப்பதிற்கும் மேலே இருக்கும் போலிருந்தது.

"இப்படியான வாழ்வு உங்களுக்கு மகிழ்வளிக்கிறதா தோழர்?" ஆம் என்று பதில் சொன்னபோது மிலனா ""டாடி" என்று அழைத்தபடி கண்களைக் கசக்கிக்கொண்டு வந்தாள். அவளை  சிறிது நேரம் அமைதியாய் இருக்கும்படி சொன்னேன். இருப்பிடத்திற்குள் சென்றவள் தட்டில் பழங்கள் சில வைத்துக்கொண்டு வந்து  அமர்ந்திருந்தவர்கள் முன்பாக வைத்தாள். பிரபு அதற்காக அவளை பாராட்டினான். கூன் விழுந்தவனின் கைக்கட்டுகளை அவிழ்க்கச் செய்தேன் நான். அவனையும் இரண்டு பழங்கள் சாப்பிடச் சொன்னேன்.
மிலனா அவனுக்கு எடுத்து நீட்ட, எங்காவது கால்முளைத்து பழம் ஓடிவிடுமோ என்ற அவசரத்தில் பிடுங்கி தோலுடனேயே சாப்பிட்டான்.

"யார் இவன்?" என்று தோழரிடம் விசாரித்தேன்.

"பாசிச அரசு ஏற்படுத்திய கஜபா ரெஜிமெண்ட் பிரிவைச் சேர்ந்த ராணுவக் கூலிப்படைக்காரன் இவன். எத்தனை அடிபோட்டாலும் ஒரு வார்த்தை பேசவே மாட்டேன் என்கிறான். ஓலம் மட்டுமே பெரிதாய்ப் போடுகிறான்?"

"இவனை எதற்காக இங்கே கொண்டுவந்தீர்கள்?"

"தோழர் ஜட் இடம் ஒப்படைக்குமாறு கேப்டன் அனுப்பியிருக்கிறார்"

"பின் ஒப்படைக்க வேண்டியதுதானே!"

"எங்களுக்கு இடப்பட்ட வேலை உங்களுடன் முடிகிறது தோழர். அவரிடம் இவனைச் சேர்ப்பது உங்கள் பணி. நீங்கள் மறுத்தாலும் எங்களுடன் இவனை நாங்கள் கூட்டிப் போகப் போவதில்லை. அடுத்த உத்தரவு வரும்வரை இவன் இங்கேயே இருக்கட்டும். கொஞ்சம் ஆபத்தானவன்போல் தோன்றுகிறது. தோழர் கவனமாய் இருங்கள்" என்று சொல்லி விடைபெற்று அவர்கள் இருவரும் சரிவில் இறங்கிப் போனார்கள். கூனன் நிலத்தின்மீது வைத்த கண் வாங்காமல் குனிந்து நின்றிருந்தான். அவனை அமரும்படி சைகையால் சொன்னேன். கட்டுப்பட்டவன்போல அமர்ந்தவனிடம், ""சாப்பிடுகிறாயா? முயல்கறி" என்றேன். வேண்டாமெனத் தலையாட்டினான்.

அவர்கள் சொல்லிப்போனதுபோல் ஆபத்தானவன்தானா? என்ற கேள்வி என்னுள் இருந்தது. ""நீ கூலிப்படைக்காரன் தானா?" என்றேன். "இல்லை' என்று தலையை இருபுறமும் ஆட்டினான்.

"இயக்க ஆட்கள் யாரையாவது கொல்ல முயற்சி செய்தாயா?" என்றதற்கும் தலையை ஆட்டினான்.

"நீ என்னிடம் பேசவேணும். நான் உன்னைத் துன்புறுத்த மாட்டேன். உன் பெயரைச் சொல்லலாம் நீ!" என்றேன். என்மீது நம்பிக்கை கொண்டு தொண்டையை கனைத்துக்கொண்டு பேசினான். பெயர் ரத்தினாயகாவாம். கூலிக்கு பனை தறிக்கப் போவதுதான் வேலை என்றான். தமிழ் அரைகுறையாய்ப் பேசினான்.

சூரியன் மறைந்து இருள் கவியத்துவங்கிற்று! மிலனா கூடாரத்தினுள் விளக்கு ஏற்றியிருந்தாள். ரத்தினாயகாவை கூடாரத்தினுள் அழைத்துச்

சென்றேன். நாங்கள் உணவு எடுத்துக்கொள்கையில் கூடவே அமர்ந்து சாப்பிட்டான். அவன் சாப்பாட்டு அளவு மிலனாவின் சாப்பாட்டு அளவையே ஒத்திருந்தது. சாப்பிட்ட இலையை அவனாக வெளியே எடுத்துப் போனான். இரவு அவன் உறங்க படுத்துக்கொண்டதும், ""தப்பிப் போகும் எண்ணம் இருந்தால் காலையில் போய்விடு... இரவில் போகாதே" என்று சொல்லிவிட்டு படுக்கையில் விழுந்தேன்.

நான் தூங்கி விழித்த சமயம் சூரியன் கிளம்பியிருந்தான். கண்ணைக் கசக்கிக்கொண்டு இருப்பிடத்தை நோட்டமிட்டேன். மிலனாவும், ரத்தினாயகாவும் இல்லை. மிலனா என்று சப்தமிட்டேன். ""டாடி... ஐ.ஆம் இன் ஹியர்" வெளியிலிருந்து அவள் குரல் வந்தது. நான் எழுந்து வெளிவந்து பார்க்கையில் கூனன் முதுகில் ஏறி சவாரி செய்து கொண்டிருந்தாள்

. "ரத்தினாயகா... மூட்டையை வீட்டுல இறக்கு" என்றாள். நான் என் உடைகளை அணிந்துகொண்டு, மிலனாவிடம் சீக்கிரம் வந்துவிடுவதாய்க் கூறிவிட்டு அவனைக் கூட்டிக்கொண்டு சரிவில் இறங்கினேன். அவன் மௌனமாகவே வந்தான். அவனிடம் தெரிந்துகொள்ள எனக்கு எதுவுமில்லை.

அரைமணிநேர நடையில் நாங்கள் பிரதான சாலை ஒன்றை அடைந்தோம். நான் யோசித்திருந்தபடி அவனிடம் விடைபெறுவதற்கான இடம் இதுதான். ஜட்டி- ன் இருப்பிடத்திற்குச் செல்லும் பாதையையும், அவரிடம் இவன் நடந்து கொள்ளவேண்டிய முறைகளையும் சொல்லிவிட்டு நான் வந்த வழியில் திரும்பினேன். குறிப்பிட்ட தூரம் வந்து திரும்பிப் பார்த்தபோது அவன் அதே இடத்தில்தான் நின்றுகொண்டிருந்தான்.

மிலனா என்னிடம் ரத்தினாயகா எங்கே? என்று கேட்டு அழத்துவங்கினாள். ""அவன் நம்கூடவா இருக்க வந்தான்? அவனை காணோம்னு அவன் அம்மா தேடுவாங்கதான!" என்றேன். சிறிது நேரம் அழுதால் சரியாகி விடுவாள் என்று நினைத்து காலை உணவு தயாரிக்கும் பணியில் ஈடுபட்டேன். மிலனாவின் அழுகை தொடர்ந்தபடிதான் இருந்தது! விளையாட்டுக் காட்டிய

பொம்மை காணாமல் போய்விட்டதுபோல தேம்பி அழுதாள். அழுகை ஓயாதுபோல தோன்றிய சமயத்தில் சட்டென அழுகைக் குரல் நின்று போயிற்று.

"டாடி... ரத்தினாயகா வந்துட்டான்... என்னை விட்டுட்டு எங்க போனே நீ? உப்பு மூட்டை தூக்கு" என்றாள். நான் முகம் திருப்பி வெளியே பார்த்தேன். ""எனக்கு அங்க போகணும்னு இஷ்டம் இல்ல சார்" நிலத்தை வெறித்தபடி நின்றிருந்தான் ரத்தினாயகா!

-இனிய உதயம் 2013

# ஆனந்தி வீட்டு தேனீர்

சென்னை செண்ட்ரல் ரயில் நிலையத்தினுள் சாய்வு இருக்கையில் பத்து நிமிடமாக அமர்ந்து எதிர்க்கே தெரிந்த பெரிய மானிடரையே வெறித்துப் பார்த்தபடி இருந்தான் முருகேசன். எந்த எந்த ஊர்கள் செல்லும் ரயில்கள் எந்த எந்த நேரத்தில் கிளம்பும் என்ற தகவலை நிதானமாக காட்டி ஓடிக் கொண்டிருந்தது. இவன் காதினுள் பலத்த இறைச்சலுக்கு இடையிலும் தேனை ஊற்றுவது போல் பெண்ணின் குரல், "பயணிகளின் அன்பான கவனத்திற்கு" என்று ஆரம்பித்து ஊற்றியது. எப்போதுமே பரபரப்பாக இருக்கும் இடம் என்பது போல பயணிகள் வருவதும் போவதுமாகவே இருந்தனர். யாரும் ஒரு கிடையில் அமர நேரமில்லாதவர்கள் போன்றே தென்பட்டார்கள்.

பயணக்களைப்பில் தன் தோளில் தூக்கமாட்டாமல் புளிமூட்டை போல் பேக் ஒன்றை சுமந்து தள்ளாடி வந்த ஜீன்ஸ் அணிந்த யுவதி தன் அம்மாவை திரும்பிப் பார்த்து, மம்மி ப்ளீஸ் என்றது. யுவதியின் அம்மாவோ இரண்டு தோளிலும் பேக்கை சுமந்தபடி மூச்சு வாங்க வந்து கொண்டிருந்தது. முருகேசன் தன் கால்சந்தில் வைத்த இரண்டு புளிமூட்டைகளும் களவு போய்விட்டதோ என்று குனிந்து பார்த்து நிம்மதியானான்.

சென்னையிலிருந்து சொந்த ஊருக்கு திரும்புவது என்பது அங்கு பணி நிமித்தமாக பல மாதங்கள் தங்கியிருந்தோருக்கு எவ்வளவு பெரிய சந்தோசத்தை கொடுக்கும் என்பதை எழுத்தில் காட்டிவிடுவது முடியாத சமாச்சாரம் தான். இமையம் அளவு, வானம் அளவு என்று தொன்னூத்தி

ஒன்பது வாட்டி சொல்லி விட்டார்கள். புதிதாக என்றால் முருகேசனின் பலமாத ஆபிஸ் டென்சன்களையும், பெற்றோரை நேரில் காணாத வருத்தத்தையும் நேற்று மாலை கழுகு ஒன்று கொத்திப் போய்விட்டது என்று சொல்லலாம்.

முருகேசனின் சொந்த ஊர் ஈரோட்டுக்கு பக்கத்தில் சென்னிமலை. குன்றிருக்கும் இடமெல்லாம் குமரனும் இருப்பான் என்பதுபோல சென்னிமலையிலும் குமரன் வீற்றிருந்தான். சென்னிமலையில் தயிர் புளிக்காது என்பது ஐதீகம். ஊர் முழுதும் ஜன நடமாட்டத்துக்கு இணையாக குரங்குகள் நடமாட்டமும் இருக்கும். தவிர மூன்று திரையரங்குகள் தினமும் நான்கு காட்சிகள் ஓடிய காலம் போய் இப்போது ஒன்னே ஒன்னு கண்ணே கண்ணு என்று ஓடிக்கொண்டிருக்கிறது. இதனால் ஊர்முழுக்க போஸ்டர் மட்டுமே தின்று வளர்ந்த ஆடுகளின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது.

கொமரப்பா செங்குந்தர் பள்ளியில் உயர் கல்வி கற்று ஈரோடு வாசவி கல்லூரியில் வேதியியல் துறையில் பட்டம் பெற்றவன் ஊருக்குள் இவன் நண்பர்களைப் போலவே பைசாப் பிரச்சனையால் தறிக்குடோனுக்கு செல்ல முயற்சித்தான். இவன் அப்பா வாசல்படியில் வெள்ளைத்துண்டு போட்டு தாண்டிப் போனால் சுத்தப்படாது என்று தடை போட்டார் அதற்கு. சின்ன வயதிலிருந்தே அப்பாவின் சொல்ப்பேச்சு என்ற வெள்ளைத்துண்டுக்கு மதிப்பு கொடுத்து வந்த முருகேசன் நேசனல் ஜியாகரபியில் புலி, சிங்கம், யானைகளின் குடும்ப வாழ்க்கையை பார்த்தபடி டிவிப் பொட்டியின் முன் கிடந்தான்.

இவன் சென்னைக்கு வீட்டாரிடம் சொல்லிக் கொள்ளாமல் பறந்துவிடவும், வாழ்க்கையில் முன்னேற ஊர்விட்டு ஊர் பறந்துவிட வேண்டுமென்ற பழைய தத்துவத்தை மறுபடியும் இவன் காதினுள் புகுத்திய ஆனந்தி அந்த சமயத்தில் தான் முருகேசனுக்கு தோழியானாள். ஆனந்தி இவனுக்கு பக்கத்து வீடு தான். ஆறு மாதம் முன்பாகத்தான் அவர்கள் குடும்பம் மூன்று மாதம் காலியாய் கிடந்த வீட்டுக்கு வந்து சேர்ந்திருந்தது. நான்கு மாதம் கழித்துத்தான் அந்த வீட்டில் பார்க்க அழகான தாவணி அணிந்த பெண் ஒன்று இருப்பது இவனுக்கு தெரிய வந்தது. ஆனந்தி இவனை விட இரண்டு வயது மூத்தவள்.

கரூரில் எப்போதோ அரசினர் பள்ளியில் பத்தாவது முடித்தவள் இவனை விட தெளிவாயும் அறிவாயும் பேசினாள். அதனால் எல்லாப் பெண்களும் அறிவாளிகள் தான் என்ற முடிவுக்கும் வந்திருந்தான்.இவனுக்கு ஏற்கனவே தெரிந்த இரண்டு அறிவாளிகள்

இவன் அம்மாவும், அக்காவும்.

பல இளைஞர்களின் கனவாய் இருக்கும் சினிமா ஆசை இவன் மனதிலும் அப்போது இருந்தது. கையில் இரண்டு ஸ்கிப்டுகளை வைத்திருந்தான். அதுபோகவும் மனதில் முடிக்கப்படாத சில ஸ்கிப்டுகளும் கிடந்தன. முருகேசனின் முதலாவது ஸ்கிரிப்ட் சென்னிமலையிலேயே ஆரம்பித்து ஊருக்குள்ளேயே முடிந்து விடும் காதல் கதை.

இரண்டாவது ஸ்கிரிப்ட் செக்கோஸ்லோவியாவில் ஆரம்பித்து திருப்புக்காட்சியில் சென்னிமலைக்குள் நடப்பது போல அமைத்திருந்தான். தயாரிப்பாளர் பெரிய கையாய் இருக்க வேண்டும். தவிர நாயகிக்கு இரட்டை ரோல் வேறு. மனிதனாய் பிறப்பெடுத்த யாரும் அளவுக்கதிகமாய் ஆசைப்பட வேண்டுமென்ற கொள்கையுடைய முருகேசன் சீக்கிரமே சோத்துக்கு சிங்கியடிக்கும் நிலைக்கு சென்னை வீதியில் தள்ளப்பட்டான். தன் ஆசைகளை சிலகாலம் மனதில் பூட்டி வைத்துவிட்டு பத்திரிக்கை ஒன்றில் தன்னை நிருபராக ஒப்படைத்தான்.

போஸ்ட்மார்டனிசம், வாதை, கலாச்சாரம் என்று பேசிக்கொண்டிருந்த பத்திரிக்கை இவனுக்கு மூன்றுவேளை சாப்பாட்டுக்கும் அறை வாடகைக்குமான ஊதியத்தை மகிழ்வுடன் அளித்தது. நல்ல கால நேரத்தில் வேறு வாரப்பத்திரிக்கைக்கு தாவி விட்டான் ஊதியம் அதிகமென்பதால். பிறகு ஊருக்கு மாதம் தவறாமல் அம்மா லட்சுமி பெயருக்கு நான்காயிரம் செக் அனுப்பத் துவங்கினான் முருகேசன்.

ஆபீஸில் இவன் துணைக்கு வரும் போட்டோகிராபர் ஸ்வீட்டி மாநகர மங்கை. மாநகரங்கள் இப்படி ஸ்வீட்டிகளுக்காகவே உருவாகி நிற்கின்றன போலும். “ஏனுங்கோ சித்தெ நில்லுங்கோ, வெசயா போவாதீங்கோ” என்று கோவை சரளா மாதிரி கொங்கு பாஷையில் கூப்பிட்டு இவனை தடுமாறச் செய்வாள். மற்றபடி தடை செய்யப்பட்டதை தடையின்றி மென்று கொண்டிருப்பாள். இதெல்லாம் தப்புங்க, என்று சொல்வான் முருகேசன்.

ஐ டோண்ட் லைக் அட்வைஸ் குட்டிப் பையா! என்பாள். சண்டே என் ரூம்க்கு வாடா குட்டிப்பையா, நம்ம கார்ட்ஸ் போடலாம் போரடிக்காது என்றவளுக்கு சலிப்பையே பதிலாக தந்து கொண்டிருந்தான். முன்பு கையில் வைத்திருந்த ஸ்கிரிப்டில் பல மாற்றங்கள் செய்ய வேண்டுமென இவன் கை அரித்துக்கொண்டே இருந்தது. மெட்ரோரயில் திட்டத்தினால் ட்ராபிக்கில் சிக்கியது போல் முருகேசனின் கதை சென்னையில் சிக்கிவிடும் போலிருக்கிறது. அது கூடாது தான்.

கோவை எக்ஸ்பிரசில் பக்கத்தில் அமர்ந்திருந்த பாப்பாவிடம் பத்து வார்த்தைகள் மட்டும் பேசித்தூங்கிப் போனவன் ஈரோடு வந்து தான் விழித்தான். ஈரோடு அவனை வாடா டுபுக்கு, என்று வரவேற்பதாய் நினைத்து இவனாக சிரித்துக் கொண்டான். ரயில்வே ஸ்டேசனில் எந்த மாற்றங்களும் இல்லை. அதே சிவப்பு உடை அணிந்த போர்ட்டர்கள் ட்ராலிகளை தள்ளிப் போனார்கள். அதே ராம்ராஜ் விளம்பரங்கள் தான்.

ஈரோடு பேருந்து நிலையம் போய் அதன் சமீபத்திய அழகை கண்டு சென்னிமலை பேருந்து ஏறலாமென்ற திட்டத்தை ஒதுக்கி விட்டு வழியே வந்த பேருந்திலேயே நெரிசலில் ஏறிக்கொண்டான். நண்பர்களில் யார்யாரை சந்திப்பது என்று திட்டம் போட்டபடி நின்றுகொண்டே பயணித்தான்.

முருகேசனின் முதல் ஸ்கிரிப்டின் நாயகியை அவள் தந்தை அரச்சலூர் மாப்பிள்ளைக்கு கட்டிக்கொடுத்து வருடங்களாகி விட்டது. அவளை குழந்தை குட்டியுடன் தேர்த் திருவிழாவில் பார்த்ததாக நண்பன் யாராவது சொன்னால் இவனால் பெருமூச்சு ஒன்றை விடமுடியும். இவனின் இரண்டாவது ஸ்கிரிப்டின் டபுள்ரோல் நாயகி ஆயிரத்திபத்து காலனியில் கணவனுக்காக கேஸ் அடுப்பு பற்ற வைத்து வடைச்சட்டி எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள்.

முருகேசன் மேலப்பாளையத்தில் தன் வீட்டினுள் நுழைந்தபோது அக்கா தன் கணவரோடு வந்திருந்தாள். அம்மா இவனைப் பார்த்ததும் கூவென அழுகையை ஆரம்பித்து விட்டது. கடைச்சோறு தின்னு எப்புடி எளச்சிப் போயிட்டான் பாருங்க, என்று அழுத அம்மாவை அப்பாதான் அடக்கினார்.

முருகேசன் அப்பாவுக்கு தன் பேக்கிலிருந்து வேட்டி சட்டை எடுத்து நீட்டினான். அம்மாவுக்கும் அக்காவுக்கும் சேலைகள் கொடுத்தான். அக்காவின் பிள்ளைகளுக்கு வாங்கி வந்திருந்த உடைகளை அவர்களிடமே கூப்பிட்டு கொடுத்தான். அப்பா இவன் பிறந்த நாளுக்காக வாங்கி வைத்திருந்த “என் பெயர் பட்டேல் பை” நாவலை கவரிலிருந்து எடுத்துக் கொடுத்தார்.

”ஈரோடு புத்தக கண்காட்சிப்பக்கம் போயிருந்தேண்டா. இவதான் ஒருநாள் கூட உருப்படியா ரசம் வச்சதே இல்லையே. அதான் இவளுக்கு ரசம் வைப்பது எப்படி? புத்தகத்தை தேடிப்புடிச்சு வாங்கிட்டு வந்து குடுத்தேன். இப்ப என்னடான்னா வாயில வைக்க முடியாத அளவுக்கு ரசம் வைக்கிறா” என்றார் அப்பா.

”இப்ப அவன் கேட்டானா ரசத்தைப்பத்தி உங்க கிட்ட? உங்க வாய் இருக்கே சாமீ! நீ போய் குளிச்சுட்டு வாடா இவரு இனி ஒன்னொன்னா எதாச்சும் சொல்லிட்டே தான் இருப்பாரு” என்று அம்மா சொல்லவும் துண்டை எடுத்துக் கொண்டு பாத்ரூமுக்கு நகர்ந்தான். அப்பாவும் அம்மாவும் இன்னமும் சந்தோசமாகவே இருக்கிறார்கள். ஒரு நாள்கூட அப்பா அம்மாவை கைநீட்டி அடித்ததில்லை. அம்மாவைப் போல தனக்கும் ஒரு துணை அமைந்து விட்டால் வாழ்வில் டைவர்ஸ் பிரச்சனையே இருக்காது என்று யோசித்தபடி முதல் சொப்பு தண்ணீரை தலைக்கு ஊற்றினான்.

குளித்து முடித்து சாப்பிட்டு விட்டு ஷோபாவில் அமர்ந்தவன் முன்னால் குட்டிப் பையன் புதுடிரஸ் அணிந்து ஓடி வந்து அழகு காட்டினான். “மாமா பேண்ட் பெருசாப் போச்சுன்னு உங்கக்கா கீழ ரெண்டு மடிப்பு மடிச்சு உட்டிருக்கா! சட்டை பெருசா போச்சுன்னு வவுத்துக்குள்ள உட்டு இன் பண்ணி பெல்ட் போட்டு உட்டுட்டா” என்று அழகு காட்டினான். இதான் சாமி இப்பத்த பேசனு! ஜம்முன்னு இருக்கு மாப்பிள்ளை மாதிரி, என்றதும் ஓடிப்போய் உள் அறையில் அக்காவிடம், உன் தம்பி சொல்லுது ஜம்முன்னு இருக்கேனாம், என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

”ஆனந்தி கல்யாணப் பத்திரிக்கை உனக்கு வந்துச்சாடா முருகேசா? உன்னோட அட்ரசை என்கிட்டத் தான் வந்து கேட்டு வாங்கீட்டு போனாள். நீ எப்படியும் அவள் கலியாணத்துக்கு வருவீன்னு நாங்க பார்த்துட்டு இருந்தோம்” அம்மா இவனிடம் சொல்லிக் கொண்டே வெங்காயம் உறித்துக் கொண்டிருந்தது. அப்பா கறி எடுத்துவர பையை தூக்கிப் போய்விட்டார்.

முருகேசனுக்கு ஆனந்தியின் கல்யாணத்திற்கு வரமுடியாமல் போன துக்கம் மீண்டும் வந்து ஒட்டிக் கொண்டது. இவனின் இரண்டு ஸ்கிரிப்டுகளையும் படித்த ஒரே தோழி அவள் தான். படித்ததும் ஒன்று சொன்னாள்.”உனக்கே ரெண்டு வருசம் போனால் புரிஞ்சிடும் முருகேசு. அப்படி இல்லீன்னா இதே புரிய வச்சிடும்”

ஆறு மாதத்திலேயே புரிந்து கொண்டான் முருகேசன். அன்றிலிருந்து ஆனந்தி வெறும் தோழி மட்டுமல்ல தீர்க்கதரிசினி இவனுக்கு. அம்மாவிடம் நேம்பாய் விசாரித்தான். ஆனந்தியை எந்த ஊருக்கு கட்டிக் குடுத்திருக்கும்மா?

“இங்க தாண்டா இருக்கா கொமராபுரியில. அவ அம்மா கிட்ட எவத்திக்கின்னு கேட்டு ஒருஎட்டு போயிட்டு வந்துடு. போறப்ப சும்மா

வெறுங்கையை வீசிட்டு போயிடாதே. எனக்கு வாங்கிட்டு வந்தியே சேலை பச்சைக்கலர்ல, அதை எடுத்துட்டு போயி குடு. எனக்கு புடிக்கலை. ஆறுமுகங்கடையில வேற பொடிக்கலர்ல எடுத்துக் குடு” அம்மா சொன்னதும் சிரித்துக் கொண்டான். நான் பச்சைய எடுத்துக்கறேன். எம்பட ஊட்டுக்காரருக்கு நீலக்கலரு புடிக்காது, உள் அறையிலிருந்து அக்காவின் குரல் கேட்டது.

கொமராபுரியில் ஆனந்தியின் வீட்டை கண்டுபிடிப்பதில் இவனுக்கு சிரமம் எதுவும் இருக்கவில்லை. என்ன பக்கத்து வீட்டு கதவை தட்டிவிட்டான். கதவு நீக்கி வந்த அம்மாள் இவனுக்கு பக்கத்து வீட்டை கைகாட்டி விட்டு மீண்டும் சாத்திக் கொண்டது. உள்ளே டிவியில் கிரிக்கெட் மேட்ச் ஓடிக்கொண்டிருந்தது. கிரிக்கெட் ரசிகை போலும் என நினைத்தான்.

நல்லவேளை நீ யாரு? எந்த ஊரு? உங்கொப்பா என்ன வேலை பண்றாரு? கையில என்ன பொட்டணம்? உங்கொம்மா ஹவுஸ் வொய்ப்பா? என்ன பாட்டு வேணும்? என்றெல்லாம் கேட்காமல் விட்டதே என்று ஆனந்தி வீட்டு கதவைத் தட்டினான். கதவு நீக்கிய ஆனந்தி முகத்தில் ஆச்சரியம் கால்கிலோ அளவு காட்டி இவனை உள்ளே அழைத்தாள். பழைய ஹாய்டா! சொல்லவேயில்லை. திருமணத்திற்கு வராத கோபமாய் இருக்குமென நினைத்துக் கொண்டான். ஆனால் அதற்கெல்லாம் கோபித்துக் கொள்பவள் இவன் தீர்க்கதரிசினி அல்லவே!

“வாழ்த்துக்கள் ஆனந்தி. உன் திருமணத்திற்கு வரமுடியாமல் போனதற்கு இப்ப மன்னிச்சுடு என்னை” என்றான்.

“பரவாயில்ல விடு முருகேசு, இப்படி ஷோபாவுல உட்கார்ந்து இந்த போட்டோ ஆல்பத்தை புறட்டி பார்த்துட்டு இரு, நான் அதுக்குள்ள உனக்கு காபி தயார் பண்ணி கொண்டு வர்றேன்” என்று சமையலறைக்குள் போய்விட்டாள். ஆனந்தி இவன் மடியில் வைத்துவிட்டுப் போன கனத்த ஆல்பத்தை விரித்தான்.

மாலையும் கழுத்துமாய் ஆனந்தியின் பக்கத்தில் நின்றிருந்தவரைப் பார்த்ததும் அதிர்ந்தான் முருகேசன். ஆனந்திக்கு சித்தப்பா மாதிரி இருந்தார் அவர். தலைமுடி சாயம் பூசப்பட்டிருந்தது அப்படி அழகாய் தெரிந்தது. இந்த ஆல்பத்தை என்னவென்று இனிப் பார்க்க? இதைக் கொண்டுபோய் அதுகிட்ட ஒப்படைத்திருக்கிறார்களே! இதற்கு சொந்தபந்தங்கள் வேறு சாட்சி. இந்த உலகம் ஏன் இவ்வளவு கோரமாகி விட்டது? ஏன் இங்கு வாழ்பவர்களும் இவ்வளவு கோரமாய்

மாறிவிட்டார்கள்?

ஆனந்தி இவனுக்கு காபி கொண்டுவந்து கொடுத்தாள். அப்புறம் முருகேசு லீவுல வந்தியா? சென்னையில எப்படி போயிட்டு இருக்கு பொழப்பு? அவர் ஈரோடு மருத்துவமனையில மருந்து ஆளுனரா இருக்கார். இப்ப வர்ற நேரம் தான். வந்தா என்னை ஏழுநூத்தி முப்பது கேள்வி கேட்டு அடிச்சுடுவாரு, என்று நிதானமாய் சொன்னாள். கிளம்பீட்டின்னா நல்லது என்பதை மாற்றிச் சொல்கிறாள் என்றே நினைத்தான்.

இருந்தும் மேரேஜ் ஆகி மூனு மாசம் இருக்குமில்ல, என்று சம்பந்தமில்லாமல் கேட்டான். தொன்னூத்தி நாலு நாள் ஆச்சு, என்றாள். எல்லாமும் நினைப்பது போல் நடந்துவிடுகிறதா என்ன! ஆனந்தியின் கணவர், “வாசக்கதவை தொறந்து போட்டு வச்சிருக்கியா நீயி” என்றபடி வந்தார். மரியாதைக்காக இவன் எழுந்து நின்றான். அவர் இவனை கண்டு கொள்ளாமல் தன் அறைக்குள் நுழைந்தார்.

“இங்க வா ஆனந்தி” என்று உள் அறையிலிருந்து குரல் கொடுத்தார். காபி எடுத்துட்டு வர்றனுங்க மாமா, என்றவள் காபி டம்ளரோடு அறைக்குள் சென்றாள். உள்ளே நிமிடத்தில் காபி டம்ளர் உருளும் சப்தமும், சக்கரை எதுக்குடி இத்தனை போட்டு எடுத்துட்டு வந்திருக்கே? என்ற அவரின் குரலும் கேட்டது.

இதோ ஒரு நொடியில வேற போட்டு எடுத்துட்டு வந்துடறேனுங் மாமா, சொன்ன ஆனந்தி டம்ளரோடு வெளி வந்தவள் கண்களில் ஈரம்மின்ன இவனைப்பார்த்து கை எடுத்துக் கும்பிட்டாள். இவன் எழுந்து கிளம்பி வாசல் கதவு வருவதற்குள் பின்னால் வந்தவள் இவன் கையில் சேலைக்கவரை திணித்து, சாரிடா! உன் அக்காவுக்கு இதை குடுத்திடு ப்ளீஸ்! என்று சொல்லி விட்டு திரும்பிச் சென்றாள். முருகேசன் முன் கதவை சாத்திவிட்டு பாதையில் இறங்கினான்.

முருகேசன் வீடு வந்தபோது அம்மா தான், “ஏன் இப்படி பேய் அடிச்சா மாதிரி இருக்கே? கொண்டு போன சேலைக் கவரையும் திருப்பிக் கொண்டு வந்துட்டே? ஆனந்திய பார்த்தியா பேசுனியா?” என்று கேட்டது. “புதுசா கல்யாணம் ஆனவங்களை கையில புடிக்க முடியுமா ஒன்னா! அண்ணமார் தியேட்டருக்கு படம் பார்க்க போயிட்டாங்களாம். பக்கத்து வீட்டுல சொன்னாங்க” என்றான் முருகேசன்.

“போச்சாது நாளைக்கு போயி பார்த்துட்டாப் போவுது போ” என்றது அம்மா.

-ஆனந்த விகடன் 2014 மார்ச்

***************

# இரு மனம் விலகுது

பேருந்து நிறுத்தத்தில் லிசி பதட்டமாய் நின்றிருந்தாள். சீக்கிரம் பேருந்து வந்து விட்டால் தேவலை தான். ஆனால், அது உடனே வருவதற்கான அறிகுறி எதுவும் தட்டுப்படவில்லை. லிசியின் பயமெல்லாம் கண்ணன் மீது தான். எப்போதும் இவளுக்கும் முன்பாகவே வந்திருந்து காத்திருப்பவனை இன்று இன்னும் காணோம். நிம்மதியாயிருந்தது.

ஒரு மாதத்திற்கும் முன்பெல்லாம் கண்ணனால் ஒரு சின்னத் தொந்தரவும் இல்லை லிசிக்கு. வெறும் பார்வை மட்டுமே வீசிக் கொண்டிருப்பான். அந்தப்பார்வையிலும் தவறான நோக்கம் எதுவும் இருக்காது. பின் அவனாக இவளிடம் பேச்சுக் கொடுக்க ஆரம்பித்ததிலிருந்து எஃபெம் ரேடியோவில் கடலை போடுவது போல லொட லொடக்க ஆரம்பித்து விட்டான்.

தான் பேசுவது எதிராளிக்குப் பிடிக்கிறதா இல்லையா என்பது பற்றியெல்லாம் கவலையே படமாட்டான். “என் பெயர் கண்ணன்” என்று அறிமுகப்படுத்திக் கொண்டவன் இவள் பெயரை இது நாள் வரை கேட்கவே இல்லை. “இன்றைக்கு நீங்கள் கட்டியிருக்கும் சேலை அழகு” என்பான். பாத்திரக்காரனுக்கு போட்டு விடலாம் போன்றிருக்கும் இவளுக்கு. “சுடிதார் உங்களுக்கு எடுப்பாய் இல்லையே” என்பான். இவன் யார் இதெல்லாம் சொல்வதற்கு?

“பிடிக்கலை” என்று இவள் சொன்னாலும் ஏற்றுக்கொள்பவனாய் கண்ணன் இல்லை. “என்னை மாதிரி பையனை பார்க்கப் பார்க்கத்தான் பிடிக்கும்” என்று திரைப்படத்தில் தனுஷ் பேசுவது போல பேசினான். ’ஒருவேளை அது உண்மை தானோ?’ என்றுகூட இவளுக்கு சந்தேகமாயிருந்தது.

இந்தப் பேருந்திற்கு இன்று என்னவாயிற்று? கர்த்தரே! எஃப் எம் ரேடியோ வருவதற்குள் பேருந்தை அனுப்பி விடுங்களேன். கர்த்தர் இவள் வேண்டுகோளுக்கு செவிமடுக்கவில்லை. அவருக்கு ஆடுகளை மேய்க்கும் வேலை இருக்கிறதல்லவா! கண்ணன் புன்னகை முகத்துடன் இவள் அருகில் வந்து நின்றான். லிசி முகத்தை திருப்பிக் கொண்டாள் வேறு புறமாக.

“ஹலோ... குட்மார்னிங்! அட ஏங்க தலையில கையை வைக்கறீங்க? குட்மார்னிங் சொன்னா திருப்பிச் சொல்லணும். அது தான் முறையும்

வழக்கமும் கூட. நீங்க என்னடான்னா… சரி விடுங்க, என்னைக் காணோமுன்னு தேடிட்டு இருந்தீங்க போல. சாரிங்க, வற்ற வழியில என்னோட சின்ன வயசு கிளாஸ்மேட் மீனா பிடிச்சுட்டா. கல்யாணம் ஆகி கையில பாப்பாவோட இருக்கா. எனக்குத்தான் கொடுப்பினை இல்லை. என்னோட ஆள்காட்டி விரலால உங்க பர்மிஷனோட உங்களை டச் பண்ணட்டுமா? ஷாக் அடிக்குதான்னு செக் பண்ணனும். தினமும் என்னை திட்டவாவது செய்வீங்க… இன்னிக்கு என்ன மௌன விரதமா?” என்றான்.

“என்னோட வீடு, சர்ச் வாசல், போதாதுக்கு கம்பெனி வாசல் வரைக்கும் லோலோன்னு என் பின்னாடி வர்றீங்களே ஏன் இப்படி டார்ச்சர் குடுக்கறீங்க? வேலை வெட்டி ஏதாவது இருந்தா பாருங்க. என் பின்னாடி வர்றது வேஸ்ட்” பேருந்தைக் காணோமே என்று பார்த்தபடி பேசினாள் லிசி.

“ஒரு சுமாரான வாலிபன் ஒரு சுமாரான தேவதையை எதுக்குங்க சுத்துவான்? விரல் சப்புற குழந்தை மாதிரி நீங்க பேசக்கூடாது”

“எனக்குத் தெரியும். ஆனா எனக்கு அதெல்லாம் பிடிக்காத விஷயம். சாமி சாமியா இருப்பீங்க.. என்னை விட்டுடுங்க!”

“சரி விடுங்க உங்களுக்குப் பிடிக்கலைன்னே வச்சுக்கலாம். உங்களை தனிமையில நான் சந்திக்கணும். உட்கார்ந்து பேசணும். இப்படி பஸ் ஸ்டாப்புல பேசுறது எனக்கும் சங்கடம் தான்”

“என்கிட்டே தனிமையில பேசுறதுக்கு என்ன இருக்கு?”

“கரண்ட் பிரச்சனை தீர என்ன வழி? அணுமின் நிலையம் தேவையா? பெங்குவின் ஏன் வருஷத்துல ஒருமுறை மட்டும் துணையைத் தேடுது? இப்படி டிஸ்கஸ் பண்ணலாமுன்னு தான்”

“என்ன நிஜமாவே விளையாடறீங்களா? அதுக்கு நானா கிடைச்சேன்?”

“உங்களுக்கே தெரியும் உலகத்துல எங்கே தேடினாலும் என்னை மாதிரி காதலனை நீங்க கண்டே பிடிக்க முடியாதுன்னு. அது சம்பந்தமாவே பேசுவோமே!”

“இது உங்களுக்கே ஓவரா தெரியலையா? நான் எங்கேயும் வரமாட்டேன். டைம் வேஸ்ட்”

“தங்கள் சித்தம் என் பாக்கியம். சரி விடுங்க.. நாம ஓடிடுவோமா?”

“நீங்க ஓவரா பேசிட்டு இருக்கீங்க.. ஒரு பொண்ணு கிட்ட பேசுற லிமிட் கூடத் தெரியாதா உங்களுக்கு!”

“நம்ம விநாயகர் கோயில் முன்னால வச்சு உங்க கழுத்துல தாலி கட்டிடறேன். அப்புறம் தனிக்குடித்தனம் போயிடலாம் நீங்க விருப்பப்பட்டா. வீட்டுக்கு நீங்க தான் எஜமானியம்மா. ஒரு நல்ல நாள் பார்த்து சொல்லுங்க”

“எதுக்கு?”

“ரன்னிங் போகத்தான். சிரிக்கவே மாட்டிங்களா? கிலோ என்ன விலைன்னு கேட்பீங்க  போல. நம்ம பேருந்து வந்தாச்சு. நான் இன்னிக்கு வரலை. சொல்லிக்காம போறீங்களே!”

“அப்படித்தான் செய்வேன்” வந்து நின்ற பேருந்தில் ஏறி, ஒரு பார்வை பாராமல் செல்லும் லிசியை வேதனையோடு பார்த்தபடி நின்றான் கண்ணன்.

அடுத்த நாள். பேருந்து நிறுத்தத்தில் லிசி வருவதற்கும் முன்னதாகவே வந்து நின்று காத்திருந்தான் கண்ணன். லிசி பலத்த யோசனையோடு தான் அன்று வந்தாள். தினமும் தொல்லை தரும் கண்ணனோடு நட்பாய் பழகினால் தான் என்ன? யார் இவன்? என்ன வேலையில் இருக்கிறான்? குடும்பம் எப்படி? நிஜமாகவே என்னை விரும்புகிறானா? இல்லை பொழுது போக்கிற்காகவா? கெட்டவன் போலவும் அப்படியொன்றும் தெரியவில்லையே! இப்படி யோசனைகளோடு நிறுத்தம் வந்தாள்.

“நல்ல நாள், நல்ல நேரம் எல்லாம் பார்த்துட்டேங்க. ஞாயிற்றுக்கிழமை காலை எட்டிலிருந்து ஒன்பது மணி வரைக்கும் நல்ல நேரம். இந்த டிவியில எல்லாம் காலையில ராசிபலன் சொல்வாரே... அவர் கிட்டவே கேட்டுட்டேன்”

“எதுக்கு?”

“தாலி கட்டிக்கத்தான்... ஹா! கோபமா? சரி உங்க விருப்பப்படி மோதிரம் மாத்திக்கலாங்க லிசி”

“என் பெயர் எப்படி உங்களுக்குத் தெரியும்?”

“உங்க டேட் ஆஃப் பர்த்தே தெரியுங்க சொல்லவா?”

“இன்னும் என்னென்ன விஷயம் என்னைப்பத்தி துப்பறிஞ்சு கண்டு பிடிச்சிருக்கீங்க?”

“பூப்போல மனசு இருக்கிற பெண் லிசி. அப்புறம்.. அட உதட்டை

சுழிக்காதீங்க லிசி. ஆனா அதுகூட உங்களுக்கு அழகாத்தான் இருக்கு. உயர்வு நவிற்சி அணியில பேசினால் தான் பெண்பிள்ளைகளுக்கு பிடிக்குமே!"

"எத்தனை அனுபவமோ!" என்று லிசி சொன்னதும் கண்ணனின் முகம் இருண்டு போனது. எதுவும் பேசாமல் முகத்தை தொங்க வைத்துக் கொண்டான். மேற்கொண்டு அவன் எதுவும் பேசவில்லை.

பேருந்து ஏறுகையில் வழக்கமாக லிசி ஏறும் முன்புற படிக்கட்டுகளில் ஏறாமல் பின்புற படிக்கட்டில் ஏறிக் கொண்டான். பேருந்தினுள் இருபது டிக்கெட்டுகள் நின்றபடி பிரயாணம் செய்து வந்திருந்தன.எப்போதும்போல டிரைவர் இருக்கைக்கு அருகில் சென்று நிற்பவள், ஊனமுற்றோருக்கான இருக்கை அருகில் நின்று பின்புறம் கண்ணனைத் தேடினாள். நெரிசலில் ஒதுங்கச் சொல்லி வழக்கம்போல அவன் முன்புறமாக வரவும் இல்லை. படிக்கட்டின் அருகேயே இவளைப் பார்த்தவாறு தான் நின்றிருந்தான் என்றாலும் முகம் வாட்டத்துடன் இருப்பதை இங்கிருந்தே லிசி உணர்ந்தாள்.

இப்படி தொட்டால் சிணுங்கியாய் இருப்பான் என்று லிசி எதிர்பார்க்கவில்லை அவனை. 'இவள் அருகில் நின்றிருக்கும் வேறு பெண்களைப் பார்க்கிறானா?' என்று ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தாள். இதற்கும் முன்பு கூட அப்படி அவனை இவள் கவனித்திருக்கிறாள்தான். 'ஆஹா அழகு' என்றுகூட அவன் மற்ற பெண்களைப் பார்ப்பதில்லை. நடத்துனரிடம் ஸ்டாப்பிங் சொல்லி டிக்கெட் வாங்கிக் கொண்டாள்.

அடுத்த இரண்டு நிறுத்தங்களில் கணிசமாய் ஜனங்கள் ஏறவே பேருந்து நிரம்பி வழிந்தது. நடத்துனர் இப்போது பின்னால் கண்ணன் அருகில் தான் கம்பியில் சாய்ந்தபடி நின்று டிக்கெட் கிழித்துக் கொடுத்தபடி இருந்தார். ஏறியதிலிருந்து லிசி அவனைக் கவனித்தபடி தான் இருந்தாள். கண்ணன் டிக்கெட் எடுக்கவேயில்லை. நடத்துனரை அவன் கண்டு கொண்டதாகவும் காட்டிக் கொள்ளவில்லை. மூன்று ரூபாய் டிக்கெட் எடுப்பதில் கூட திருட்டுத்தனமா?

'முகத்தை தொங்க வைத்துக் கொண்டானே என்று வருத்தப்பட்டேனே! சே.. பார்க்கப் பார்க்கத்தான் பிடிக்கும் என்றானே! நட்போடு பழகலாம் என்று நினைத்தேனே. கர்த்தரே! என்னைக் காத்தீர்கள்!'

இறங்கும் நிறுத்தம் வந்தும் லிசி இறங்கி தன் கம்பெனி நோக்கி

நடையிட்டாள். ‘கண்ணன் இறங்கினானா.. இல்லை, பேருந்திலேயே செல்கிறானா?’ என்று கூட அவனைக் கவனிக்கவில்லை இவள். இனி அவனைக் கவனித்து என்னவாகப் போகிறது? மூன்று ரூபாய் டிக்கெட் எடுப்பதில் ஏமாற்றத் துணிந்தவன் இன்னும் என்னவென்ன ஏமாற்றுகள் செய்வான்.

நிறுத்தத்தில் இறங்கிய கண்ணன், என்ன வருத்தமிருந்தாலும் பின்னால் வருகிறானா என்று எப்போதும் பார்த்து முறைத்தபடியாவது செல்பவள் ஏனோ இன்று திரும்பிப் பாராமல் செல்கிறாளே என்ற தவிப்பில் அங்கேயே நின்று விட்டான்.

இந்தப் பெண் பின்னால் பித்துப் பிடித்து அலைவது அவளே சொன்னது போல் டைம் வேஸ்ட் தானோ! காலம் போகும் வேகத்தில் காதலுக்காக இப்படித் தவித்து நிறுத்தத்தில் நிற்பது இவனுக்கே வெட்கமாயிருந்தது. பார்க்கும் முகங்களெல்லாம் பணத்தேடலில் அலையும் முகங்களாகவே தான் இருந்தன. உண்மைக்காதலோ, பொய்க்காதலோ இதையெல்லாம் மெனக்கெட்டு செய்து கொண்டு தவிப்பாய் இரவுகளைக் கழிக்க பெண்களும் கால ஓட்டத்தில் தயாரில்லை போலத்தான் உள்ளது.

காதல் என்ற பைத்தியக்குழியில் இனி காலம் முழுவதும் விழவே கூடாது என்ற முடிவில் திரும்பி நடந்தான் கண்ணன்.

முற்றும் போட வேண்டிய இடத்தில் படைப்பாளியாகிய நான் லிசியைப் பார்த்து, ‘மேடம்! கண்ணன் உங்களுக்காகவே பேருந்தில் மாத பாஸ் கார்டு வாங்கித்தான் பயணிக்கிறான்’ என்று சொல்லலாம். இதற்காக நான் ஈரோட்டிலிருந்து மதுரை வரை பயணிக்க வேண்டும். அப்படிச் சொன்னால், லிசி மன்னிப்பு கேட்கவும் நட்போடு பழகவும் கண்ணனைத் தேடுவாள். கண்ணனோ அடுத்த நாளே வேலை நிமித்தமாக சென்னை சென்று விட்டான். எந்த மூலையில் சென்னையில் அவன் இருக்கிறான் என்று எனக்குத் தெரியாது.

-குங்குமம், 28.1.13

# இருக்கிறார்கள் மனிதர்கள்

இப்படி இக்கட்டான சூழ்நிலையில் மாட்டிக்கொள்வோம் என்று ரூத் நினைத்துக்கூட பார்க்கவில்லை. இப்படியான சூழலில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்று கூடத் தெரியாமல் கையைப் பிசைந்து கொண்டு ஆதரவற்று நின்றிருந்தாள். எனக்கு கையும் ஓடலை, காலும் ஓடலை என்று கோவையில் இருக்கும் இவள் அக்கா தான் அடிக்கடி சொல்வாள். இப்போது தான் ரூத்திற்கு அந்த வார்த்தையின் முழு அர்த்தமும் தெரிந்தது.

ரூத்தின் பதட்டத்திற்கு காரணம் பிட்டர் ஐயா இறந்து விட்டது தான். கடந்த நான்கு மாதமாக அவருக்கு வேளாவேளைக்கு மாத்திரைகளையும், டானிக்குகளையும் கொடுத்து கவனித்துக் கொள்ளும் பணிப்பெண்ணாய்த் தான் டெய்ஸியம்மா இவளை நியமித்திருந்தாள். டெய்ஸியம்மா வேறு யாருமில்லை. பீட்டரின் மனைவி தான். இருவருக்கும் வயது வித்தியாசம் என்று பார்த்தால் பதினைந்து வருடங்களாவது இருக்கும். டெய்ஸியம்மாவின் தலைமுடிக்கற்றைகளில் ஒன்றிரண்டு இப்போது தான் நரைக்கத் துவங்கியிருந்தன.

இந்த ஈரோடு நகரில் அரசாங்கப்பள்ளி ஒன்றில் ஆசிரியையாக பணியாற்றிக் கொண்டு இருக்கும் டெய்ஸியம்மாவுக்கு வயது நாற்பத்தியெட்டு ஆகிறது. ராணுவத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த பீட்டர் ஐயாவை இவள் மணந்து கொண்டபோது வயது இருபத்தி நான்காம். இத்தனை வருட தாம்பத்ய வாழ்வில் தன் வயிற்றில் ஒரு புழு பூச்சி கூட உதிக்கவில்லையே என்ற ஏக்கம் டெய்ஸியம்மாவின் மனதில் இருப்பதை வந்த கொஞ்ச நாளில் ரூத் உணர்ந்து கொண்டாள்.

பீட்டர் ஐயா ஒரு இதய நோயாளி. பணம் உள்ளவர்களுக்கு கடவுள் ஏதோ வகையில் நோயையும் கொடுத்து அவர்களை அவஸ்தைக்கு உள்ளாக்கி விடுகிறார் என்றே ரூத் நினைத்திருந்தாள். ஆனாலும் இது டெய்ஸியம்மாவின் குடும்பத்திற்கு அதிகம் தான் என்றும் நினைத்தாள். ஏற்கனவே குழந்தை பாக்கியத்தை கடவுள் பறித்துக்கொண்டாரே! பின் எதற்காக இந்த வியாதியும்?

நோயாளிக் கணவரை  கவனித்துக் கொள்ள பெண் தேவை என்ற பேப்பர் விளம்பர வரிகளைக் கவனித்துத் தான் ரூத் தன் அக்காவிடம் அதை காட்டினாள். அது மளிகைக் கடையில் கடலை மாவு வாங்கி வருகையில் அதைக் கட்டிக்கொடுத்த காகிதம். எந்த மாதத்தின், எந்த

வருடத்தின் துண்டுப்பேப்பர் என்று கூட இவளுக்கு தெரியாது. இருந்தும் அக்கா வீட்டில் தனக்கிருக்கும் பிரச்சனைகளை மனதில் உணர்ந்தவளாய் விளம்பர வாசகங்களின் கீழ் இருந்த எண்களுக்கு தொடர்பு கொண்டாள்.

ரூத் தான் பனிரெண்டாவது வரை படித்த விசயத்தையும், மேற்கொண்டு படிக்க இயலாத வறுமையையும், அப்பா, அம்மா தன்னை விட்டுப்போன துக்கமான செய்தியையும் அக்காவின் கணவர் தன்னை இரண்டாவது மனைவியாக அடைய வலை விரித்திருப்பதையும் எதிர்முனையில் கேட்டுக் கொண்டிருந்த டெய்ஸியம்மாவிடம் விவரித்தாள். எல்லா தகவல்களையும் கேட்டுக் கொண்ட டெய்ஸியம்மா பெருமூச்சு விட்டாள்.

அந்த விளம்பரத்தை பேப்பரில் கொடுத்து ஒரு மாத காலம் ஆகி விட்டதாகவும், ஒன்றிரண்டு பெண்கள் இரண்டாயிரம் என்ற சம்பளத் தொகை போதாது என்றதாகவும், வீட்டிலேயே தங்கிக் கொள்ளும் யோசனையை அவர்கள் நிராகரித்து விட்டதாகவும் கூறியவள் இதற்கெல்லாம் சம்மதமா? என்று கேட்கவும் ரூத் உடனே சம்மதித்தாள். மேலும் டெய்ஸியம்மாவின் குரல் இறந்து போன தன் அம்மாவின் குரலை ஒத்திருப்பதையும் உணர்ந்தாள். அக்கா தன் ஒரே தங்கையை இப்படி அனுப்புவதற்காக அழுதாள். மாறாக வேறுவழி ஏதுமில்லாத நிலையை எண்ணியும் அக்கா அழுதாள். அழுவதைத் தவிர அவளுக்கு வேறு எதுவும் தெரிந்திருக்கவில்லை.

டெய்ஸியம்மா ரூத்தை தன் குடும்பத்தில் ஒருத்தியாகவே பாவித்தாள். அவர்களுக்கு குழந்தை என்று பிறந்து அதுவும் பெண்ணாக இருந்திருந்தால் தன் வயது தான் இருக்கவேண்டும் என்று ரூத் நினைத்துக் கொண்டாள். போதாதற்கு பீட்டர் ஐயா எந்த நேரமும் கட்டிலில் இருந்தாலும் இவளை, ‘வா மகளே’ என்றே தான் குரல் நடுங்க கூப்பிடுவார். மாத்திரைகள் மீது அவர் தீராத வெறுப்பு கொண்டிருந்தார். சிறு குழந்தைகள் அடம்பிடிப்பது போன்றே முகத்தை திருப்பிக் கொண்டார். வயதானவர்கள் குழந்தைகள் தான் என்று எங்கோ படித்த நினைவு இவளுக்கு வந்தது.

வந்த சில நாட்களில் தன்னை அந்த குடும்பத்தில் ஒரு அங்கமாக இணைத்துக் கொண்டாள் ரூத். டெய்ஸியம்மா தினமும் பள்ளிக்கு கிளம்பும் சமயம் வீட்டை உள்புறமாக தாழிட்டுக் கொள், ஏதாவது அவசரம் என்றால் செல்போனிற்கு கூப்பிடு, வீதியில் காய்கறிக்காரன் சென்றால் குரல் கேட்கும், போனமுறை முற்றிப்போன கத்தரி,

வெண்டையை பொறுக்கி எடுத்துவிட்டாய்! என்று ஏதாவது விசயத்தை இவளிடம் சொல்லிச் சென்றாள். ஏனோ தனக்கு சம்பளம் தரும் எஜமானியம்மாவின் குரல் போல டெய்ஸியம்மா சொல்லும் பேச்சுகளை இவள் எடுத்துக் கொள்ளவில்லை. அம்மாவே சொல்லிச் செல்வதாய் உணர்வாள். ஆனால் இதுவெல்லாம் எத்தனை நாளைக்கு? என்ற கேள்வி அவளுக்குள் இருந்து கொண்டு மிரட்டிக் கொண்டேயிருந்தது.

முதல் மாத சம்பளப்பணம் உனக்கு! என்று டெய்ஸியம்மா இவளிடம் கவரை நீட்டிய போது அதை கைநீட்டி வாங்கிக் கொள்ள கூச்சப்பட்டாள் ரூத். ’உங்ககிட்டயே இருக்கட்டும்மா! எனக்கு இப்போ எந்த செலவும் இல்லை. பின்னாடி வாங்கிக்கறேன் எனக்கு தேவை என்கிற போது’ என்று சொல்லிவிட்டு அங்கே நிற்கப்பிடிக்காமல் சமையல் அறையில் வேலை இருப்பது போல் நுழைந்து கொண்டாள். டெய்ஸியம்மா ரூத்தை வற்புறுத்தி ’வாங்கிக்க ரூத்’ என்று சொல்லவில்லை. பின்வந்த மாதங்களில் ரூத்திற்கு சம்பளம் தரவேண்டுமென்ற எண்ணமே இல்லாத ஒரு பெண்மணியாகவும் டெய்ஸியம்மா மாறிப்போனாள்.

பீட்டர் ஐயா நல்ல உறக்கத்தில் இருகிறார் என்று தான் நினைத்துக் கொண்டிருந்த ரூத் வீட்டில் கீழ் ஹாலில் ரமணிசந்திரன் நாவல் ஒன்றில் ஆழ்ந்திருந்தாள். அந்த நாவலில் இவளைப்போன்றே ஒரு பெண் ஒரு நோயாளியை கவனிக்கும் பொறுப்பில் இருந்தாள். ஐந்துமணியைப் போல எப்போதும் அவர் விழித்துக் கொண்டிருப்பார் என்றே மாடிப்படிகள் ஏறிச் சென்றாள். அவர் அரையில் நுழைந்தவள் எதேச்சையாகத்தான் அவர் உதட்டினோரம் ரத்தம் கசிந்து கொண்டிருப்பதை கவனித்தாள். பதை பதைத்து கட்டிலின் அருகே ஓடிச் சென்று, ‘ஐயா! ஐயா!’ என்று கூப்பிட்டுப் பார்த்து ஏமார்ந்தாள். சவத்தின் களை அந்த முகத்தில் ஒட்டியிருந்தது. நாசித்துவாரம் அருகே விரல் வைத்துப் பார்த்தால். அவளுக்கு பயம் பிடித்துக் கொண்டது. மகளே! என்றழைக்கும் பீட்டர் ஐயா அல்ல அவர். பிணம்! சுவாசிப்பதை நிறுத்திக் கொண்ட உடல். பயந்து போய் அறையை விட்டு வெளியேறியவள் படிகளில் நிதானமின்றி கீழிறங்கி ஹாலில் ஷோபாவில் வந்தமர்ந்தாள். அவள் இதயம் தாறுமாறாக துடித்தது.

ரூத் வந்த நாளில் இருந்து சொந்தம் என்று சொல்லிக் கொண்டு யாரும் டெய்ஸியம்மாவின் வீட்டுக்கு வரவில்லை. மேலும் தனக்கு இன்ன இன்ன ஊரில் இப்படி இப்படி சொந்தம் இருக்கிறது என்றும் கூட டெய்சியம்மா சொல்லி இவள் கேட்டிருக்கவில்லை. இருந்தும் ஹாலில் போன் அருகே இருந்த நீலவர்ண டைரியில் இருந்த பத்து, இருபது

எண்களுக்கும் ரிங் அடித்து இந்த மாதிரி இந்த மாதிரி என்று சரியாய் வார்த்தை வெளிவராமல் தயங்கித் தயங்கி தகவலைச் சொன்னாள். அவர்கள் எல்லோருமே யாரம்மா நீ? என்றே கேட்டார்கள். இவளுக்கு பதில் சொல்ல சிரமமாய் இருக்கவே நர்ஸ் என்றாள். அவர்களோ பீட்டர் பாடி எங்கிருக்கு? ஹாஸ்பிடல்லயா? வீட்டுலயா? என்று கேட்டுத் துளைத்தார்கள்.

இடையில் ஒரு எண்ணில் பேசியவர் ஆசிரியை போல் உள்ளது. 'போச்சா! சென்னை போக வேண்டாமடி வீட்டில் இப்படி இருக்கும் போது என்றேன். அவள் கேட்கவேயில்லை. டெய்ஸிக்கு தகவல் சொன்னியாம்மா?' என்றார். 'அவங்க செல்போன் லைனே கிடைக்க மாட்டிங்குது' என்றாள் ரூத். 'எப்படி கிடைக்கும்? ட்ரெய்ன்ல போறப்ப அவ்ளோ சீக்கிரம் கிடைக்காதே! எதுக்கும் நானும் ட்ரை பண்ணுறேன்' என்றவருக்கு தேங்ஸ் சொன்னாள் ரூத். இவள் போனை வைத்ததும் அது நீளமாய் அலறியது. எடுத்து ஹலோ! என்றாள் ரூத்.

"நான் டெய்ஸி பேசுறேம்மா ரூத்.. சென்னையில இப்போத்தான் இறங்கினேன்" என்று அவர் பேசத்துவங்கியதுமே இவள் அழத் துவங்கினாள். டெய்ஸியம்மா இவள் அழுகையிலேயே உணர்ந்து கொண்டாள். 'கூட வேலை செய்யுற டீச்சர் பொண்ணோட கல்யாணமுன்னு கிளம்பினேன் பாரு. வேண்டாம் வேண்டாமுன்னு சொன்னாங்க. கேக்காம மடச்சி நான்' என்று டெய்ஸி தன்னையே நொந்து கொண்டி அழத்துவங்கினாள் போனில். கடைசியாக, 'சரி சரி நான் திரும்பிடறேன்' என்றவர் போனை கட் செய்து கொள்ளவும் இவள் ரிசீவரை வைத்துவிட்டு கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

ஆண்கள், பெண்கள் என சிறு கூட்டம் வீட்டினுள் நுழைந்ததும் இவளுக்கு சற்று தெம்பு வந்தது. அவர்களை மாடிக்கு அழைத்துச் சென்றாள். அவர்கள் பீட்டர் ஐயாவைச் சுற்றிலும் மௌனமாய் நின்று கொண்டார்கள். வந்தவர்களுக்கு காபி தயாரிக்கலாமா? குடிப்பார்களா? என்ற சந்தேகத்தில் கைபிசைந்து நின்றாள். எல்லோருமே கருங்கல்பாளையம் உள்ளூர் தான் போலுள்ளது. அவர்கள் எல்லோரையும் இப்போது தான் முதலாய் பார்க்கிறாள். அவர்களுக்கும் இவள் யார்? என்ற விபரம் தெரியாமல் இவளிடம் துக்கம் விசாரிக்க தயங்கினார்கள். டீச்சரைக் கேட்டார்கள். இவள் விசயத்தை சொன்னதும், 'எப்படியும் இனி காலையில் தான் வந்து சேருவாங்க! காத்தால வந்து பார்த்துக்கலாம்' என்று அவர்களாகவே பேசிக் கொண்டு படியிறங்கினார்கள்.

அவர்கள் அனைவரும் சென்ற பிறகு மேலும் இரண்டு மூன்று பேர் வந்தார்கள். இழவு விழுந்த வீடு மாதிரியே தெரியலையே, ஏப்பா வந்த போனு நெசமாப்பா? என்று பேசிக் கொண்டே வந்தார்கள். அவர்களையும் மேலே கூட்டிப்போய் பீட்டர் ஐயாவின் சடலத்தை காட்டினாள். ஒருவர் மட்டும் நிலமையை புரிந்து கொண்டு ஐஸ்பெட்டிக்காரனுக்கு தகவல் கொடுத்தார். பதினைந்து நிமிடத்திற்குள் மினி ஆட்டோவில் கண்ணாடிப் பெட்டி வந்து சேர்ந்தது. அவர்கள் ஐயாவை பெட்டியினுள் படுக்கவைத்து விட்டு காலையில் வருவதாக சொல்லி போய் விட்டார்கள். நேரமும் இரவு எட்டு மணி ஆகிவிட்டது. ஐஸ் பெட்டிக்கு ஏற்பாடு செய்த நபரும், ‘நான் போறேன்மா’ என்றபோது இவளுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. எனக்கு பயமாயிருக்கு இருங்க இங்கேயே! என்று எப்படி அவரிடம் சொல்வாள்?

அவரும் சென்ற பிறகு ரூத் என்றுமில்லாத நிரந்தரத் தனிமையை உணர்ந்தாள். மேலே பெட்டியில் இருக்கும் பிணத்தின் நினைப்பை மறக்க முடியவில்லை. ரூத் சின்னவயதிலிருந்தே பிணம் என்றால் பேய் என்று பயப்படுவாள். பிணம் வீதியில் சென்றால் கூட அந்த வீதியில் நடக்க மாட்டாள். விதவிதமான கற்பனைகள் அவள் மனதில் தோன்ற ஆரம்பித்தன. ஐயாவின் உயிர் இந்த வீட்டில் சுற்றிக் கொண்டிருக்குமோ என்று அச்சம் கொண்டாள். வெளியே இவர்களின் வளர்ப்பு நாய் திடீரென குரைக்கத் துவங்கியது. ’டாமி சும்மாயிரு’ என்றாலும் அது இடைவிடாமல் குரைத்தது. வீட்டுக்கு பலர் வந்து போனதை அது புதிதாய் கண்டதால் அப்படி குரைத்தது. சமயத்தில் மின்சாரம் வேறு போய் விட்டது. கருங்கல்பாளையமே இருட்டில் மூழ்கி அமைதியானது.

ஹாலில் டெலிபோன் அலறல் துவங்கியது. இரவு என்பதால் அதன் ஒலி கணீரென கேட்டது. ரூத் பயத்துடன் இருட்டு ஹாலில் டெலிபோன் நோக்கிச் சென்று அதை காதில் எடுத்து வைத்தாள். டெய்ஸியம்மா தான். மாடியறையில் ஐயாவின் டேபிள் மீது சிவப்பு வர்ண டைரி இருப்பதாகவும் அதில் முதல் பக்கத்தில் பச்சை வர்ணத்தில் மூன்று போன் எண்கள் இருக்குமெனவும் அவர்களுக்கு உடனே தகவல் சொல்லிவிடு என்றும் சொல்ல இவள் தன் நிலையை சொல்ல ஆரம்பித்த போது கட்டாகி விட்டது. ரூத் மெழுகுவர்த்தி மூன்றை பற்ற வைத்து அறையில் ஒளி ஏற்றினாள்.

மனதை திடமாக்கிக் கொண்டு கையில் பிடித்திருந்த மெழுகுவர்த்தியுடன் மாடிப்படிகள் ஏறினாள் ரூத்.டெய்ஸியம்மா சிவப்பு நிற டைரியை அந்த அறையிலா வைத்திருக்க வேண்டும்? தன் பின்கழுத்துக்கு அருகே யாரோ பெரிதாய் மூச்சு விடுவதைப் போன்று

உணர்ந்து திடுக்கிட்டு நின்றாள். பிணம் இருக்கும் பக்கம் பார்க்கவே கூடாது, பார்க்கவே கூடாது என்று தனக்குள் சொல்லிக் கொண்டே ஐயாவின் அறையில் நுழைந்தவள் பார்வை பிணத்தை நோக்கித் தான் சென்றது. வீல் என்று அலறியவள் மெழுகுவர்த்தியை இறுக்கமாய் பிடித்துக் கொண்டே கண்ணிமைக்கும் நேரத்தில் படியிறங்கி தட தடவென வந்தவள் ஹாலையும் தாண்டி வெளி வாயிலுக்கு வந்தாள். இது தனக்கு தேவையா? என்ற பச்சாதாபத்தில் வீறிட்டு அழத் துவங்கினாள். நாய் இன்னமும் இருட்டை நோக்கி குரைத்தபடி தான் இருந்தது. சமயத்தில் மின்சாரம் வந்ததும் தெருவிளக்குகள் பளீரிட்டன.

வாசல்படியில் குனிந்த வாக்கில் அமர்ந்து அழுது கொண்டிருந்தவள் முன்பாக ஜான்சன் வந்து நின்று, 'ஏங்க!" என்றான். ஜான்சன் எதிர் வீடு தான். அவனும் அவன் அம்மாவும் மட்டுமே இருப்பது இவளுக்குத் தெரியும். டெய்ஸியம்மா இவனைப்பற்றி நல்லவிதமாய் சொல்லியிருக்கவில்லை. மனைவியைக் கொன்று தூக்கில் தொங்க விட்டவன் என்று தான் சொல்லியிருந்தார். இப்போது தன் எதிரே நிற்கும் அவன் முகம் பார்த்தால் முகப்பு விளக்கில் ரூத். இப்போதைக்கு இவனாவது கிடைத்தானே என்று முகத்தை துடைத்துக் கொண்டாள். 'நீங்களா இப்ப பயந்து கத்துனீங்க?' என்றவனிடம் விசயம் பூராவும் சொன்னாள். கடைசியாக மாடியில் இப்போ வேற பிணம் கிடக்கு! என்றாள்.

"உங்களுக்கு பயம்.. வேற பிணம் எங்க இருந்துங்க வந்துச்சு? அவரோட உடல் கறுத்துப் போயிருக்கும். சரி வாங்க நான் அந்த டைரியை எடுத்துத் தர்றேன்" என்றவனை வீட்டினுள் கூட்டிப் போனாள் ரூத். மாடியேறிச் சென்று பீட்டர் ஐயாவின் அறைக்கு வெளியே நின்று கொண்டாள். ஜான்சன் அறைக்குள் சென்று டேபிளின் மீதிருந்த டைரியை எடுத்துக் கொண்டு வெளியில் வந்தான். 'எதிர் வீட்டுல பத்து வருசமா இருக்கேன். இன்னிக்கித் தான் இந்த வீட்டுக்குள்ள வர்றேன். எந்த நேரமும் இந்த வீடு பேய் வீடு கணக்கா சாத்தியே கிடக்கும். அந்த டீச்சர் யார் கிட்டவும் பேச்சே வெச்சுக்க மாட்டாங்க' என்று பேசிக்கொண்டே ஹாலுக்கு இருவரும் வந்தார்கள். டைரியில் இருந்த எண்களுக்கு ஜான்சனே தகவலைச் சொன்னான். இப்போது இவனை முழுதாக நம்பலாமா? என்ற பயமும் இவளுக்கு சேர்ந்து கொண்டது. பெரிய வீடு, தனியாக வேறு நானொருத்தி, இரவு மணி வேறு ஒன்பதை தாண்டிவிட்டது. இவன் கொலைகாரன் என்று வேறு அம்மா சொன்னதே! வாழ்நாளில் ஒரே நாளில் இத்தனை பயங்களுடன் ஒரு நாளைக்கூட கழித்ததே இல்லை என ரூத்

நினைத்தாள்.

”சாப்பிட்டு இருக்க மாட்டீங்க நீங்க, வாங்க எங்க வீட்டுக்கு. அம்மா இருக்கு. கூட்டாஞ்சோறு தான் இன்னிக்கி எங்க வீட்டுல” என்றவனிடம் ’பசிக்கலை’ என்றாள். ‘பிணம் இருந்தா உங்களை அது என்ன பண்ணுது? அதுக்காக பசியோட இருக்கணுமா?’ என்றான் ஜான்சன். ‘பயந்து பயந்தே எனக்கு வயிறு நிரம்பிடுச்சுங்க’ என்றாள் ரூத். அவன் சிரித்தான். இவனா மனைவியை கொன்றிருப்பான்? ‘எங்கம்மாகிட்ட சொல்லிட்டு வந்துடறேனுங்க. போனவனை காணோமுன்னு இருப்பாங்க. மறுபடியும் பயந்து கத்திடாதீங்க’ சிரித்தபடி சொல்லிவிட்டு சென்றவன் திரும்பி வருகையில் கையில் ஹார்லிக்ஸ் டம்ளரோடு வந்தான். இவள் மறுக்காமல் வாங்கிக் கொண்டாள். கடைசிக்கு இவனாவது என் பயத்தை உணர்ந்து துணைக்கு வந்தானே! என்றிருந்தது.

ஜான்சன் ஒரு ஷோபாவிலும், ரூத் ஒரு ஷோபாவிலும் ஒருவர் முகம் ஒருவர் பார்த்தபடி அமர்ந்து கொண்டார்கள். டிவி பார்ப்போமா? என்றவனிடம் ’பிணம் இருக்குற வீட்டுல தப்புங்க’ என்று சொன்னதும் ’சரி’ என்று சொல்லிவிட்டு சாய்ந்து கொண்டான் ஷோபாவில்.

இவள் தன் வாழ்க்கைச் சுருக்கத்தை அவனிடம் சொல்லி முடித்தாள். அவனைப் பற்றியும் விசாரித்தாள். தனியார் பேருந்தில் டிரைவர் என்றும், பிடிவாதக்காரியை மணந்து கொண்டு வாழ்க்கையில் பட்ட வேதனைகளை மறக்கவும், மறுக்கவும் முடியாமல் சொன்னான். அல்ப விசயத்துக்காக தூக்குப் போட்டுக் கொண்டவளை இன்னமும் மன்னிக்க தயாரில்லை என்றான். அப்படியே தூங்கியும் போனான். மனதில் வஞ்சகமும் கவலைகளும் இல்லாதவர்கள் தான் படுத்தவுடன் தூங்குவார்களாம். இதை ரூத் எண்ணிக் கொண்டாள். இவனும் இங்கில்லை என்றால் விடிவதற்குள் பயத்தில் தானும் செத்திருப்போம் என்று யோசித்துக் கிடந்தவள் கண்ணயர்ந்தாள்.

டெலிபோன் சப்தம் கேட்டு திடுக்கென விழித்தவள் எழுந்து போய் ரிசீவரை எடுத்து காதுக்கு வைத்தாள். ’ஈரோடு வந்து இறங்கிட்டேன்மா. கால்மணி நேரத்துல ஆட்டோ பிடிச்சு வந்துடறேன்’ என்று டெய்ஸியம்மா தான் பேசியது. மணியைப் பார்த்தாள். அது விடிகாலை நான்கை காட்டியது. ஜான்சனும் டெலிபோன் சப்தத்தால் எழுந்து கொண்டான். முகத்தை உள்ளங்கையால் துடைத்துக் கொண்டே எழுந்தவன், ‘அந்தம்மாவுக்கு என்னை பார்த்தால் பிடிக்காதுங்க. அவங்க வர்றப்ப நான் இங்க இருக்கலை நான் கிளம்புறேன்’ என்று சொல்லி

வெளி வாயில் நோக்கி சென்றவன் பின்னால் சென்றவள் 'தேங்ஸ்' சொன்னாள்.

டெய்ஸியம்மா வீடு வந்து சேர்ந்த பிறகுதான் ரூத் நிம்மதியானாள். விடிகாலையில் சொந்தம் பந்தம் என்று கணிசமான கூட்டம் வீட்டில் சேர்ந்து விட்டது. காரியங்கள் துரிதமாய் நடைபெறத் துவங்கின. இந்த விட்டில், தான் யார்? என்று தெரியாமல் ஒதுக்கமாய் நின்றிருந்தாள் ரூத். அன்று பத்துமணி அளவில் கல்லறைத் தோட்டத்தை சேர்ந்த அமரர் ஊர்தியில் பீட்டர் ஐயாவின் உடல் ஏற்றப்பட்டு ஊர்தி கிளம்பிப் போயிற்று.

ரூத்திற்கு நடந்து கொண்டிருந்த விஷயங்கள் ஆச்சரியமும் அதிர்ச்சியுமாய் இருந்தன. மதியம் ஒருமணி என்கிறபோது லாரி ஒன்றினுள் வீட்டினுள் இருந்த சாமான்கள் ஏற்றப்பட்டு அது கிளம்பிப் போயிற்று. மீண்டும் ஜாமான்கள் மீதம் இருந்ததால் டெய்ஸியம்மாவின் தங்கையின் கணவர் இன்னுமொரு மினி லாரியை வரவழைத்தார். அவர்களின் குடும்பம் சென்னிமலையில் இருக்கிறதாம். டெய்ஸியம்மா தங்கையோடு தங்கிக் கொள்வதாய் ஏற்பாடாம். அவர் சம்மதித்ததும் காரியங்கள் மின்னல் வேகத்தில் நடந்தன. இந்த வீட்டை டெய்ஸியம்மாவின் சொந்த வீடு என்று தான் இவள் இதுநாள் வரை நினைத்திருந்தாள். ஆனால் வாடகை வீடாம். மாதம் மூன்றாயிரமாம். ஐய்யோடா என்று நினைத்தாள் ரூத்.

இறுதியாக மாருதி வேன் ஒன்று வந்து வீட்டின் முன் நின்றதும் டெய்ஸியம்மாவை அவரது தங்கை வீட்டினுள்ளிருந்து கூட்டி வந்தார். இவள் சோக முகமாய் அவர்முன் போய் நின்றாள். ரூத் டெய்ஸியம்மாவிடம் தனக்கான பணத்தை கேட்டாள். அதை அந்த சமயத்தில் கேட்க சங்கடம் தான் என்றாலும் கையில் எதுவுமில்லை என்பதால் அப்படி கேட்டாள்.

"நீ தாண்டி ஐயாவை கொன்னுட்டே! கடைசி நேரத்துல என்ன துடி துடிச்சாரோ? உன்னால தாண்டி அவரு செத்தாரு" என்ரு கத்திப் பேச ஆரம்பித்த டெய்ஸியம்மா முன் உதடு பிதுங்கி அழத்துவங்கினாள் ரூத். வேனில் டெய்ஸியம்மா ஏறியதும் அழுது கொண்டிருந்த இவளை கூப்பிட்டார். ஐநூறு ரூபாய் தாள் ஒன்றை வேனில் இருந்தபடி கைநீட்டி இவளுக்கு கொடுத்தாள் டெய்ஸியம்மா. அதை இவள் வாங்கிக் கொண்டதும் வேன் கிளம்பிப் போயிற்று.

ரூத் காலியாயிருந்த வீட்டினுள் சென்று தன் துணிமணிகளை சூட்கேசில் திணித்துக் கொண்டு வெளிவந்தாள். எதிர் வீட்டு வாசலில்

இருந்து ஜான்சன் இவளைப் பார்த்தபடி வந்தான். அவனைப் பார்த்ததும் இவள் ‘ஓ’ வென அழத்துவங்கினாள். ‘அழாதீங்க! இன்னும் நீங்க என்ன சின்னப் பிள்ளையா?’ என்றவன் தோளில் சாய்ந்து கதறினாள்.

“என்னை உங்க வீட்டுக்கு கூட்டிட்டு போயிடறீங்களா?” அழுகையினூடே அவனைக் கேட்டாள் ரூத்.

# ஒருமுறை தான் பூக்கும்

பெருந்துறை பேருந்து நிறுத்தத்தில் வசந்தாமணிக்காக காத்திருந்தான் சுதாகரன். இது இன்று நேற்றல்ல... மூன்று வருடங்களாக நடப்பது தான். மூன்று வருடத்தில் இவனுக்காய் எந்த நாளும் வசந்தாமணி எந்த இடத்திலும் காத்திருந்ததே இல்லை. அவளுக்காக இப்படிக் காத்திருப்பது இந்த மூன்று வருடங்களில் ஒரு முறை கூட சுதாகரனுக்கு சலிப்பான விசயமாகத் தோன்றியதே இல்லை.

வசந்தாமணி ஈங்கூர் பெண். ஹையர்செகண்டரி முடித்தவள். வீட்டு நிலைமையை மனத்தில் கொண்டு பனியன் கம்பெனியில் சேர்ந்து கொண்டாள். வீட்டில் அப்பாவும், அக்காவும் தோட்ட வேலைகளை பார்த்துக் கொள்கிறார்கள். தோட்டத்தில் இருபது ஆடுகள் பட்டியிலும், எருமைகள் ஐந்தும் நின்று கொண்டிருக்கின்றன. அம்மா மேல் உலகத்துக்கு டிக்கெட் எடுத்து போய் வருடம் நான்கு போய்விட்டது.

ஊதாரி அண்ணன் ஒருவன் ஸ்டீல் கம்பெனிக்கு வேலைக்கு போவதும் டாஸ்மாக்கில் குடியிருப்பதையுமே வழக்கமாய் கொண்டிருந்தான். மணியன் எங்கேப்பா? என்றால் கோயிலில் இருந்தானே என்பார்கள். டாஸ்மாக் கடையை கோயில் என்கிறார்கள். மணியனுக்கு தனக்கு மூத்தவள் ஒருத்தி திருமணத்துக்கு நிற்கிறாள் என்ற எண்ணம் துளி அளவேனும் இல்லாதவன்.

மணியனின் அக்கா தேவிகாவுக்கு வயது இருபத்தாறு நடக்கிறது. ஈங்கூர் பள்ளியில் மேல் படிப்பான ஐந்தாவது பாஸ் செய்தவள். வீட்டு வேலைகளிலும், காட்டு வேலைகளிலும் கெட்டிக்காரி. வசந்தாமணிக்கு வீட்டில் வேலை செய்வதோ தோட்டத்தில் வேலை செய்வதோ அலர்ஜியான விஷயம். எருமை சாணத்தை தேவிகா கூடையில் அள்ளி எடுத்து போய் குப்பையில் கொட்டுவதை முகம் சுளித்தபடி பார்ப்பாள். அக்காவுக்கு சமையலில் கூட உதவ மாட்டாள் வசந்தாமணி. போதாதற்கு இவளின் துணிமணிகளைக்கூட தேவிகா தான் சர்ப் எக்ஸல் போட்டுத் துவைத்துக் காய வைப்பாள். சம்பளமில்லாத வேலைக்காரியாக தேவிகா மாறிப் போயிருந்தாள்.

வசந்தாமணியின் அப்பா பிள்ளைப்பூச்சி. தான் உண்டு தன் வேலை உண்டு என்றே இருப்பார். அவரது வருத்தமெல்லாம் மணியன் இப்படி மொடாக்குடிகாரனாக போய் விட்டானே என்று தான். ஈங்கூரில் ஊருக்குள் இருக்கும் வீட்டுக்கும் அவர் அதிகம் வருவதில்லை. தோட்டத்திலேயே மோட்டார் ரூமில் படுத்து கொள்வார். தேவிகா

வீட்டிலிருந்து சாப்பாடு கொண்டு போவாள்.

சுதாகரன் சிகரெட்டின் கடைசி இழுப்பை இழுத்து கீழே போட்டு செருப்பால் அதன் தீக்கங்கை அழுத்தி அணைத்தான். (புகைபிடிப்பது உடல் நலத்துக்கு தீங்கானது.) சுதாகரன் கொங்கு கல்லூரியில் ஆபீஸ் பியூனாக இருக்கிறான். இதோ இப்போது தான் வேலையில் சேர்ந்தது போல் இருக்கிறது. ஆனால் வருடங்கள் ஐந்து ஓடிவிட்டது. ஆசைத் தங்கையை சேலத்துல கட்டிக்கொடுத்து வருடம் இரண்டு போய் விட்டது. அவளைக் கட்டி கொடுத்து தாட்டி விட்ட நாளில் இருந்து வீட்டில் அப்பாவும் அம்மாவும் இவன் ஜாதகத்தைத் தூக்கி கொண்டு பெண் பார்த்துடலாம், பெண் பார்த்துடலாம் என்று கீறல் விழுந்த டிவிடி தட்டு போல கத்திக்கொண்டே இருந்தார்கள். அவர்களாகவே சோதிடரை தேடிப்போய் ஜாதகத்தை கொடுத்து ரிசல்ட் பார்த்தார்கள்.

இந்த ஜாதகக்காரனுக்கு குரு பலன் வர இன்னும் ஒரு வருஷம் இருக்கே, வயது என்ன இருபத்தி ஒன்பதா? முப்பது பிறந்ததும் குரு பார்க்கிறான். அப்புறம் நீங்க நினைச்சால கூட பையன் திருமணத்தை நிறுத்த முடியாது என்ற தகவலை சோதிடர் சொன்னதும் நிம்மதியாக வீடு வந்தவர்கள் ஒரு வருடம் இவன் திருமணம் பற்றி இவனிடம் வாயைத் திறக்கவில்லை.

இதோ சுதாகரனிடம் குரு வந்து விட்டான். வந்ததும் அவசரப்படாமல் முப்பது நாள் தங்க வைத்து சுதாகரனின் பெற்றோர் அதே டிவிடி தட்டை போட்டார்கள். சுதாகரன் இந்த முறை பெற்றோரிடம் கோபிக்கவில்லை. ஒரு வாரத்தில் சொல்றேன்ப்பா என்று அப்பாவிடம் சொல்லிவிட்டான். அதோ வசந்தாமணி காலையிலிருந்து கால் கடுக்க நின்று வேலை செய்த களைப்பில் துவண்டு போய் வந்து கொண்டிருந்தாள்.

சுதாகரனை பார்த்ததும் வழக்கமாக வீசும் புன்னகையை வீசினாள். அருகே வந்தவள், ”ஐயா இன்னிக்கு கோபமோ? முகம் ஏனோ உம்முன்னு இருக்கே!” என்றாள். மூன்று வருட பழக்கத்தில் சரளமாக பேசும் குணம் மட்டுமே அவளிடம் மிஞ்சியிருந்தது.

”ரொம்ப பசிக்குதுப்பா, அக்கா டிபன்ல நாலு இட்லி வச்சி அனுப்பி விட்டுட்டா கம்பெனில இன்னிக்கு அக்கட்ட இக்கட்ட துளி நகர முடியாத அளவுக்கு வேலை. சூப்பர்வைசர் வேற கழுகு மாதிரி பார்த்துட்டே இருந்தான்.” அவள் பேசிக்கொண்டே யிருக்க சுதாகர் ஹோட்டலை நோக்கி நடந்தான். பின்னால் வந்தவள் இன்று ஏனோ புதிதாய் ஒரு பேச்சு பேசாமல் நகர்கிறானே என்று யோசித்தபடி சுதாகரின் பின்னால் செல்லாமல் நின்று கொண்டாள்.

ஹோட்டலின் அருகாமை சென்ற சுதாகர் திரும்பி பார்த்து, வா என்று கையசைத்து கூப்பிட்டான். மக்கள் கூட்டம் பேருந்தை பிடிக்க அலைமோதிக் கொண்டிருந்தது. மாலை நேரத்தில் எப்போதும் இப்படித்தான். கோபித்து கொண்டு நிற்பவளை சமாதானப்படுத்த சுதாகரன் திரும்பவும் அவளிடம் வந்தான். இவர்களின் நாடகத்தை கவனிப்பாரின்றி எல்லோரும் அவரவர் அவசரத்தில் இருந்தார்கள்.

“என்னம்மா சின்னப்பிள்ளையாட்டம் பிடிவாதம்…”

“பின்ன நான் என்ன கிழவியா? பசிக்குதுன்னு சொன்னேன். சரி வா போகலாம்னுஒரு வார்த்தை பேசாமல் முன்னாடி போனல் என்ன அர்த்தம்? என் கிட்ட காசு இல்லாமல் தான் உங்ககிட்ட பசிக்குதுன்னு சொன்னேனா? நீங்க உம்முன்னு முகத்தை வெச்சுட்டு முன்னாடி போனால் நான் பின்னாடி வரணுமா?”

”சாரி வசந்தாமணி மேடம். எனக்கும் கூட பசிக்குது. நீங்களும் பெரிய மனசு பண்ணி இந்த ஏழையோட அழைப்பை நிராகரிக்காம வாங்க” என்றான்.

“கொஞ்சம் நக்கல் தான். இருந்தாலும் எனக்கு பசி” என்றவள் சுதாகரனுடன் இணைந்து ஹோட்டலுக்குள் வந்தாள். இருவரும் பூரி இரண்டு செட் ஆர்டர் செய்து விட்டு டேபிளில் அமர்ந்தார்கள். சாப்பிட்டு முடித்து விட்டு வெளியே வரும்வரை இருவரும் எதுவும் பேசிக்கொள்ளவில்லை. வெளியில் வுந்ததும் சுதாகரன் ஆரம்பித்து கொண்டான்.

“நான் பலமுறை உன்கிட்ட கேட்டுட்டேன் வசந்தா. இனியும் என்னால பொறுத்திருக்க முடியாது. குருபலன் வேற பிறந்துடுச்சாம். அப்பா அம்மா ஆரம்பிச்சுட்டாங்க…”

”என்னை என்ன பண்ணச் சொல்றீங்க? உங்க கூட ஓடிவரச் சொல்றீங்களா? அது முடியாது. என் அக்கா பாவம் சுதாகர். அப்புறம் அவளுக்கு காலம் பூராவும் கல்யாணமே நடக்காம போயிடும். இப்பவே அவளை நாங்க வீட்டுல வேலைக்காரி மாதிரி வச்சுட்டு இருக்கோம். உங்க கூட இப்பவே நான் ஓடி வந்துடலாம். ஓடிப்போன பெண் குடும்பத்துல பெண் எடுக்க யாரும் வரமாட்டாங்க. அக்காவுக்கு வயசு இருபத்தி ஆறு பிறந்தாச்சு. அவள் சாதகத்துலயும் குருபலன் வந்தாச்சு. இருபத்தி ஆறுல நிச்சயம் மேரேஷ் முடிஞ்சிடும்னு சோதிடர் சொல்லிட்டாரு. அதும் இனி பார்க்கிற முதல் ஜாதகமே அக்காவுக்கு பொருத்தமா ஆயிடுமாம். இத்தனை நாள் பொறுத்தவரு எனக்காக

கொஞ்சம் நாள் ப்ளீஸ்ப்பா...” என்றாள்.

”இல்ல வசந்தா... உன்னை கட்டிக்க நான் எப்பவும் தயார் தான். வீட்டுல அம்மாவுக்கு முன்னை போல முடியறதில்லை. அப்பாவுக்கும் சர்க்கரை பிரஷர்னு வியாதிகள். எனக்கும் முப்பது ஆயிடிச்சு. எனக்கும் உணர்ச்சிகள் இருக்கு வசந்தா. நானும் மனுசன் தான். எப்போ நான் இந்த விசயத்தை கேட்டாலும் அக்கா அக்கான்னு அக்கா பாட்டே பாடுறே. அப்பா வாய்விட்டே கேட்டுட்டாரும்மா... இந்த வாரத்துல நல்ல பதிலா சொல்றேன்னு சொல்லிட்டேன்” என்றான்.

“நீங்க பேசறதை பார்த்தால் உங்க அப்பாவுக்காக ஒரே வாரத்தில் ஒரு பெண்ணோட போய் நிற்கணும்ங்ற மாதிரி இருக்கே. நீங்க கேட்குறப்ப எல்லாம் நான் ஒரே மாதிரி சொல்றேன்னா எனக்கு என் அக்கா பெருசுதான். அவளோட திருமணத்தை கெடுத்துட்டு நான் நிம்மதியா இருக்கவோ, வாழவோ முடியாதுங்கறதுனால தான். ஒரே பதிலை நீங்க கேட்குறப்ப எல்லாம் சொல்றேன். எனக்கு நீங்க வேணும் சுதாகர். அது என் மனசுல ஆழமா இருக்கு...” என்று வசந்தாமணி பேசத் தொடங்கி விட்ட சமயம் சுதாகரன் திருப்பூர் பேருந்து வர ஓடிப்போய் ஏறிக்கொண்டான். வசந்தாமணிக்கு கண்களில் நீர் முட்டிக்கொண்டு வந்து விட்டது.

சென்னிமலை செல்லும் பேருந்தில் ஏறி அமர்ந்து கொண்டவளுக்கு சுதாகரன் ஓடிப்போய் பேருந்து ஏறிகொண்ட காட்சியே திரும்ப திரும்ப வந்து கொண்டிருந்தது. இனிமேல் தன்னிடம் பேசுவானோ? மாட்டானோ என்று பயமாய் இருந்தது. அவன் இல்லாத வாழ்வை நினைக்கையில் அது வெறுமையாய் கண்களுக்கு முன் தெரிந்தது. இரவு உணவு தொண்டைக்கும் கீழ் இறங்க மறுத்தது. நடு இரவு வரை உறக்கம் வராமல் பாயில் கிடந்தாள். தூக்கம் வந்த போது வந்த கனவில் சுதாகரன் வெள்ளை வேட்டி சட்டையில் மாலையும் கழுத்துமாய் நின்றான். அருகில் நின்றிருந்த மணப்பெண்ணின் முகத்தை இவள் எவ்வளவோ உற்று பார்த்தும் அடையாளம் தெரியவில்லை.

அடுத்த நாள் கம்பெனியில் வேலை செய்து கொண்டிருந்த வசந்தாமணிக்கு மதியம் போல தலைவலி ஆரம்பித்து விட்டது. மாலை நேரம் வரவர உடல் சூடாய் இருப்பதை உணர்ந்தாள். கண்களில் எரிச்சல் கூடி போயிருந்தது. பேருந்து நிறுத்தத்தில் சுதாகரனை காணாமல் டைபாய்டு ஜுரம் வந்தவள் போலத்தான் பேருந்து ஏறி வீடு வந்து சேர்ந்தாள். வீட்டில் மாற்றம் தெரிந்தது. சித்தியும், சித்தப்பனும், அப்பாவும், அண்ணனும் இருந்தார்கள். அக்கா தீபாவளிக்கு புதிதாய்

எடுத்திருந்த பிங்க் கலர் சேலை கட்டியிருந்தாள். அவள் முகம் பிரகாசமாய் இருந்தது. அக்காவை பெண் பார்த்துவிட்டு போயிருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டாள். இவர்களின் முகப்பூரிப்பை வைத்து பார்த்தால் பெண் பார்க்க வந்தவர்கள் சம்மதம் சொல்லி விட்டு சென்று விட்டதை யூகித்து விட்டாள்.

சுதாகரனின் செல்போனுக்கு இந்த தகவலை உடனே சொல்லி விட வேண்டும் என்று மனது சந்தோஷப் பாட்டு பாடியது. சமையல் கட்டு சென்று பஜ்ஜி கடித்துக்கொண்டே காபி குடித்தாள். அக்காவை பார்த்து கண் சிமிட்டினாள். அக்கா, போடி என்று செல்லமாக சிணுங்கினாள். வெட்கப்பட்டால் அக்கா அழகு தான் என்று நினைத்தாள் வசந்தா மணி.

“மாப்பிள்ளை எந்த ஊர்? என்ன வேலையில இருக்காராம்?” என்றாள்.

“மாப்பிள்ளை ஊர் விசயமங்கலமாம். தங்கச்சியை சேலத்துல கட்டிகொடுத்து ரெண்டு வருஷம் ஆயிடிச்சாம்.”

“பேர் என்ன? என்ன வேலையின்னு கேட்டால் ஊர் உலகம் சுத்தறியேக்கா.”

“பேர் சுதாகரனாம். கொங்குகாலேஜில பியூனா இருக்காராம். சம்பளம் மாசம் எட்டாயிரமாம். சாதகத்துல எட்டு பொருத்தமும் கூடி வந்தது. சென்னிமலை ஈஸ்வரன் கோயில்ல சிம்பிளா கல்யாணம் வச்சுக்கலாம்னு சொல்லிட்டாங்க.” என்று தேவிகா சொல்ல, காபி டம்ளரை தவற விட்டாள் வசந்தாமணி.

-

மார்ச் 2013

# சூரம்பட்டியில் ஓர் இரவு

அந்தப்பெண் தன் துப்பட்டாவைச் சரியாக இழுத்துவிட்டுக்கொண்டது. திரும்ப என் வீட்டை ஒருமுறை பயக் கண்களோடு பார்த்துவிட்டு, எதுவும் பேசாமல் என் டூவீலரின் பின் இருக்கையில் அமர்ந்துகொண்டதும் நான் வண்டியைக் கிளப்பினேன். சூரம்பட்டி நான்கு வழிப் பாதையில் வடக்கு நோக்கிச் செலுத்தினேன்.

ஈரோடு அக்ரஹாரம் வரை கல்லூரிப் பெண் ஒருத்தியை என் பஜாஜ் டிஸ்கவரில் சூரம்பட்டியில் இருந்து இரவு இரண்டு மணிக்கு பின் இருக்கையில் அமர்த்திக் கொண்டு, காலியான சாலையில் பயணிப்பேன் என்று நினைத்துக்கூடப் பார்த்தது இல்லை. நான்கு சக்கர வாகனங்கள்தான் கண்ணில்படவில்லையே ஒழிய, இரண்டு சக்கர வாகனங்கள் சாலையோர விளக்குகளின் பிரகாசத்தில் ஊர்ந்து கொண்டு தான் இருந்தன.

அரசாங்க மருத்துவமனை ஓரமாக இரண்டு லாரிகள் தூங்கிக்கொண்டு சாலை ஓரத்தில் நின்றிருந்தன. செவன் டாங்கி வயதாகிவிட்ட நான், ஒரு நாள்கூட இந்த நகரத்தை இவ்வளவு அமைதியாகக் கண்டதே இல்லை.

இரவில் இந்த நேரத்தில் எல்லாம் விழித்திருந்து எனக்குப் பழக்கம் இல்லை. இரவு ஒன்பதைத் தாண்டியதும் படுக்கையில் விழுந்தேன் என்றால், சூரம்பட்டியில் பெரிய பெரிய வெடிகுண்டுகள் வெடித்தால் கூட எழ மாட்டேன். காலையில் ஏழு மணியைப் போல அம்மா காபி டம்ளரோடு வந்து, ”எழுந்திரு கணேசா…” என்று எழுப்பினால்தான் உண்டு. நகரில் பிரபலமான துணிக் கடை ஒன்றில் நான் மேனேஜராக, கடந்த மூன்று வருடங்களாகப் பணியில் இருக்கிறேன். சம்பளம் என்று பார்த்தால் எனக்கும் அம்மாவுக்கும் போதும். இதனால், வேலையில் இருக்கும் பெண்ணைக் கட்டிக் கொள்ளலாம் என்ற திட்டத்தில் இருக்கிறேன்.

வேலையில் இருக்கும் பெண்களெல்லாம் முதலாளிமார்களைக் கட்டிக் கொள்ளும் திட்டத்தில் இருப்பார்கள் போல் இருக்கிறது. இதனால் என் திருமணம் தள்ளிப் போய்க்கொண்டே இருக்கிறது.

எங்கள் துணிக் கடையில் இருக்கும் அழகுப் பதுமைகள் எல்லாம் இருபது வயதுக்கும் குறைந்தவர்கள். அவர்கள் யாரும் இருபத்தேழு வயதுக்காரனான என்னைச் சட்டை செய்வது இல்லை.

”என்ன சார்… தும்பிக்கையைக் காணோம்?” என்று கணேசன் என்கிற பெயரை, சார் போட்டுக் கிண்டல் செய்கிறார்கள். ஈரோட்டில் எத்தனை கணேசன்கள் என்னைப் போலவே வருத்தத்தோடு வாழ்க்கையை ஓட்டுகிறார்களோ?

இரவு நேரத்தில் சாலையில் வாகனங்கள் அதிகம் இல்லாவிட்டாலும் சிக்னல்களில் பச்சை, சிவப்பு விளக்குகள் எரிந்து கொண்டுதான் இருந்தன. பேருந்து நிலையத்துக்கு அருகில் வந்தபோது, அந்த நேரத்திலும் காவலர்கள் கையில் தடியோடு நின்றிருந்தார்கள். கடவுள் புண்ணியத்தில் குச்சியைக் காட்டி என் டிஸ்கவரை அவர்கள் தடுக்கவில்லை. அது தவிர, இந்தப் பெண்ணை அந்த மாதிரிப் பெண் என்று நினைத்துக்கொண்டு அவர்கள் விசாரித்தால்?

ஐயோடா சாமி! பெரிய கண்டத்தில் இருந்து தும்பிக்கை இல்லாத நான் தப்பிவிட்டேன். சமீபத்தில் ‘ராட்டினம்’ திரைப்படம் பார்த்தேன். அதில் பள்ளியில் படிக்கும் காதலியின் விருப்பத்தின் பேரில் காதலன் தன் டூவீலரில் திருச்செந்தூர் வரை, ”ஏலே ஏ புள்ளே… நெஞ்சுக்குள்ள நெருஞ்சி முள்ளெ வெச்சாக்கூட உற்சாகமா ஆடுறேனே!” என்று பாடிக்கொண்டே சுற்றிப் பார்த்து காதலைப் பலப்படுத்திக்கொண்டு திரும்பும்போது, வாகனப் பரிசோதனையில் மாட்டிக்கொள்கிறார்கள்.

படத்தை நான் பார்த்த நாளில் இருந்து அந்தப் பெண்ணை நான் மனதாரக் காதலித்துக் கொண்டு இருக்கிறேன் என்பது வேறு விஷயம்.இதற்கும் முன்பாக அமலா பாலையும் அஞ்சலியையும் சேர்த்துக் காதலித்துக் கொண்டிருந்தேன். என் காதல் மாபெரும் தோல்வியைத் தழுவிவிடும் என்பது உறுதியாகி விட்டதால், ‘ராட்டினம்’ நாயகிக்குத் தாவி விட்டேன்.

சுவேதா! என் பின்னால் அமர்ந்திருக்கும் பெண்ணின் பெயர். அவள் பிடிமானத்துக்காக என் தோள் மீது கை போட்டிருந்தால், நான் டிஸ்கவரை நாற்பது, நாற்பத்தைந்தில் ஒட்டியபடி இருக்க மாட்டேன். சுவேதா உலகத்தில் உள்ள அத்தனை ஒழுக்கங்களையும் ஒருசேரப் பெற்றவள் போல் இருக்கிறது. ஒரு சாயலில் ‘ராட்டினம்’ பட நாயகியை அடிக்கடி ஞாபகப்படுத்தியதால், என் ஹார்மோன்கள் என்றும் இல்லாத இயக்கத்தில் இருந்தன. அதே உப்பிய கன்னங்கள். கொடுத்துவைத்த மகராசன் யார் எனத் தெரியவில்லை.

எல்லாம் இந்த சுரேந்திரன் பயலால் வந்த தீவினை. சுரேந்திரன் என்

கல்லூரி நண்பன். கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே அவனுக்குப் பதிமூன்று காதலிகள் இருந்தார்கள். அதில் ஒருவர், கல்லூரி கணிதப் பேராசிரியை. அவனுடைய அப்பா, நகரில் காசு பார்ட்டி. வீட்டில் ஒரே பையன் என்பதால், செல்லம் கொடுத்து வளர்க்கப்பட்டவன். துணிமணிகள் எல்லாம் உயர் ரகத்தில் அணியும் அவனுக்குப் பதிமூன்று காதல்கள் ஒரே நேரத்தில் வந்தது, எண்ணிக்கை குறைவோ என்று தான் யோசித்தேன்.

நல்லவேளை… அவன் காதலிகள் யாரையும் வாழ்க்கைத் துணைவியாக அமைத்துக் கொள்ளவில்லை. நல்ல பையன்களோடு மட்டுமே சாவகாசம் வைத்துக்கொள்ளும் நான், அந்தப் பழக்க வழக்கத்தை இன்று வரை தொடர்கிறேன். சுரேந்திரனை நல்ல பையன் என்றுதான் இன்று வரை நம்பிவந்தேன். ஒரு ஆத்திர அவசரத்துக்குப் பணம் வேண்டும் என்றால், என் முதலாளியிடம் நான் மண்டை முடியைச் சொறிந்தபடி நின்றுதான் பணம் வாங்க வேண்டும். அப்படிச் சொறிவதைத் தடுத்துக் கொள்ள, ஈரோடு நகரில் ஆறு செல்போன் கடைகளுக்கு முதலாளியான சுரேந்திரனைப் பயன்படுத்திக் கொள்வேன்.

சுரேந்திரன் பெண்களைக் காதலிப்பதோடு சரி… வேறு தப்புத்தண்டாவில் எல்லாம் இறங்க மாட்டான். ஒருவேளை தனக்கான ஒரு நல்ல பெண் ணைக் கண்டறியத் தேடுதல் வேட்டை நடத்திக் கொண்டிருக்கிறானோ என்றுதான் எனக்குத் தோன்றும். கல்லூரியை விட்டு வெளி வந்ததும் அவன் தேடலில் எத்தனை பெண்கள் வந்து போனார்கள் என்ற லிஸ்ட் என்னிடம் இல்லை. நான்தான் பொறுப்பாக வேலையில் அமர்ந்துவிட்டேனே!

அவனது தேடுதல் வேட்டையில் கிடைத்த சூரியப்பந்து சுவேதா என்றுதான் போதையில் சுரேந்திரன் என்னிடம் சொன்னான். ஈரோடு ஆர்ட்ஸ் கல்லூரியில் வேதியியல் முதல் வருடம் படித்துக்கொண்டிருந்த சுவேதாவைக் கல்யாணம் செய்து, மகாராணிபோல வாழ வைப்பதாகக் கூறிக்கொண்டு, தினமும் லோலோலோலோ என்று சுற்றியிருக்கிறான் சுரேந்திரன். அந்தப் பெண்ணுக்குக் காதல் என்ற வார்த்தையே தமிழில் பிடிக்காதுபோல. மாரியம்மன் கோயிலில் தேங்காய்ப் பழம் கொடுத்து சாமி கும்பிடும் பெண் போல் இருக்கிறது.

ஆறு மாத காலம் சுற்றிச் சலித்தவன், விஷம் சாப்பிடப்போகிறேன்

என்று விஷ பாட்டிலைக் கையில் எடுத்துவிட்டானாம் நேற்று. அந்தப் பெண் மிரண்டுவிட்டது. விஷ பாட்டிலைக் காட்டி, மிரட்டித் தன் பைக்கில் ஏற்றிக்கொண்டு நேராக என் வீடு வந்து விட்டான். காதலைக் கட்டாயப்படுத்தி மிரட்டிப் பெற முடியுமா? புரியாத முட்டாளாகி விட்டான் என் நண்பன். நல்ல பையனுக்கு ஏன் இப்படிப் புத்தி பிசகிவிட்டது?

தோளில் பெரிய புத்தகப் பையைச் சுமந்தபடி அந்தப் பெண் அழுதுகொண்டே என் வீட்டு வாசலில் நிற்க, அம்மாதான் அவளை அணைத்து ஆறுதல் சொல்லி வீட்டுக்குக் கூட்டிப் போயிற்று. சுரேந்திரன் என் முகம் பார்த்தான். ”ஒரு வழியும் தோணலை கணேசா… கடைசியா இப்படிப் பண்ணிட்டேன்” என்றான்.

வண்டியின் டேங்க் கவரில் சரக்கு பாட்டில் இருப்பதாகவும், அதை எடுத்துக் கொண்டு வரும்படியும் சொன்னான்.

”என் வலி இப்போ போயிடும் பாரு” என்றவன் இரண்டு டம்ளர்களில் ஊற்றி சியர்ஸ் போட்டுக் குடித்தான்.

எனக்குப் பயமாக இருந்தது. உண்மையிலேயே இவன் என் நண்பன் சுரேந்திரன் தானா? எப்போதும் விளையாட்டு, கேலி என்றுதான் இருப்பான். ‘நல்ல விஸ்கில ஒரு பிராந்தி குடுங்க சார்’ என்றுதான் டாஸ்மாக்கில் கேட்பான். நிஜமாகவே இந்தப் பெண்ணை இவன் விரும்பியிருக்கிறான் போலிருக்கிறதே. காதலினால் எல்லோருடைய முகமும் பூரிப்பில் சிவந்து காணப்படும் என்றுதான் கேள்விப்பட்டும் படித்தும் இருக்கிறேன்.

இங்கே அச்சுஅசல் திரைப் படத்தில் பெண்ணைக் கடத்தி வந்த வில்லன் மாதிரியே இருந்தான். இவனையும் இவனுக்கு உடந்தையாக இருந்த என்னையும் பறந்து பறந்து உதைத்துவிட்டு, அவளை இழுத்துப்போகும் நாயகன் ஒருவேளை ஒன்பது மணிக்கு மேல்தான் பைக்கில் வருவானோ?

போதை ஏறிப்போன சுரேந்திரன் தடுமாறி எழுந்து என் அறையில் இருந்து வெளியேறினான். என் அம்மா இருக்கும்போது அந்தப் பெண்ணிடம் ஏடாகூடமாக நடந்துகொண்டான் என்றால்? மிரண்டு அவன் பின்னால் ஓடினேன். ”சுவேதா… சுவேதா…” என்று சத்தமிட்டபடி என் அம்மாவின் அறைக்குள் நுழைந்துவிட்டான். கெடுத்தான் கதையை!

நான் அம்மாவின் அறைக்குள் நுழைந்தபோது, சுரேந்திரன் சுவேதாவின் காலைப் பிடித்துக்கொண்டு தரையில் நெடுகக் கிடந்தான். ”என்னை மன்னிச்சுடு சுவேதா. நீ எனக்கு வேணும் சுவேதா… பாட்டில் எல்லாம் காட்டி உன்னை மிரட்டிட்டேன்… ஸாரி சுவேதா. காலையில உன்னை ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிறேன் சுவேதா!”

அந்தப் பெண் மீண்டும் நடுங்கிக்கொண்டே அழத் தொடங்கிற்று.

இதில் அம்மாவும் செய்வது அறியாமல் மிரண்டு விட்டது. இத்தனைக்கும் சுரேந்திரனும் ‘அம்மா… அம்மா…’ என்றுதான் பழகுவான். எத்தனை வருடங்களாக வீட்டுக்கு வந்து போய்க் கொண்டிருக்கிறான். படாதபாடு பட்டு, பாப்பா உனக்குத்தான் என்று சொல்லித் தூக்க முயற்சித்து, முடியாமல்போய் இழுத்துக்கொண்டே என் அறைக்கு வந்தேன். அறைக்குள் வந்ததும் இன்னொரு டம்ளர் ஊற்றிக்கொண்டவனுக்கு நிதானம் இல்லாமல் போயிற்று. என் படுக்கையில் சாய்ந்தவன், ‘சுவேதா எனக்கு வேணும்டா கணேசா!’ என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே அமைதியானான். நான் மீதம் இருந்த சரக்கைக் காதலுடன் பார்த்தேன்.

அம்மா எந்த நேரமும் அறைக்குள் வந்துவிடுவார் என்பதால் டம்ளரையும், பாட்டிலையும், தண்ணீர்க் கேனையும் தாவிக்கொண்டு மொட்டைமாடிக்குத் திருட்டுப் பூனைபோல் வந்துவிட்டேன். முதல் ரவுண்டை ஆரம்பிக்க டம்ளரில் சரக்கை ஊற்றித் தண்ணீர் கலந்தேன். (மது அருந்துவது உடல் நலனுக்குத் தீங்கானது!) டம்ளரைக் கையில் எடுத்து, ”நண்பன் இழுத்து வந்த கல்லூரிப் பெண்ணின் நலனுக்காக” என்று வானம் பார்த்து வாய்விட்டுச் சொல்லிவிட்டு அருந்தினேன்.

சும்மா கிடைக்கிறது என்றால், பினாயிலைக்கூடக் குடிக்கத் தயாராக இருப்பவனான நான், ஒரு நல்ல குடிகாரன் அல்ல. சரக்கு பாட்டிலை ஓரளவு தம்கட்டி முகர்ந்து இழுத்தாலே போதை ஏறிவிடும் எனக்கு. நண்பர்களுடன் மது அருந்தும்போது போதை இல்லாதவன் போலவும், விட்டால் முழு பாட்டிலையும் காலி செய்துவிட்டு வீடு போய்விடுபவன் போலவும் நடிக்க முடியும் என்னால். மூன்றாவது ரவுண்டு சரக்கை அவர்கள் அறியாமல் நான் கீழே ஊற்றிவிடுவேன் குடிகாரர்கள் அனைவரும் தங்கள் கெபாசிட்டியை உணர்ந்து குடிக்கப் பழக வேண்டும். ஆனால், அப்படி நடப்பதே இல்லை. நான் மாடியிலேயே சாய்ந்துவிடுவதற்கு அரை மணி நேரம்தான் ஆயிற்று.

அம்மா நடுச்சாமம்போல மாடி ஏறி வந்து என் முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பி விட்டது. ‘மழை பெய்கிறதோ?’ என்று தலையை உதறிக்கொண்டு எழுந்து அமர்ந்து கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தேன். அம்மாவின் பின்னால் அந்தப் பெண்ணும் நின்று கொண்டிருந்தது. ”அக்ரஹாரத்துலதான் இந்தப் பொண் ணோட வீடு இருக்குதாம் கணேசா… அந்த எடுபட்ட பயல் நல்லாத் தூங்கிட்டு இருக்கான். வீட்டுல கொண்டு போய் விடச் சொல்லுது இந்தப் பொண்ணு. நீ என்ன பண்றே… இந்தப் பொண்ணை உன் பைக்குல பத்திரமா கூட்டிட்டுப் போய் விட்டுட்டு வந்துடு கணேசா” என்றது. அது ஒரு நல்ல யோசனையாகத்தான் எனக்கும் பட்டது.

இதோ அக்ரஹாரத்தினுள் நுழைந்துவிட்டேன். சோம்பேறி நாய்கள் எல்லாம் வீட்டு வாயிற்படிகளில் தூக்கத்தில் கிடந்தன. அவள் வீட்டுக்குச் சந்துபொந்து என்று சுற்றவேண்டி இருந்தது. ‘லெஃப்ட், ரைட் கட் பண்ணுங்க’ என்று ஐந்தாறு முறை சொன்னாள் சுவேதா. ”அதோ அதுதான்… கம்பி கேட் போட்ட வீடு” என்று அவள் சொன்னதும் மெதுவாக டிச்சு குழி ஓரமாக வண்டியை நிறுத்தி, சைடு ஸ்டேண்டு போட்டு நிறுத்தினேன். இறங்கி நின்ற சுவேதா, ”தேங்க்ஸ், இனி நீங்க புறப்படுங்க” என்றாள் என்னிடம். அது எனக்கு நல்லதாகப்படவில்லை என்பதால் மறுத்து தலையை ஆட்டினேன். சுவேதா திரும்ப என்னிடம் எதுவும் பேசாமல், அவள் வீட்டு டிங்டாங்… டிங்டாங்கை அழுத்தினாள்.

சுவேதாவின் வீட்டில் யாருமே தூங்கவில்லை போல் இருக்கிறது. எப்படித் தூங்குவார்கள்? கல்லூரி சென்ற பிள்ளையைக் காணோம் என்றால், பெரிய அமளிதுமளியாக அல்லவா இருந்திருக்கும். பெண்களைப் படிப்புக்கோ, வேலைக்கோ அனுப்பிவிட்டுப் பெற்றோர்கள் தங்கள் வயிற்றில் ஃபயரைக் கட்டிக்கொண்டுஅல்லவா காத்திருக்க வேண்டி இருக்கிறது. பெரிய சைஸ் நாய் ஒன்று படபடவென வாலை ஆட்டிக்கொண்டு ஓடிவந்தது. இவள் அண்ணன் போலும்…ஒருவன் முகப்பு கேட்டை நீக்க வந்தான். அம்மாவும் அப்பாவும் பின்னால் வந்தார்கள்.

நான் எதிர்பார்க்கவே இல்லை. கேட்டைத் திறந்தவன் தன் சக்தி அனைத்தையும் திரட்டி ஓடிவந்து என் கன்னத்தில் ரைய்ய்… என்று வீசி, சாலையில் என்னைத் தள்ளி ணங் ணங்கென மிதித்தான். ஒரு மிதி என்

வயிற்றில் சரியாக விழவே சாலையில் நான் வாந்தி எடுத்தேன். ஜீரணசக்தி எனக்குக் குறைவு தான் போலும்.

”அண்ணா, அவரை மிதிக்காதே… அவரை மிதிச்சுக் கொன்னுடாதே! அவரு என்னை வீட்டுல விட்டுட்டுப் போக வந்தவரு” என்று சுவேதா கத்திக்கொண்டே, அண்ணனின் கையைப் பிடித்து இழுத்தாள். அவன் அந்தக் கத்தலுக்காக என்னை மிதிப்பதை நிறுத்தவில்லை. மேலே போய்ச் சேர்ந்துவிடுவேனோ என்ற பயத்தில்தான் நிறுத்தினான்.

தீனிக்காரன்…நல்ல சாப்பாடு சாப்பிடுபவன்போல் உள்ளது. மிதி ஒவ்வொன்றும் என்னை மரண வாயிலுக்கு இழுத்துப்போய் இழுத்துப்போய் வந்தது. எழுந்து நேராக நின்று, தனுஷ்போல ஒற்றை விரலை நீட்டி என் பக்கத்துவீட்டு எல்.கே.ஜி. பாப்பா சொல்வதுபோல, ‘கொன்டேபுடுவேன்’ என்று வசனம் பேசலாம் என்றால், எழவே முடியாமல் முனகிக் கிடந்தேன்.

சுவேதாவின் அப்பாவோ திடகாத்திரமான ஆள். மகளின் கன்னத்தைக் குத்தகைக்கு எடுத்துக்கொண்டவர் போல சரமாரியாக வீசிக்கொண்டிருந்தார். அவருக்குச் சரியாக ஒரு கெட்டவார்த்தை கூட உச்சரிக்கத் தெரியவில்லை. ஓடுகாலி, கழுதை என்று திட்டுவதை விட்டுவிட்டு, ‘ஓடறியாடி பெண்ணே’ என்று உளறிக்கொண்டிருந்தார். நல்லவேளை அவரிடம் நான் மிதிபடவில்லை. சட்னியாகி இருப்பேன். நான் கும்பிடும் திண்டல் முருகன் என்னைக் கைவிடவில்லை. சுவேதா நடந்த விஷயங்களை எவ்வளவோ எடுத்துச்சொல்லியும் அவர்கள் கேட்பார்கள் இல்லை.

சுவேதாவின் புஷ்டியான அம்மா தன் மகள் சோரம் போய்விட்டதால், சுவரில் தலையை முட்டிக்கொண்டு அழுதது. இவளின் அண்ணன்காரன் ஓடிப்போய் அம்மாவை இழுத்துக் கட்டிக்கொண்டு அழுதான். எனக்குத் தண்ணீர் தருவார் யாரும் இல்லை. டி.வி-யில் தினமும் என் அம்மா பார்க்கும் நாடகக் காட்சிபோல் ஆகிவிட்டது.

”நீங்க வளர்த்த பொண்ணு, நான் சொல்றதை நம்பவே மாட்டீங்களாப்பா!” என்றெல்லாம் அழுதபடி சுவேதா கெஞ்சிக் கேட்டுக்கொண்டிருந்தாள். பக்கத்து வீட்டு விளக்குகள் எல்லாம் எரியத் தொடங்கின. அவர்கள் சுவேதாவை ஒதுக்கிவிட்டு கேட்டைப் படீர் எனச் சாத்திவிட்டு வீட்டினுள் போய்விட்டார்கள்.

சுவேதா செய்வதறியாது கீழே கிடந்த என்னிடம் நெருங்கி கை

நீட்டினாள். அவள் கையைப் பிடித்துக்கொண்டு எழுந்து நின்றேன். என் உதடு கிழிந்து ரத்தம் வழிந்து கொண்டிருந்தது. சுவேதா துப்பட்டாவால் அதைத் துடைத்தபடி, ”ஸாரிங்க!” என்றாள்.

புறப்பட்ட இடமான என் வீட்டுக்கே நாங்கள் வந்து விட்டோம். வீட்டினுள் விளக்கொளி தெரிந்தது. சுரேந்திரனின் சத்தம் கேட்டபடி இருந்தது. என் வண்டி வந்து வாசலில் ஓய்ந்த சத்தம் கேட்டு வெளியே வந்தவன் எங்கள் இருவரையும் பார்த்து வெறி வந்தவன்போல அங்கும் இங்கும் எதையோ தேடி ஓடினான். கண்ணுக்குத் தென்பட்ட பெரிய கல் ஒன்றை இரு கைகளாலும் தூக்கிக்கொண்டு எங்களைப் பார்த்து வந்தான். எனக்கு நாளிதழ் தலைப்புச் செய்தி கண்களுக்கே தெரிந்தது… ‘இருபத்தேழு வயது வாலிபனை நண்பனே கல்லால் தாக்கிக் கொடூரம். இருவரும் ஒரே பெண்ணைக் காதலித்ததால் நிகழ்ந்த கொலை!’

சுரேந்திரன் வெறிபிடித்த மிருகம்போல் வரவே, சுவேதா என்னைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, எனக்கு அரணாக முன்னால் நின்றாள். சுரேந்திரன் கையில் இருந்த கல்லைக் கீழே நழுவவிட்டான். அந்த நொடியில் இருந்து சுவேதா எனக்கானவள் என்று முடிவு செய்துவிட்டேன். பின்னாளில் சுவேதா என்னிடம் சொன்னாள். அவள் வீட்டு வாசலில் என் உதட்டில் இருந்த ரத்தத்தைத் துடைத்தபோதே, எனக்கானவன் என்று முடிவு செய்துவிட்டாளாம். எப்பவுமே நான் கொஞ்சம் லேட் பிக்அப் தான்!

-ஆனந்த விகடன், ஜூலை 2013

# காதலில் எழுந்தேன்

சென்னிமலை மலைப்படிக்கட்டுகள் துவங்குமிடத்தில் இருந்த அகலமான படிக்கிணற்றின் மேல் திண்டில் ஒரு கால் ஊன்றி கிணற்றினுள் பார்த்த வண்ணமிருந்தான் சதீஷ். கிணற்றினுள் தண்ணீர் சலனமேதுமில்லாமல் கிடந்தது. திண்டின் மீதிருந்த சிறு கல் ஒன்றினை எடுத்து கிணற்றினுள் வீசினான்.

இன்று ஏனோ இன்னும் மகேசுவரியை காணவில்லை. அவளின் செல்போனுக்கு முயற்சி செய்யலாம் என்ற நினைப்பு வந்தாலும் அதை கைவிட்டு விட்டான். மகேசுவரி பேருந்தில் வந்து கொண்டிருந்தாள் என்றால் எடுத்துப் பேச சிரமப்படுவாள். வரும்போது வரட்டும் என்றே வடக்கே தேங்காய் பழக்கடைகள் இருந்த சாலையைப் பார்ப்பதும் திரும்புவதுமாக இருந்தான்.

முன்பொருமுறை வந்துவிடுவாள் என்று காத்திருந்த சமயம் சென்னியங்கிரி வலசில் தன் வீட்டிலிருந்து இவனைக் கூப்பிட்டு, ‘ஸாரிப்பா, ரொம்ப தலைவலி. அதான் பெருந்துறையில இருந்து வர்றப்ப கொளத்துப்பாளையத்துலயே இறங்கிட்டேன். சைக்கிள்ள வீடு கூட வரமுடியலை தெரியுமா?’ என்றாள். சதீஷோ கடுப்பாகிவிட்டான். ‘இதுவே கடைசியா இருக்கட்டும்’ என்று கோபமாய் சொன்னான்.

அதற்காக மகேசுவரி ஒருவாரம் ‘சார்’ கேட்டுக்கொண்டேயிருந்தாள். சமாதானம் ஆனவன் அவளிடமும் ‘சாரி’ கேட்டுக் கொண்டான். ‘ரொம்ப வலியா? மாத்திரை சாப்பிட்டியான்னு கூட கேட்கலை பார் நான் முட்டாள் முட்டாள்’ என்று தன்னையே திட்டிக் கொண்டான். ‘விடுப்பா இனிமேல் இப்படி நடக்காமல் பார்த்துக் கொள்ளலாம்’ என்று அவள் சொல்ல அன்றே அப்படி தீர்மானித்துக் கொண்டார்கள்.

சதீஷ் சென்னிமலை தேர்முட்டி அருகிலிருக்கும் ஃபேன்ஸி கடையின் உரிமையாளன். கொமரப்பா மேல் நிலைப்பள்ளியில் ஆர்ட்ஸ் குரூப்பில் இரண்டாம் வருடம் சென்று கொண்டிருந்த சமயம் இவன் அப்பா ஹார்ட் அட்டாக்கில் காலமானார். மறுவாரத்திலேயே படிப்பை விட்டு விட்டு அவர் பார்த்துக் கொண்டிருந்த கடையில் அமர வேண்டி வந்தது. ஆயிற்று.. ஐந்தாறு வருடங்கள் இப்போது.

இடையில் தங்கையை காங்கேயத்திற்கு சொந்தத்தில் மணம் முடித்துக் கொடுத்தான். தங்கை லட்சுமியின் தோழி தான் மகேசுவரி. லட்சுமி வீட்டில் இருந்த சமயம் வரப்போக இருந்தால். தவிர ஃபேன்ஸி கடைக்கு

வாரத்தில் ஞாயிறு அன்று தவறாமல் வந்து விடுவாள். சதீஷிற்கு வெகு இயல்பாய் மகேசுவரி பேசுவது பிடித்திருந்தது. இவன் தன் விருப்பத்தை சொன்னபோது ‘இவ்ளோ நாளா இதைச் சொல்ல உங்களுக்கு!’ என்றாள்.

மகேசுவரி ஒன்னரை வருடமாக பெருந்துறையில் வக்கீல் ராமசாமியின் ஆபீஸில் பணிக்கு சென்று வந்து கொண்டிருந்தாள். மாலையில் அவர் கோர்ட் முடிந்து ஆபீஸ் நுழைகையில் இவள் கிளம்பி விடுவாள். எப்படியும் ஐந்தே முக்கால் என்கிற போது இவனிடம் பேசிப் போக மலைப்படிக்கட்டுக்கு வந்து விடுவாள். சில சமயம் ஐந்து மணிக்கு முன்பே கூட வந்து அமர்ந்து சதீஷை கூப்பிடுவாள்.

கிணற்றிலிருந்து பார்வையை சாலைக்கு கொண்டு சென்றவனின் முகம் பிரகாசமானது. மகேசுவரி மஞ்சள் வர்ண சேலையில் வந்து கொண்டிருந்தாள். வெள்ளிக்கிழமை என்றால் எப்போதும் மஞ்சள் வர்ண சேலை தான் என்று நினைத்தவன் மலைப்படிக்கட்டுகளை நோக்கி நடந்தான். வழக்கமான இடத்தில் இவன் அமர்ந்த போது இருளும் சூழ்ந்து கொண்டிருந்தது.

மலைப்படிக்கட்டின் கீழ்ப்படிகளில் அமர்ந்திருந்த மூன்று பிச்சைக்காரர்களுக்கு தட்டில் சில்லறை போட்டு விட்டு வந்தவள், இவன் அருகில் அமராமல் இவன் முகத்தில் கோபம் இருக்கிறதா என்று பார்த்து நின்றாள்.

“சாரி லேட் ஆயிடிச்சுப்பா, புது கேஸ் ஒன்னு வந்துச்சு. வக்கீல் பேசிட்டே என்னை தாட்டிவிட மறந்துட்டாரு. கிளம்புறப்பவே மணி ஆயிடிச்சு. இந்த நேரம் நான் வீட்டில் இருக்க வேண்டியவள். நீங்க கோவிச்சுக்குவீங்கன்னு தான் என்ன ஆனாலும் சரியின்னு வந்தேன். என்னப்பா ஒன்னும் பேச மாட்டேங்கிறே?” என்றாள்.

“முதல்ல உட்கார்ந்து பேசு மகேஷ். எதும் ஆகாது” என்று இவன் சொல்லவும் அருகில் அமர்ந்து கைப்பையை மடியில் வைத்துக் கொண்டாள்.

“பயப்படாம எப்படிப்பா நான் இருக்க முடியும்? வீட்டு நிலைமை தான் உனக்கும் தெரியுமே! என் தங்கச்சி உள்ளூர் பையனோட ஓடிப் போனதுல இருந்து இந்த ஆறுமாசமா வீடு வீடாவே இல்லைப்பா. என்ன பேசுறோமுன்னு தெரியாமலே பேசுறாங்க. பேச்சுல விவஸ்தையே கிடையாது. செத்துடலாம்னு இருக்குப்பா. அதான் செல்போனை சுவிட்ச் ஆப் பண்ணிட்டேன்” என்றவளை பரிதாபமாய்

பார்த்தான் சதீஷ்.

கோபித்துக் கொள்வானோ என்ற பயத்தில் வந்து அமர்ந்திருக்கும் மகேசுவரி மீது அபரிதமான காதல் தன்னுள் பெருக்கெடுப்பதை சதீஷ் உணர்ந்தான். ஆறு மாதங்களுக்கு முன்பு குழந்தை போல விளையாட்டும், சிரிப்புமாய் இருதவளா இந்த மகேஷ்? இவள் தங்கை தன் காதலனுடன் சென்ற பிறகு இவள் முகத்தில் மகிழ்ச்சி போய் விட்டது தான்.

“சாரிப்பா உன் நிலைமை எனக்கு புரியுது. என்ன இருந்தாலும் உன் அப்பாவும், அம்மாவும் பெற்ற மகளை அப்படி குத்திக் காட்டி பேசுவாங்களா?” என்றான்.

“அவங்க பாவம் சதீஷ். அப்படி பேசக் கூடியவங்களும் இல்லை. தங்கச்சி பண்ணின காரியத்தால என் மீதும் பயம். இத்தனைக்கும் அவங்களும் லவ் மேரேஜ் தான். ஒரு வார்த்தை சொல்லாம இப்படி பண்ணிட்டாளேன்னு தான் அவங்க கோபம். என்னையும் எங்கேயும் போக  வேண்டாம் வீட்டோட கிடன்னு பேசுறாங்க. அதை விடுங்க உங்க கடையில வேலை செய்யுற பொண்ணு இந்த நேரம் வீடு கிளம்புமே!”

“போன் பண்ணி சொல்லிட்டேன் மகேஷ். குமார் நகர்ல தானே அவள் வீடு. நானே கூட்டிப்போய் விட்டுடறேன். நீ டென்சன் ஆகாம நான் சொல்றதைக் கேளு மகேஷ். நீ வீட்டுக்கு போக  வேண்டாம். எவ்ளோ சந்தோசமான பொண்ணு நீ. எப்படி இளைச்சுப் போயிட்டே தெரியுமா? என் வீட்டுல நானும் அம்மாவும் தானே. என்னோட வந்துடு. பின்னால உன் அப்பா அம்மாவை சரி பண்ணிக்கலாம்”

“ரொம்ப பெரிய விசயத்தை சுலபமா சொல்றீங்க சதீஷ். உங்க சந்தோசமும் என்னால போயிட்டே இருக்குது. வீட்டுல என் காதலைப் பேச பயமா வேற இருக்குப்பா! நீங்க எனக்கு வேணும்” என்று விசும்பினாள் மகேஷ். சதீஷ் அவள் தோளில் கைவைத்து, ‘வேண்டாம் எனக்கு சங்கடமா இருக்கு. பார் விளக்குகளை போட்டுட்டாங்க எழுந்திரு. என் வண்டியிலயே கொண்டு வந்து விடறேன்’ என்று கிளம்பியவன் பின் கண்ணீரை துடைத்துக் கொண்டு நகர்ந்தாள்.

“எனக்கு ஏனோ இன்னிக்கு ரொம்ப பயமா இருக்கு” என்றவள், பழக்கடை ஓரத்திலிருந்து டூவீலரை அவன் ஸ்டார்ட் செய்ததும் பின்னால் அமர்ந்து கொண்டாள். வண்டி வடக்கு நோக்கி கிளம்பியது. ஐந்தாவது நிமிடத்தில் கொளத்துப்பாளையம் நிறுத்தத்தில் இறங்கிக்

கொண்டாள். அவளை இறக்கி விட்டவன் திரும்பிப் போக மனமில்லாமல் மேற்கே வலசு நோக்கி வண்டியை செலுத்தினான்.

வழக்கமாய் தன் சைக்கிளை டீக்கடையில் தான் மகேசுவரி நிறுத்திப்போவாள். டீக்கடை சென்றவள் தன் சைக்கிளை எடுத்துக் கொண்டு வலசு சாலையில் ஏறி அழுத்தினாள். வீடு செல்கிறோம் என்று நினைக்கையில் இதயம் தாறுமாறாய் துடிப்பதை உணர்ந்தாள். ‘ஏண்டி லேட்டு?’ அப்பாவின் குரல் காதில் இப்போதே கேட்டது. ஆயிரத்தி பத்து காலனியின் நுழைவாயிலருகே உணவுக் கடையில் கூட்டமாயிருந்தது. இவள் கடையைக் கடந்து பெரிய புளியமரம் அருகே வந்தாள். இருட்டில் அங்கு தான் சதீஷ் தன் டூவீலரை நிறுத்தி அதில் அமர்ந்திருந்தான். அவனைக் கண்டதும் ஆச்சரியமாய் சைக்கிள் பிரேக்கைப் பிடித்து நின்றாள்.

“தைரியமா வீட்டுக்கு போ மகேஷ். எதும் பிரச்சனை இல்லைன்னா என் செல்லுக்கு ஒரு மெசெஜ் போட்டு விடு. அப்புறம் தான் நான் கிளம்பிப் போவேன்” என்றான். இவளும் சரி என்று சொல்லி விட்டு சென்னியங்கிரி வலசு ஊருக்குள் நுழைந்தாள்.

வீட்டுக்குப் பக்கத்தில் செல்லும் போதே சைக்கிளில் இருந்து இறங்கி உருட்டிக் கொண்டு சென்றாள் மகேசுவரி. மெதுவாகச் சென்று சாலைக்குள் சைக்கிளை நிறுத்தி விட்டு வீட்டு வாயிற்படியருகே வந்தவள் உள்ளே அப்பாவின் பேச்சுக்குரல் கேட்டு நின்றாள்.

“அவள் என்ன இன்னுமா வரப் போறாடி? ஓடிப்போயிருப்பாள். எவன் கூட ஓடிப் போனாள்னு இனி காத்தால ஊரு பேசினால் தான் நமக்குத் தெரியும். அவ சுவிட்ச் ஆஃப் பண்ணி வச்சிருக்காடி போனை!”

மகேசுவரி திரும்பி சாலைக்கு வந்தவள் தன் செல்போனை ஆன் செய்து சதீஷை கூப்பிட்டாள். ‘இன்னும் அங்கேயே தான் நிக்கறீங்களா சதீஷ்? இதோ ரெண்டு நிமிசத்துல அங்கே வந்துடறேன் நான்’ என்று சொல்லி விட்டு போனை கட் செய்து நடந்தாள். அவள் கவலைகள் எல்லாம் அந்த நிமிடத்தில் அவளை விட்டு பறந்தோடி விட்டதாய் நினைத்தாள்.

-குமுதம்,28.11.2012

# ஊஞ்சலாடும் உறவுகள்

இந்த இக்கட்டான நேரத்தில் யாரிடம் சென்று கையேந்துவது என்று எனக்குள் எந்த யோசனையும் ஓடவில்லை. நெருங்கிய சொந்தபந்தங்களில் யாரேனும் உதவுவார்களா என்று பார்த்தால் எண்ணி நான்கைந்து தலைகள் மட்டும் தான். அவர்களுமே கூட வாழ்க்கையை ஏதோ ஓட்டிக் கொண்டிருப்பவர்களே தவிர அவசர உதவி செய்யும் நிலையில் இல்லை தான்.அதுவும் நான் சென்று இப்படி என்று விசயத்தை ஆரம்பித்ததுமே நம்பவும் மாட்டார்கள். உனக்கென்ன மணிகண்டா, பெருந்துறையில் செல்போன் கடை வெச்சு பிழைப்பு நடத்துறே! எங்களுக்கு நீ உதவணும், அதை விட்டுட்டு எங்ககிட்ட வந்து நிக்கிறியே? சரி என்ன தான் இருக்கு நீயே வீட்டைப் பாரேன். அதே வாடகை வீடு... என்று ஆரம்பித்து விடுவார்கள்.

பெருந்துறையில் நிர்மலா மொபைல்ஸ் என்று பெயர் வைத்து பத்துக்கு பத்து அளவில் பழைய பேருந்து நிலையம் குமார் காம்ளக்ஸில் கடை ஆரம்பித்து வருடம் இப்போது ஒன்னரை ஆகிவிட்டது. ரீசார்ஜ் கூப்பன்கள் விற்றுக்கொண்டு அவ்வப்போது புதிய செல்போன்கள் விற்றும் பெரி சம்பாத்தியம் என்று சொல்லிக் கொள்ளும்படியாய் இல்லை. இதே பெருநகரம் என்றிருந்தால் சமாளித்துக் கொள்லலாமோ என்னவோ. வண்டிக்கு பெட்ரோல், கடை வாடகை, கடையில் பணியில் இருப்பவனுக்கு தினம் சம்பளம் என்று சரியாய் இருக்கையில் மிச்சம் பிடித்து பாதுகாப்பது சிரமம் தான். இதில் போகப் போக சரியாவிடும் என்ற ஜோதிட நம்பிக்கை வேறு. மனைவி சொல்லே மந்திரம் என்பதால் நம்புகிறேன் இன்னமும், இனிமேலும்.

நிர்மலா திங்களூர்க்காரி. அப்பாவை ஐந்து வருடம் முன்பாக இழந்தவள். சொத்து பத்து என்று எதுவும் இல்லாது அம்மாவும் பொண்ணும் மட்டுமே சொந்த வீட்டில் இருந்தார்கள். ஜாதகக் கட்டம் சேர்ந்ததால் மட்டுமே நான் கட்டிக் கொண்டதாக அம்மாவும், அவளும் நினைக்க, முதலிரவில் இல்லையடி உன் அழகுக்காக என்று நிர்மலாவிடம் கூறி அவள் அன்பைப்பெற்றவன். அவளாக சேமித்திருந்த ஐந்து பவுன் கழுத்து நகையை என் செல்போன் கடைக்காக கழற்றித் தந்தவள். திங்களூர் மளிகைக் கடையில் பொட்டணம் கட்ட பல வருடம் தொடர்ந்து சென்று கொண்டிருந்தவள் அதை தொடர விரும்பவே முதலிரவு அறையிலேயே சம்மதித்தேன்.

என் மாமியார் இரண்டு மூன்று செம்மறி ஆடுகளை வைத்துக்

கொண்டு மேய்ப்பதற்கு இடமில்லாமல் சாலை ஓரங்களில் மேய்த்துக் கொண்டு வருவதும் சாப்பிட்டானதும் உறங்குவதுமாக தொல்லை ஏதுமின்றி இருந்தார். நிர்மலா மளிகைக் கடையில் வேலை பார்த்து மாதம் மூனு ஐநூறு சம்பாதித்தாள். இது தான் விசயம். மூனாயிரத்து ஐநூறில் வீட்டு சாமான்கள் வாங்குவதில் இருந்து, கரண்ட் பில் வரை அவளே பார்த்துக் கொள்கிறாள். சில சமயம் பெட்ரோல் போடக்கூட அவளிடம் கையேந்துவேன். வாழ்க்கை என்றால் பாருங்கள் பதினொன்று இருக்கிறது.

பாருங்கள், நான் எவ்வளவு அவசரத்தில் இருக்கிறேன் நிலைமை புரியாது உங்களிடம் என் குடும்ப வாழ்க்கை பற்றி விளாவாரியாக நிதானமாய் பேசிக் கொண்டிருக்கிறேன். விசயம் என்னவென்றால் நிர்மலாவை பிரசவத்திற்காக பெருந்துறை மெடிக்கல் கல்லூரி மருத்துவமனையில் சேர்த்திருக்கிறேன். வேறு மருத்துவமனைகளில் சேர்ப்பதை விட இங்கு கொஞ்சம் செலவுகள் குறைவு தான் என்று கடையில் நிற்கும் பையனே அறிவுரை சொல்லியிருந்தான். போக அவன் அக்காவை அங்கு தான் சேர்த்தோம் என்றும் பதினைந்தாயிரம் செலவாயிற்று என்றவனை நிம்மதியாய் பார்த்தேன். ஆனால் அக்காவுக்கு நார்மல் டெலிவரி, ஆப்ரேசன் செய்யலை என்று கூறி புளியைக் கரைத்தான்.

வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று இராமல் எவ்வளவோ இறுக்கிப் பிடித்தும் பத்தாயிரம் தான் தேறியிருந்தது. ஆனது ஆகட்டும் என்று மருத்துவமனையில் தனி பெட்டில் நிர்மலாவை சேர்த்திய பிறகு அவளை சோதனை செய்த டாக்டரம்மா சொன்னார். ‘குழந்தை குறுக்கே கிடக்கு! ஈவனிங் வரை பார்த்துட்டு நைட் அறுவை சிகிச்சை செய்தால் தான் குழந்தையையும், தாயையும் காப்பாற்ற முடியும்’ என்று. ‘ஒன்னும் பண்ண முடியாதுங்களா?’ அப்பாவியாய் கேட்ட என்னிடம், ‘இந்த ஸ்லிப்புல இருக்கிற மெடிசன்களை வாங்கிட்டு வாங்க’ என்று கையில் காகிதத்தை திணிக்கவும் தான் விபரீதம் புரிய ஆரம்பித்தது. வாழ்க்கை என்னை வேறொரு படியில் கால் வைத்து நகரச் செய்வதையும் உணர்ந்தேன்.

இரவு தான் அறுவை சிகிச்சை என்று டாக்டர் அம்மா சொன்னது மட்டும் நிம்மதி. மருத்துவமனை கடிகாரத்தில் மணி பார்த்தேன். பதினொன்றைக் காட்டியது. நிர்மலாவின் அருகே அமர்ந்திருந்த மாமியாரிடம் மருந்து பாட்டில்கள் அடங்கிய பாலிதீன் கவரையும், மீதியிருந்த ஐந்தாயிரத்தையும் ஒப்படைத்து விட்டு எப்படியும் இரவுக்குள் பணத்தோடு வந்து விடுவதாக கூறி விட்டு வெளியே

வந்தேன். எனது சுஜுகியை எடுத்துக் கொண்டு மொபைல் கடைக்கு வந்தேன். மதிய நேரம் கடை எப்போதும் போல கூட்டமின்றி தான் இருந்தது. சைடு லாக் போட்டு சாவியை பாக்கெட்டில் திணித்துக் கொண்டேன்.

நண்பர்கள் என்று பெருந்துறையில் இந்த ஒன்றரை வருடத்தில் நான் பழக்கப்படுத்தி கொள்ளவே இல்லை. வேறு வழி தோன்றாமல் சரவணனிடமே சென்று கைநீட்டி விடுவது என்று முடிவெடுத்தேன். இரவு பூட்டி கடை சாவியை கொண்டு சென்று விடும்படி பையனிடம் கூறிவிட்டு பேருந்துக்காய் நின்றேன். அரசுப்பேருந்து ஒன்று கூட்டமின்றி வரவும் ஏறி ஜன்னலோரமாய் அமர்ந்தேன். பெருந்துறையிலிருந்து நான்கு ரூபாயில் ஈரோடு சென்ற காலம் மலையேறி விட்டது போல. பனிரெண்டு ரூபாய் வாங்கிக் கொண்டு துண்டுச்சீட்டு கொடுத்தார் நடத்துனர்.

சரவணனை நான் பார்த்து ஒன்னரை வருடங்கள் ஆகிவிட்டது தான். அவனது அலைபேசி எண் கூட என்னிடம் இல்லை. எனது திருமணத்திற்கு மிகத் தாமதமாக வந்தவன் திங்களூர் விநாயகர் கோவிலில் தேடி, பின் விசாரித்து நிர்மலா வீடு வந்து சேர்ந்தான். பெரிய ‘சாரி’ ஒன்றைச் சொல்லியவன் அட்டைப்பெட்டி ஒன்றை பரிசளித்து விட்டு முதுகில் றெக்கை முளைத்தவன் போல ஒருவாய் சாப்பிடாமல் கூட போய் விட்டான். அவன் தந்த பரிசுப் பொருள் என்ன என்று நிர்மலா தான் திறந்து காட்டினாள். டி.வி.டி பிளேயர். இதில் கேசட் போட்டு படம் பார்க்கவா நமக்கு நேரம் இருக்கிறது? ஆறு மாதம் கழித்து பொபைல் கடையில் விற்பனைக்கு வைத்து 1500 சம்பாதித்தேன்.

எடுத்த காரியம் எப்படியும் சரவணனை ஈரோட்டில் பிடித்தால் நிறைவேறிவிடும் என்ற நம்பிக்கையில் பேருந்து இருக்கையில் சாய்ந்து அமர்ந்தேன். ஒய்திஸ் கொலைவெறி என்று பேருந்தில் அனைத்து ஸ்பீக்கர்களும் அலறியது மட்டும் இடைஞ்சலாய் இருந்தது. சரவணனுடன் எனது நட்பு துவங்கிய சம்பவங்களும் கூடவே கமலவேணியின் நினைவுகளும் ஞாபகத்தில் திருப்புக் காட்சிகளாக ஓடத்துவங்கிற்று.

ஈரோடு கருங்கல்பாளையத்தில் மஞ்சள் மண்டி ஒன்றில் நான் குமாஸ்தாவாக சேர்ந்து கொள்வதற்கு என் தந்தையாரின் வயது தான் காரணம். இருபத்தைந்து வருட குமாஸ்தா வாழ்வில் அவருக்கு மிச்சம் நானும் என் அண்ணனும் மட்டுமே. நேரம் பாருங்கள்.. மீதமிருக்கும் கொடுமையான வாழ்வை வாழப்பிடிக்காமல் ஒருமாத கால

அவகாசத்தில் நெஞ்சுவலி என்று படுத்தவர் இறந்து போய் விட்டார்.

அண்ணன் எனக்கும் முன்பாகவே படிப்பை நிறுத்திக் கொண்டு துணிக்கடை ஒன்றில் சேல்ஸ் பிரிவில் நின்று கொண்டான். நின்றவன் சும்மா இராமல் கூடவே நின்றிருந்த வைதேகியை திருமணம் செய்து கொண்டு வீடு வந்தான். அம்மாவும் வேறு வழியின்றி வைதேகியை மருமகளாக ஏற்றுக் கொண்டது. இதுவெல்லாம் நான் மஞ்சள் மண்டியில் குமாஸ்தாவாக சேர்ந்த பின் நான்கு மாத காலங்களுக்குள் நடந்தேறி விட்டன. எங்கே இனி நானும் காதல் மனைவியோடு ஆசீர்வாதம் வாங்க வந்து விடுவேனோ என்ற பயத்தில் அம்மா என் ஜாதகத்தை எடுத்துக் கொண்டாள். அப்படி அமைந்தவள் தான் நிர்மலா. மாமனார் இல்லாத வீட்டில் அமைந்தது. தவிர நிர்மலாவின் வீடு அவள் தாத்தா கட்டியது என்பதால் நானும் வாடகை வீட்டில் எப்படி காலம் தள்ளுவது என்று திங்களூருக்கே குடி பெயர்ந்தேன். இதைத்தான் நீங்கள் வீட்டோடு மாப்பிள்ளை என்கிறீர்கள்.

மஞ்சள் மண்டியில் என்னைத் தவிர்த்து மூன்று குமாஸ்தாக்கள். ஓரளவு என் வயதில் இருந்தவன் தான் சரவணன். அவன் எனக்கும் முன்பாக மண்டிக்கு வந்து ஒருவருடம் ஆயிற்றாம். மேலும், இருவர் ஐம்பது வயதை தொட்டுக் கொண்டிருந்தனர். டீ வாங்கி வர, சாப்பாடு வாங்கி வர என்று அந்த இருவரும் என்னை ஏவிக் கொண்டிருந்தார்கள். இதனால் நான் சங்கடப் படுவேனோ என்று சரவணன் தான் முதலாக என்னிடம் ஆறுதலாக பேசினான். நாய் வேஷம் போட்டால் குரைத்துத் தான் ஆக வேண்டும் என்றான். நானோ அதையும் ஒரு வேலையாகச் செய்தேன். நல்லாவேளையாக மாடியிலிருக்கும் ஆபீஸை கூட்டி சுத்தப்படுத்தும் வேலையையும், இரண்டு குடம் குடிநீர் கொண்டு வந்து வைக்கும் வேலையையும் குடோனின் பின்னால் ஒட்டி இருக்கும் வீட்டில் இருக்கும் அம்மாள் கவனித்துக் கொண்டது.

மஞ்சள் மூட்டை வந்து இறங்குகிறது என்றால் இவ்வளவு கிலோ என்று தராசில் துல்லியமாக எடை போட்டு குறிப்பேட்டில் குறித்துக் கொண்டு குடோனில் மூட்டைகளை கிடத்தி விடுவோம். அதே போல் மஞ்சள் நல்ல விலை போகும் சமயங்களில் வெளி மாநிலங்களுக்கு மூட்டைகளை அனுப்பி விடுவோம். எந்த நேரமும் பிஸி என்று சொல்ல முடியாது தான் என்றாலும் சீசன் என்று வந்து விட்டால் மூன்று மாதம் வேலை இருக்கும்.

அப்பா இங்கு பணியில் இருந்த காலத்தில் கடைசி ஆளாகத்தான் பூட்டி சாவியை பின் வீட்டில் இருக்கும் அம்மா கையில் கொடுத்துப்

போவாராம். நானும் அதையே பழக்கப்படுத்திக் கொண்டேன். அதனால் வீடு செல்ல இரவு ஒன்பது மணிக்கும் மேலாகி விடும். குடோனில் இருந்த சைக்கிளை அப்பாவிற்குப் பிறகு நானும் சொந்த சைக்கிள் போலவே எடுத்து உபயோகித்துக் கொண்டேன். மாதத்தில் இரண்டு முறை ஓனர் வந்து தலை காட்டிவிட்டு போவார். அவருக்கு நகரில் இதே போல் மூன்று மஞ்சள் மண்டிகளும், போக செல்போன், ஜெராக்ஸ் கடைகள் இருப்பதாகவும் சரவணன் கூறியிருந்தான். மேலும் சொந்த மாமா தான் எனக்கு அவர்! என்றும் கூறியிருந்தான்.

மஞ்சள் மண்டியிலிருந்து அவரது செல்போன் கடை ஏதாவதென்றில் அவரிடம் பேசி இடம் பெயர்ந்து விடலாம் என்ற ஆசையிலும் மண் விழுந்து விட்டது. சரவணனையே மண்டிக்கு அனுப்புபவர் என்னையா மண்டியை விட்டு போகச் சொல்லுவார்? சரவணன் தினமும் எக்ஸெல் சூப்பரில் தான்  மண்டிக்கு வந்து போகிறான். வயதான குமாஸ்தாக்கள் கூட ஓனருக்கு சொந்தம் தானாம். அவர்கள் ஹீரோ ஹோண்டாவில் தான் வருகிறார்கள். பார்க்கப் போகையில் வாழ்வில் முன்னேறி விடுவதற்கான எந்த வாய்ப்பும் இந்த குடோனில் எனக்கு இல்லை தான். தீபாவளி, பொங்கல், போனஸ் வாங்கிக் கொண்டு சுமாராய் குடும்பம் ஓட்டலாம். அப்பா வாழ்வு இப்படித்தான் மிஷின் போல கழிந்திருக்கிறது.

“அந்தம்மா இன்னிக்கு தண்ணீர் கொண்டு வந்து வைக்கலை போலிருக்கு. போய் எட்டிப் பார்த்துட்டு வா மணிகண்டா” செல்வம் குமாஸ்தா என்னிடம் சொல்ல தலையை ஆட்டிக் கொண்டு மாடியிலிருந்து கீழிறங்கினேன். குடோனை ஒட்டி பின்புறம் வந்தவன் அம்மாள் வீட்டின்முன் நின்று ‘அம்மா’ என்று குரல் கொடுத்தேன். உள்ளேயிருந்து, ‘இருங்க வர்றேன்’ என்ற இனிமையன குரலுடன் வெளிவாசல் வந்த பெண்ணைக் கண்டதும் திடுக்கிட்டேன். செந்தாமரை சேற்றில் தான் வளருமோ? இப்படி அழகான யுவதியா? அவள் முகம் நிலாவில் நீரெடுத்து கழுவி சுத்தப்படுத்தியது போல பிரகாசமாயிருந்த்து. ‘சொல்லுங்க’ என்றாள். ‘அம்மா குடத்துல தண்ணீர் வைக்க மறந்துட்டாங்க போல’ என்று இழுத்தேன். ‘அம்மா வெளி வேலையா போயிருக்காங்க, நீங்க போங்க நான் கொண்டு வந்து வைக்கிறேன்’ என்று சொன்னவள் கொலுசொலிக்க வீட்டினுள் செல்லவும் நான் திரும்பினேன். சரவணன் தான், என்ன பேய் அடிச்சிடுச்சா? அவள் என்னோட ஆள், என்றான்.

அவள் பெயர் கமலவேணி என்றும், மாமாவின் ஜெராக்ஸ் கடையில் தான் வேலை பார்க்கிறாள் பஸ் ஸ்டாண்டில்! என்றும் சொன்னான்.

அவள் அப்பா? என்று நான் இழுவை போட்டதற்கு, அப்பா இங்கே மஞ்சள் மண்டியில் தான் இருந்தாரென்றும் வேறு தொடுப்பு ஏற்பட்டு சென்னிமலை போய்விட்டாரென்றும் கூறினான். எனக்கு கமலவேணி மீது பரிதாபம் தான் எழுந்தது.

ஒரு நாள் சுவாமி படத்திற்கு ஊதுபத்தி பற்ற வைத்தவன் தீயை தன் கைகளில் காட்டி சூடிட்டுக் கொண்டான். பதறிப்போய் என்ன சரவணா இது? என்று தீக்குச்சியை தட்டி விட்டேன். நேற்று அடுப்புல வேலையா இருக்கப்ப கமலவேணி கையில தீப்பட்டிருச்சாம் மணி. என்கிட்ட காட்டினாள், எனக்கு சங்கடமா இருந்துச்சு.. இப்படித்தான வலிச்சிருக்கும்! என்றவனுக்கு என்ன பதிலைச் சொல்ல?

மற்றொரு நாள் பாயாசம், வடை என்று எனக்கு மதியம் அளித்து குஷியாய் இருந்தான். என்னப்பா விசயம்? என்றதற்கு பிற்பாடு தான் கமலவேணிக்கு இருபதாவது பிறந்த தினமாம். அவளே வடை, பாயாசம் செய்து எனக்கு கொடுத்தாள் என்றான். ஏதாவது பரிசளித்தாயா? என்றதற்கு செல்போன் என்றவன் தன் செல்போனை எடுத்து ரிங் அடித்தான். என் கையில் திணித்து பேசு! என்று கொடுத்து விட்டான். அவளுக்கு, வாழ்த்துக்கள் சொன்னேன். நன்றி சொன்னாள். ’சரவணன் எந்த கெட்ட பழக்கமும் இல்லாதவன். நீங்க தான் பத்திரமா பார்த்துக்கணும்’ என்றேன். உங்களை அண்ணான்னு கூப்பிடலாமா? என்றவளுக்கு மறுப்பேதும் சொல்லவில்லை நான். சரவணன் என்னை சந்தோச மிகுதியில் கட்டிக் கொண்டான்.

ஒருவாரம் சென்றிருக்கும் என்று நினைக்கிறேன். காலை வேளையில் மண்டிக்குள் நுழைந்து சைக்கிள் நிப்பாட்டும் போது கமலவேணி என்னை பார்த்தும் பாராதது போல முகத்தை உம்மென்று வைத்தபடி சென்றாள். இது என்ன? ஏதாவது பிணக்கு வந்து விட்டதா? அன்று சரவணனிடமே கேட்டேன். ’தெரியல மணி, நான் கூப்பிட்டால் கூட அவள் பேசுறதில்லே. பெண்களை புரிஞ்சிக்கவே முடியாது’ என்றவனிடம் ‘அப்படிப்பட்ட பொண்ணு இல்ல சரவணா அது. என்ன நடந்துச்சு?’ என்று கேட்டேன்.

“ஞாயிற்றுக்கிழமை மண்டி லீவு தானே. அவ அம்மா வெளிய போயிட்டதா சொல்லவும் மண்டிக்கு வந்துட்டேன். பேசிக்கிட்டு தான் இருந்தோம். முத்தம் கேட்டாள். அப்படியே ரெண்டு பேரும் தப்பு பண்ணிக்கிட்டோம் மணி. அதுக்கு பிறகுதான் கமலவேணி என்னோட பேசுறதில்ல” என்றான். அவன் சொல்கையில் சோகமோ, வருத்தமோ துளி அளவும் இல்லாத்தைக்கூட உணர்ந்தேன்.

இந்த சமயத்தில் தான் பெண்பார்க்க அம்மா, அண்ணன், அண்ணியுடன் திங்களூர் சென்று வந்தேன். அன்றைய தினம் தான் மஞ்சள் மண்டிக்கு வேலைக்கு செல்வதில் எனக்கு விருப்பமில்லை என்று அம்மாவிடம் கூறினேன். அம்மா என்னுள் வேறு திட்டம் இருக்கலாம் என்ற எண்ணத்தில் உன் இஷ்டம் என்று சொல்லி விட்டாள். நான் மஞ்சள் மண்டி செல்வதை விட்டொழித்தேன் என்றாலும் கமலவேணி சரவணன் காதல் என்னுள் குடைந்து கொண்டேயிருந்தது. நிஜமான காதலுக்கு எப்போதுமே தோல்வி முடிவு தானா? ஏமாறுவதற்கும், ஏமாற்றுவதற்கும் தானா காதலிக்கிறார்கள்?

ஞாயிற்றுக்கிழமையைத் தேர்ந்தெடுத்து எனது பத்திரிக்கையை கொடுப்பதற்காக மண்டிக்குச் சென்றேன். ‘வாங்கண்ணா’ என்று அழைத்தவளின் முகத்திலும், குரலிலும் பழைய சுரத்தே இல்லை தான். திருமணத்திற்கு வரும்படி அழைத்து பத்திரிக்கை நீட்டினேன். வாங்கிக் கொண்டவள் அதை விரித்துக் கூடப் பார்க்காமல் டேபிளில் வைத்து விட்டு எதிர் நாற்காலியில் அமர்ந்தாள். ‘உங்க கல்யாணத்திற்கு நான் வருவது நடக்காத காரியம்ண்ணா.. தப்பா நினைக்க வேண்டாம்’ என்றாள்.

“சரவணன் தான் உங்க ரெண்டு பேருக்குள்ள தப்பு நடந்திடுச்சுன்னு சொன்னான். நீ தான் அவன் கூப்பிட்டாலும் பேசுறதே இல்லையாமே!” என்றேன்.

“பொய்ணா அது! நான் கூப்பிட்டால் தான் பேசுறதே இல்லை. வீட்டுல அவருக்கு இருபத்தி அஞ்சு சவரன் போடற பொண்ணு பார்த்துட்டாங்களாம். வாழ்க்கைக்கு பணம் முக்கியம்னு பேசுறாப்ல. நான் சீச்சி ஆயிட்டேன். கெஞ்சிக் கெஞ்சி கேட்டு உங்களை ஒருமுறை பார்க்கணுமுன்னு சொல்லி இன்னிக்கு மதியம் வர்றேன்னு சொல்லி இருக்கார். அப்புறம் எனக்கு தூக்குக் கயிறு தான்” என்றவளிடம் ‘அதுவெல்லாம் தப்பும்மா’ என்று எவ்வளவோ கூறியும், நீங்க பெண்ணாயிருந்தா வருத்தம் தெரியும்! என்றவளிடம் விடைபெற்று கிளம்பி சரவணன் வீடு வந்தேன்.

வெளியே கிளம்பத் தயாராகிக் கொண்டிருந்த சரவணனிடம் என் திருமணப் பத்திரிக்கையை நீட்டினேன். ‘கண்டிப்பா வந்துடறேன்’ என்றவன் என்னை பேருந்து நிலையம் வரை ட்ராப் செய்து விட்டு சென்றான். அவன் அவசரம் எனக்கு புரிந்தது. பார்க்கலாமே என்று நினைத்த நான் ஒரு ஆட்டோவை பிடித்து கருங்கல்பாளையம் விடச் சொன்னேன். மஞ்சள் மண்டியை ஆட்டோ தாண்டும் சமயம் சரவணன்

எக்ஸெல் சூப்பர் உள்ளே மரத்தடியில் நின்றிருப்பதை கண்டேன். ஆட்டோவை அனுப்பி விட்டு டெலிபோன் பூத்தினுள் நுழைந்தேன். குமாஸ்தா செல்வத்தின் அலைபேசிக்கு அழைத்தேன். எதிர்முனையில் அவர் குரல் கேட்டதும், ‘சரவணங்கறது யாருங்க சார்? வாழ்க்கையே போச்சு! இனி சாவு ஒன்னு தான் ஒரே வழியின்னு மஞ்சள் மண்டியில தூக்குப் போட்டுக்கப் போறேன்னு போறாப்ல சார்’ என்று சொல்லிவிட்டு போனை வைத்தேன்.

என் பழைய நினைவலைகள் நின்று போன சமயம் ஈரோடு பேருந்து நிறுத்தத்தில் பேருந்தும் நின்றது. கீழே இறங்கி ஆட்டோ ஸ்டேண்டு பக்கம் சென்று ஆட்டோ வைத்து கருங்கல்பாளையம் வந்தேன். மஞ்சள் மண்டியின் மாடிப் படிகளில் ஏறிய சமயம் சரவணனே கீழே இறங்கி வந்து கொண்டிருந்தவன், என்னைப் பார்த்து ஆச்சரியம் காட்டி ‘வாடா மணி’ என்று உற்சாக குரல் எழுப்பினான். எனக்குத் தான் வெட்கமாயிருந்தது. சரவணன் அதே சரவணன் தான்.

“உள்ளார போனீன்னா மறுபடியும் ப்ளாஸ்க் எடுத்துட்டு போய் டீ வாங்கிட்டு வரச் சொல்லிடுவாங்க வா போலாம் வீட்டுக்கு” என்று இறங்கியவன் பின்னால் நானும் இறங்கினேன். எக்ஸெல் சூப்பரில் அமர வைத்து நான்கு வீதிகள் கடந்து எல்.ஐ.சி காலனிக்குள் நுழைந்தவன் ஒரு வீட்டின் முன் வண்டியை நிப்பாட்டி உள்ளே கூட்டிச் சென்றான். ‘கமலவேணி யார் வந்திருகாங்கன்னு வந்து பாரு’ என்றவன் தொட்டிலில் தூங்கும் குழந்தையை விரித்துப் பார்த்து ’ப்ரியா டார்லிங் தூக்கமோ!” என்று சொல்லிவிட்டு வந்து ஷோபாவில் அமர்ந்தான். நானும் அமர்ந்தேன்.

தண்ணீர் செம்போடு ‘வாங்கண்ணா’ என்று சிரித்த முகமோடு வந்த கமலவேணி பூசினாற் போல இருந்தாள். நான் செம்பை வாங்கிக் கொண்டேன். சரவணனுக்கு திருமணமானது, அவன் கமலவேணியை கட்டிக் கொண்டது, குழந்தை பிறந்தது என்று எதுவுமே தெரியாத அப்பாவி தான் நான். ‘டீ போடவா? காபி போடவாண்ணா?’ என்று கேட்டவளுக்கு ’டீ போதும்’ என்று சொல்லிவிட்டு சரவணன் முகம் பார்த்தேன். ‘ரொம்ப சந்தோசம்டா எனக்கு’ என்றேன்.

“சரி என்ன விசயம்? வராத விருந்தாளி வந்திருக்கே?” என்று ஆரம்பித்தவனிடம் வந்த விசயத்தை தயக்கமாய் சொன்னேன். நம்பி எனக்கு உதவி செய்ய வேறு ஆள் யாருமில்லை, என்பதையும் சொன்னேன். கேட்டுக் கொண்டிருந்தவன், ‘இந்த வீடு விலைக்கு வந்ததால் இப்போ தான் கையில் இருக்கிறதை போட்டு மாமா கிட்ட

கொஞ்சம் வாங்கி முடிச்சேன். சுத்தமா கையில எதும் இல்லாதப்ப வந்திருக்கியே மணி’ என்றவனை பரிதாபமாய் பார்த்தேன்.

“சரி கொரியர் ஆபீஸ்ல கவர் ரெண்டு வந்திருக்கிறதா சொன்னாங்க. அதுக்காகத் தான் கிளம்பினேன். கலெக்டர் ஆபீஸ் கிட்ட போகணும். பக்கத்துல எனக்குத் தெரிஞ்சவர் ஒருத்தர் இருக்கார். கேட்டுப் பார்த்துட்டு கமலவேணிக்கு கூப்பிட்டு சொல்றேன். உன் தங்கச்சி கையால சாப்டுட்டு இரு” என்றவன் கிளம்ப ஆயத்தமாக டீ டம்ளரோடு வந்த கமலவேணி, ‘ஏங்க உங்களுக்கு டீ வேண்டாமா?’ என்றாள். அவன் ’நோ’ சொல்லி விட்டு கிளம்பி விட்டான். டீ டம்ளரை நான் வாங்கிக் கொண்டேன். கூடவே காகிதப் பொட்டணம் ஒன்றை கமலவேணி என்னிடம் நீட்டவும் வாங்கி என்ன என்று விரித்தேன். உள்ளே தாலிக்கொடியில் இருக்கும் காசு நான்கும், குண்டு ஒன்றும் இருக்கவே அவள் முகம் பார்த்தேன்.

“உங்களால தான் தூக்குக் கயிறு ஏற வேண்டிய கழுத்துல தாலிக் கயிறு ஏறுச்சுன்னு எனக்கு தெரியுமண்ணா! நீங்க உதவின்னு வந்து கேட்கிறப்ப நான் செய்யாம இருக்க முடியுமா? அண்ணிக்கு பிரசவத்தை நல்லபடியா பாருங்க. எனக்குன்னு யார் இருக்கா? வரப் போக இருங்கண்ணா” என்றாள். ‘சரவணனுக்கு தெரிஞ்சா?’ என்றேன்.

“ஒன்னும் சொல்ல மாட்டாப்ல பயப்படாதீங்க” என்றாள். வீட்டில் இருந்த கடிகாரத்தில் மணி இரண்டாகியிருந்தது. எப்படியும் ஐந்து மணிக்குள் மருத்துவமனை சென்று விடலாம் என்று நிம்மதியாயிருந்தது.

# பாசம் பத்தும் செய்யும்

வாழ்க்கை என்றால் ஒன்பது இருக்குமாம். பாலகிருஷ்ணனுக்கோ இரண்டு சேர்த்து பதினொன்று போல் தோன்றியது. வீட்டினுள் மின்சாரம் போனதும் மின்விசிறி வினோத சப்தமுடன் நின்றவுடன் இவனுக்கு தூக்கம் போயிற்று. மனைவி ரம்யா சமையல் அறையில் இருந்தாள் போலிருக்கவே படுக்கையிலிருந்து எழுந்தான்.

அருகில் படுத்திருந்த விநோதினி, 'பிறந்த நாளுக்கு ரெட் கலர் சுடி வேணுமப்பா' என்று பேசிக்கொண்டே புரண்டு தூங்கினாள். பாலகிருஷ்ணன் பெருமூச்சு விட்டபடி சமையல் அறைக்கு வந்தான்.

மனைவி ரம்யா நூறுநாள் வேலைத் திட்டத்தில் சேர்ந்து சாலைப் பணிக்காக மம்பட்டி, சட்டியோடு போய் வந்து கொண்டிருந்தாள். இவனோ உள்ளூர் அச்சாபீஸில் மிஷின் மேனாக போய் வந்து கொண்டிருந்தான். இந்த நிலையில், வீதியில் இருக்கும் பிள்ளைகள் பள்ளி வாகனம் ஏறி தங்கள் அம்மாக்களுக்கு டாட்டா காட்டியபடி தெரஸா வித்யாலயாவிற்கு செல்வதைக் கண்டவர்கள் ப்ரியம் மிகுதியில் விநோதினியையும் சேர்த்து விட்டு விழி பிதுங்கி ஒரு வருடத்தில் நிறுத்திக் கொண்டார்கள்.

விஜயமங்கலம் அரசு நடுநிலைப்பள்ளியில் விநோதினி சேர்ந்து இப்போது இரண்டாம் வகுப்பு தேறி விட்டாள். மூன்றாம் வகுப்பு செல்லும் ஆர்வத்தில் புது புத்தக பேக், புது டிரஸ் வேண்டும் என்றாள். எல்லாமும் வாங்கித் தருவதாக வாக்குறுதி தந்திருந்தான். சென்ற வாரமே கரண்ட் பில், சந்தை செலவு, கேஸ் சிலிண்டர் என்று கண்விழி பிதுங்கி விட்டது பாலகிருஷ்ணனுக்கு.

போதாததற்கு சிறுவலூர் அரசு மருத்துவமனையில் இவன் தங்கை பெண்குழந்தை பிரசவித்திருக்கிறாளாம். தகவல் நேற்று மாலையே இவனுக்கு வந்து விட்டது. வெறும் கையை வீசிக் கொண்டுபோய், 'மாமா வந்துட்டேன்' என்று குட்டிப் பாப்பா முன் நின்றுவிட முடியுமா?

டி.வி.எஸ்ஸுக்கு ஒரு லிட்டர் பெட்ரோல், ஆப்பிள், ஆரஞ்சு, சாத்துக்குடி என்று அரை அரைக் கிலோவாவது வாங்கிப் போக வேண்டும். அப்பா அம்மா உயிரோடு இருந்த போது இப்படியான விஷயங்களை அவர்களே பார்த்துக் கொள்வார்கள். நாற்பது வயதில் வாழ்க்கையை வாழப் பழகிக் கொண்டிருந்தான் இவன்.

"நீங்களும், விநோதினியும் போய் பார்த்துட்டு வந்துடுங்க.. மஞ்சு

வீட்டுக்கு குழந்தையை எடுத்துட்டு வந்த பிறகு திங்களூர் போய் நான் பார்த்துக்கறேன்" என்று ரம்யா நேற்றிரவே சொல்லிவிட்டாள். வீட்டில் ஒரு வாரத் துணிமணிகள் துவைக்காமல் கிடக்கிறதாம். இதே அவள் வீட்டில் அவள் தங்கைக்கு என்றிருந்தால் நேற்று மாலையே வாறிச் சுருட்டிக் கொண்டு பறந்திருப்பாள். சொல்லிக் காட்டலாம் என்றால் ஒரு வாரம் முகத்தை தூக்கி வைத்துக் கொள்வாளென்று விட்டு விட்டான்.

ரம்யாவின் முடிவுப்படி தான் ஆயிற்று. விநோதினியும் இவனும் தான் டி,வி.எஸ்.ஸில் கிளம்பியிருந்தார்கள். 'எங்க டாடி போறோம்?' என்றவளுக்கு 'திங்களூர் மஞ்சு அத்தைக்கு பாப்பா பிறந்திருக்கு. குட்டிப் பாப்பாவை பார்க்கப் போறோம்" என்றான்.

"அத்தைக்கு குடுக்கத்தான் ஆப்பிள், ஆரஞ்சு எல்லாம் மேக்கூர் கடையில வாங்குனியா? நாம திங்கறக்கு இல்லியா? குட்டிப் பாப்பாவே பழம் எல்லாத்தையும் தின்னுடுமா?" என்றாள். இவன் சிரித்தான். 'திரும்பி வர்றப்ப நாம வாங்கிக்கலாம்' என்றான்.

"அதோப்பா என்னோட ஸ்கூலு.. இல்ல, நான் படிச்ச ஸ்கூலு" என்று விநோதினி தெரஸா வித்யாலயா கட்டடத்தைப் பார்த்து சப்தமிட்டாள். இவனுக்கு சங்கடமாய்த்தான் இருந்தது. இங்கு படிக்க வைக்க வக்கில்லாமல் போய் விட்டதே என்று.

சிறுவலூர் அரசு மருத்துவமனை மரங்கள் அடர்ந்து சூழ்ந்திருக்க துப்புரவாய் இருந்தது. காசு பணம் உள்ளவர்களுக்கு தனியார் மருத்துவமனைகளில் குழந்தை பெறுவது தான் பெருமை போலும். தனியார் மருத்துவமனை கவனிப்புகளில் சற்றும் சோடை போகாதது தான் அரசு மருத்துவமனைகளும் என்பது ஏழை பாழைகளுக்குத்தான் தெரியும்.

தனி அறையில் பிள்ளைபெற்ற வாட்டத்துடன் களைப்பில் சோர்ந்து படுத்திருந்தாள் இவன் தங்கை மஞ்சு. ஜூஸ் டம்ளரை கையில் வைத்துக் கொண்டு, 'குடி மஞ்சு' என்று அவளுக்கு நீட்டியபடி அவள் மாமியார் நின்றிருக்க, 'வாங்க' என்று சம்பிரதாய வார்த்தை சொல்லி இவனை அழைத்தார்.

"மச்சான் எங்கீங்க காணமே?" என்று மஞ்சுவின் கணவரைக் காணாது ஒரு வார்த்தை கேட்டு வைத்தான் பாலகிருஷ்ணன். மஞ்சு படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்து ஜூஸ் டம்ளரை வாங்கிக் கொண்டாள்.

"அவன் இப்பத்தான் எங்களுக்கு சாப்பாடு எடுத்துட்டு வர்றேனுட்டு

திங்களூர் கிளம்பிப் போனான்” என்றார் அவள் மாமியார்.

“மாமன் வர்ற நேரம் பார்த்து தூங்கிப் போயிட்டாள். இன்னா வரைக்கும் முழிச்சு பார்த்துட்டே தான் இருந்தாள். பால் குடிச்சுட்டு தூங்குறாள். விநோதினிக்குட்டி ஏன் வாய் பேசாமல் உம்முன்னு பாப்பாவை பார்த்துட்டே நிக்குது? அப்பா மிரட்டி கூட்டிட்டு வந்துச்சா?” என்றாள் மஞ்சு.

மஞ்சுவின் மாமியார் சாக்லெட் தட்டம் எடுத்து நீட்டவும் இவன் இரண்டு சாக்லெட் எடுத்துக் கொண்டான். விநோதினி நான்கைந்து எடுத்துக் கொண்டாள். ‘காகிதத்தை கீழே வீசக்கூடாது சாமி, டாக்டர், நர்ஸ் பார்த்தா உனக்கு ஊசி போட்டு உட்டுருவாங்க. அதா மூலையில டப்பா இருக்குது பார். அதுக்குள்ள போடு’ என்றாள் மஞ்சு. ‘மிட்டாயின்னா சிறுசுகளுக்கு உசுரு’ என்றார் மஞ்சுவின் மாமியார்.

பாலகிருஷ்ணன்  கையில் இருந்த பழப்பையை மூலையில் இருந்த டிரே மீது வைத்தான். அப்போது பார்த்து நான்கைந்து பெண்கள் அறைக்குள் நுழைந்தார்கள். ‘சுகப்பிரசவம் தான் நான் சொன்னேன்ல, அவ்ளோ சீக்கிரம் இங்கே கத்தி வைக்க மாட்டாங்கன்னு’ என்று வந்த பெண்களில் ஒருத்தி மஞ்சுவிடம் பேச இவன் அறையை விட்டு வெளியே வந்தான்.

வெளிவந்தவன் சுவரோரமாய் இருந்த சின்ன ஷெல்பில் கலர் கலராய் இருந்த நோட்டிஸ் தாள்களில் ஒன்றை எடுத்து விரித்தான். காச நோய்க்கான குறிப்புகள் அதில் இருந்தன. இன்னொரு தாளில் எய்ட்ஸ் விழிப்புணர்வு குறிப்புகள் இருந்தன. மருத்துவமனைச் சூழலே திடீரென இவன் மனதில் பீதியைக் கிளப்புவது போல தோன்றியது.

வாயிலில் கம்பௌண்டர் ஒருவர் நோயாளிகளுக்கு டேபிளில் அமர்ந்தபடி டோக்கன் சீட்டு கொடுத்தபடி இருந்தார். ஒரு அறை முன் நர்ஸ் ஒருவர் ‘சத்தம் போடாமல் வரிசையா நில்லுங்க’ என்று சப்தமிட்டபடி இருக்க இவன் ஒரு டீ சாப்பிட்டு விட்டு வரலாம் என மருத்துவமனை முகப்பு வாயிலைத் தாண்டினான்.

ரம்யா தன் சம்பளப் பணத்தில் ஐநூறு ரூபாயை பாப்பா கையில் வைத்து பார்த்துவிட்டு வரச் சொல்லி தந்திருந்தாள். இருக்கும் சிரமத்திற்கு அவ்வளவு வைக்க வேண்டுமா? என்று மனதில் தோன்றியது. ‘ட்ரஸ் வேணுமப்பா’ விநோதினியின் குரல் வேறு காதுக்கு அருகில் கேட்டது.

மருத்துவமனை முகப்பில் இருந்த டீக்கடையில் இவன் ஒரு டீ குடித்து

விட்டு கிளம்பலாம் என்று வெளிவருகையில் மஞ்சுவின் மாமியார் அந்தப் பெண்களுடன் சிறுவலூர் பஸ் ஸ்டாப் நோக்கி சென்று கொண்டிருந்தார். கூடவே விநோதினியும். சரி அவர்களை தாட்டி அனுப்பிவிட்டு வருவார்கள் என்று நினைத்தவன் சாலையைக் கடந்தான்.

மீண்டும் அறைக்குள் இவன் வந்தபோது மஞ்சு கண்மூடி அரைத்தூக்கத்தில் இருந்தாள். மின்விசிறி வேகமாய் சுற்றியபடி இருந்தது. தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த பாப்பாவின் அருகில் போய் நின்றான். தொட்டிலில் நான்கைந்து ஐநூறு ரூபாய்த் தாள்கள் குழந்தையைச் சுற்றிலும் கிடந்தன. இவன் மேல் பாக்கெட்டிலிருந்து ஐநூறு ரூபாயை எடுத்து குழந்தையின் கை விரகளைப் பிரித்து வைத்தான். மாமன் காசு என்று தெரிந்ததோ என்னவோ குழந்தை நாம்பி கெட்டியாய் பிடித்துக் கொண்டது.

மஞ்சுவைத் திரும்பிப் பார்த்தான். அவள் உறக்கத்தில் தான் இருந்தாள். தொட்டிலுக்குள் கை விட்டவன் குழந்தை அருகே கிடந்த  வேறு ஐநூறு ரூபாய்த் தாளை எடுத்து தன் மேல் பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். மின்விசிறி வேகமாய் சுழன்றும் அவன் முகம் வியர்த்து விட்டது.

“பாப்பா என்னோட சாடை இல்லையாமா! அவராட்டமே காது, மூக்குன்னு வர்றவங்க சொல்றாங்கண்ணா” மஞ்சு இவனிடம் சொல்லவும் தடுமாறியவன், ‘அப்படித்தான் இருக்கிறாள்’ என்றான். திடீரென பேசுகிறாளே! திருட்டுத் தனத்தை பார்த்திருப்பாளோ? சே இருக்காது!

“பாப்பா நேற்று நாலு மணிக்கு சாயந்திரம் பிறந்தாள்ணா. அப்பவே ஜோசியரைப் பார்த்து சாதகம் எழுதிட்டாரு. சிம்ம ராசியாம். மகம் நட்சத்திரமாம். அண்ணா இங்க வாயேன்” என்றவள் படுக்கைக்கு அடியில் கைவிட்டு நூறு, ஐம்பது என்று ரூபாய்த் தாள்களை கொத்தாய் எடுத்து இவனிடம் நீட்டினாள்.  ‘பிடி இதை’ என்றாள். ‘இது எதுக்கு? ’உன்னைப் பார்க்க வந்ததுக்கு எனக்கு கூலி தர்றியா?’ என்றான்.

“நீ எத்தனை சிரமத்துல இருக்கேன்னு எனக்குத் தெரியாதாண்ணா. பார்க்க வர்றவங்க எல்லாரும் பண்மாத் திணிக்கறாங்க. என் அத்தை வந்துட்டா உனக்குத் தர முடியாமப் போயிடும், பிடி” என்றதும் வாங்கி பேண்ட் பாக்கெட்டில் திணித்துக் கொண்டான்.

“இன்னும் எத்தனை நாள் ஆஸ்பத்திரியில் இருக்கோணுமாமா? ரம்யா வேற நீ வீட்டுக்கு வந்த பிறகுதான் வந்து பாத்துக்கிறதா சொன்னாள்”

என்றான். ‘இன்னும் ரெண்டு நாள் இருந்தாப் போதும்னு டாக்டர் சொல்லிட்டாருண்ணா’ என்றாள் மஞ்சு.

அடுத்த அரைமணி நேரத்தில் மஞ்சுவிடமும், அவள் அத்தையிடமும் விடைபெற்று விநோதினியுடன் கிளம்பி விட்டான் பாலகிருஷ்ணன். திங்களூருக்கு அருகாமையில் டி.வி.எஸ் வருகையில் ரோட்டோரமாய் புளியமர நிழலில் வண்டியை நிறுத்தி விட்டு பாக்கெட்டில் இருந்து மஞ்சு தந்த பணத்தாள்களை எடுத்து எண்ணினான். ஆயிரத்து முன்னூற்றி ஐம்பது ரூபாய் இருந்தது. ‘டிரெஸ் எடுக்கலாமாப்பா?’ என்றாள் விநோதினி. ‘எடுக்கலாம் சாமி’ என்றவனுக்கு மேல் பாக்கெட்டில் இருக்கும் ஐநூறு ரூபாய்த் தாள் கனப்பதாய் தோன்றியது.

என்னதான் சிரமம் என்றாலும் பாப்பாவுக்கு யாரோ வைத்த நோட்டை எடுத்துக் கொள்வதா? பாப்பாவை பார்க்கும் போதெல்லாம் இந்த ஞாபகம் தோன்றித் தோன்றிக் கொல்லுமே!

பாலகிருஷ்ணன் டி.வி.எஸ்.ஸை மறுபடியும் சிறுவலூர் மருத்துவமனை நோக்கித் திருப்பினான்.

-குமுதம் - 13.3.2013

# ஸ்னேக சம்பந்தம்

மின்சாரம் போய்விட்டதால் மின்விசிறி நின்று போயிருந்தது. மதியம் பள்ளியில் இருந்து வந்ததும் களைப்பில் வெறும் தரையில் சட்டையுடனே படுத்து தூங்கியிருந்தேன். மேல் சட்டை வியர்வை மழையில் நனைந்திருந்தது. கழற்றுவதற்குக் கூட சிரமமாய் இருக்கிறது என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன் வெளியே வெய்யில் எப்படி இருக்குமென்று. இனி எப்போது மின்சாரம் வருமோ! படிப்படியாக தமிழ்நாட்டில் மின்சாரப்பற்றாக்குறை தீரும் என்ற அறிவிப்பு வெளியாகி நாட்கள் பல ஆகிவிட்டது. இன்னமும் தீர்ந்தபாடில்லை.

சட்டையை ஓரமாய் போட்டு விட்டு துண்டால் உடலைத் துடைத்துக் கொண்டேன். பின்கட்டு போய் குளுகுளுவென்று தொட்டித் தண்ணீரை தலையிலிருந்து ‘மொடேர்ச் மொடேர்ச்’சென போசியில் மோந்து ஊற்றிக்கொள்ள வேண்டும் என்றிருந்தது. வீட்டின் வெளியில் காற்று வீசிக்கொண்டிருப்பதற்கான அறிகுறி தெரியவில்லை.

“தொந்தி போடுதுங்க சார்.. யோகாசனம் பண்ணி தொந்தியை கொறையுங்க! பொண்ணு பார்க்கப் போனீங்கன்னா உங்க தொந்தியை பார்த்து பிள்ளை வேண்டாமுன்னு சொல்லிடுவா!” என்று பள்ளியில் சக ஆசிரியர் மாலினி சொன்னது இப்போது காதில் எதிரொலிப்பது போலிருக்கவே இளம் தொந்தியை தடவினேன். சீக்கிரம் இதைக் குறைக்க வேண்டும். பார்க்க இப்போதைக்கு பயப்படுத்தும் விதமாய் இல்லை என்றாலும் பெருத்து விட்டால் தொந்தரவு தான். சாப்பாட்டு விசயத்தில் அப்படியொன்றும் அள்ளி பூசிக்கொள்வதில்லை! இருந்தும் இதற்கு மட்டும் தீனி போட்டது போல வருகிறதே! தஞ்சாவூரில் அம்மாவும் அப்பாவும் பெண் தேடிக் கொண்டிருக்கும் சமயத்தில், முப்பது வயதான எனக்கு வயிற்றில் மத்தளாமா? கூடாது தான்.

“உங்களுக்கெல்லாம் வேளா வேளைக்கி சமைச்சுக் கொட்டணுமா? வெறுமனே கா! கா! ன்னு கத்திண்டே ஆத்தை சுத்துங்கோ! இன்னும் சித்த நாழியாகும். நீயும் கிளம்பு எங்காச்சும் மரத்தடியிலெ உருண்டு பெறண்டு நாழி கழிச்சு வா” கத்தும் காக்கைகளிடமும், திண்ணையில் கிடந்த நாயிடமும் பக்கத்து வீட்டு மாமி பேசிக்கொண்டிருந்தது சிரிப்பைக் கூட்டியது. எழுந்து வெளித்திண்ணைக்கு வந்தமர்ந்தேன்.

சொல்லவில்லையே! இந்த அக்ரஹாரத்தின் பெயர் பாளையபுரம். ரொம்பப் பழையபுரம் என்று வைத்திருக்கலாம் சரியாய் இருந்திருக்கும். வீதியில் தர்மராசு போய்க் கொண்டிருந்தான். எதேச்சையாய் திரும்பிப்

பார்த்தவன் என்னைப் பார்த்து புன்னகைத்தபடி வந்தான்.

தர்மராாசுவுக்கு அப்பா அம்மா என்று யாருமில்லை. இந்த அக்ரஹாரதிற்கு இவன் வந்து நான்கு வருடங்களாகி விட்டது. முதலாக இவன் இங்கு காலடி வைத்த போது பத்து வயது தான் இருக்கும். காற்றடித்தால் பறந்து சென்று விடுபவன் போலத்தான் அப்போது இருந்தான். இப்போது கொஞ்சம் தேவலை போல இருந்தான். இந்த நான்கு வருடத்தில் ஆள் அப்படியே மாறி விட்டான். அக்ரஹாரத்தில் எல்லா வீடுகளுக்கும் எடுபிடி ஆளாக இருந்து வந்தான். ஆச்சாரியார் விட்டு திண்ணை தான் இவன் படுக்கும் இடம். எந்த வீட்டில் சாதம் மிஞ்சிப் போனாலும் ராசு! ராசு என்று இவனைத்தான் தேடுவார்கள். எல்லா வீட்டிலும் கை நனைக்கும் ஒரே ஆள் தர்மராசு தான்.

இரண்டு மாதம் போல நன்றாகத்தான் ஓடி ஆடியபடி இருப்பான். ரேசன் கடை சென்று வருவது, தண்ணீர் எடுத்து வருவது என்று நாள்முழுக்க அவனுக்கு வேலை இருந்து கொண்டேயிருக்கும். திடீரென ஒரு நாள் முழுக்க பிள்ளையார் கோவில் மரத்தடியில் சுருண்டு வயிற்று வலி என்று கிடப்பான். அன்று யார் கூப்பிட்டாலும் அவன் எழ மாட்டான். அன்று யார் வீட்டுக்கும் சாப்பிடவும் போக மாட்டான். எந்த வீட்டு ஆட்களும் அவனிடம் போய், ‘என்னடா வயிற்று வலி? வா டாக்டர் கிட்ட பார்த்துட்டு வருவோம்’ என்று கூப்பிட்டுச் செல்லவும் மாட்டார்கள்.

“என்னங்க சார் ஸ்கூல் இன்னிக்கி அரை நாள் லீவா?”

“ஆமாம்டா! டவுன்ல இருந்து வந்ததும் உடம்பு அடிச்சுப் போட்டாப்ல இருக்க ஆசாரத்துல படுத்து கண்ணசந்துட்டேன். கரண்ட் போனதும் வெளிய வந்துட்டேன். அதவிடு. ரொம்ப நிதானமா போறியே ஜோலி ஒன்னும் இல்லையா?” என்றேன்.

“சித்த கழிச்சு அக்ரஹாரத்து கோடியில இருக்கிற கோமதி மாமி ஆத்துல தண்ணி மோந்து கொடுக்கப் போகணும் சார். இங்க எல்லா ஆத்துக்காரங்களும் எனக்கு வேலைன்னு எதாச்சும் கொடுக்கிறா, நீங்க மட்டும் ஏன் சார் எதும் சொல்லுறதேயில்ல?”

“உனக்கு நான் என்ன வேலை செய்ய சொல்றது?”

“பாத்திரம் அலம்பி வைக்க சொல்லுங்க. அதை ஒன்னு தான் நான் செய்யுறதேயில்ல எங்கேயும். எந்த ஆத்துலயும் சமையல் கட்டு வரை நான் போனதே இல்லை. வெளித் திண்ணையோட சரி.”

“சனி, ஞாயிறு மட்டும் தான் இங்க சமைக்கிறேன் நான். நானே அதை

கழுவி கமுத்திடறேன். இன்னிக்கு ராத்திரி உப்புமா கிண்டுறேன் நீயும் வா சேர்ந்தே சாப்பிடலாம்”

“ஒரு வேலையும் செய்யாம உங்க ஆத்துல நான் சாப்பிட மாட்டேன். எனக்கு கோமதி மாமி இன்னிக்கு புளிக் கொழம்போட சாப்பாடு போடும்”

“நல்ல பழக்கமாடா உனக்கு! மாமிகள் மீந்து போனதை குண்டான் ரொம்ப கொட்டி உனக்கும் டேஸ்ட் கத்துக் கொடுத்திருக்காங்க. உனக்கெங்க சூடா உப்புமா இறங்கும்? போவட்டும் நேத்து கோவில்ல ஆச்சாரியார் என்ன வாதம் சொன்னார்? ஞாபகமிருக்கா?”

“அதுவா? பிராமண தர்மத்தின்படி பாம்பினோட பிணம் கூட பிராமணனோட கண்ணுல பட்டால் அதுக்கு யோக்கிதையான சவ அடக்கம் பண்ணிடணுமாம். அப்படி செய்யாம போஜனமே பண்ணக்கூடாதுன்னு விதி இருக்கிறதா சொல்லிட்டு இருந்தார். நான் கிளம்புறேன் சார். நாழி ஆயிடுச்சு! மாமி சத்தம் போடும்” என்று நகர்ந்தவனிடம், ‘ஆச்சாரியார் கிட்ட நல்லதா ஒரு டவுசர் கேக்கலாமல்ல’ என்ற போது கிழிசல் டவுசரை ஒரு பார்வை பார்த்து புன்னகைத்து விட்டுச் சென்றான்.

முன்பொருமுறை ஆச்சாரியாரிடம் அவர் வீட்டுத் திண்ணையில் தர்மராசுவின் வயிற்று வலி பற்றி பேசினேன். வெற்றிலையை அதக்கிக் கொண்டே தலையை ஆட்டி கேட்டுக் கொண்டவர், ‘விசயம் புரியுதுடா அம்பி.. உனக்குத்தான் புரியில. அது அவன் ஆத்துல தோப்பனார் ஏதாவது தப்பு காரியம் செஞ்சிருப்பார். அதான் ஆண்டவன் அந்த வம்சத்தை தண்டிக்கிறார். நாம என்ன செய்ய? டாக்டர் கிட்ட கூட்டிப் போகவா? செலவை யார் ஏத்துப்பா? கடவுள் என்ன அவன் தலையில எழுதியிருக்காரோ அதுபடித்தான் நடக்கும்” என்றார். இதனால் தான் இதை பழையபுரம் என்றேன்.

அக்ரஹாரத்து பெண்கள் அவன் வயிற்று வலி என்று படுத்து விட்டால் தாடையில் கைவைத்து பாவமே! என்று பார்த்துப் போய் விடுவார்கள். ஒன்றிரண்டு பேர் கஷாயம் வைத்து கொண்டு போய் கொடுத்த சம்பவமும் உண்டு. ஏதாவது ஒரு நாளில் இவனை வைத்தியரிடம் அழைத்துப் போகும் எண்ணம் என் மனதில் இருந்து கொண்டு தான் இருக்கிறது. அதற்கு நேரம் வாய்க்கிறதா சீக்கிரம்?

“கிணிங் கிணிங்” சைக்கிள் மணியோசை கேட்டு தர்மராசுவின் நினைவிலிருந்து விலகினேன். ஆச்சாரியாரின் மகள் புஷ்பவள்ளி தான்

வேண்டுமென்றே பெல் அடித்து விட்டு ஓரப்பார்வை வீசியபடி சென்றாள். பத்தாம் வகுப்பில் கோட்டை விட்டுவிட்டு வீட்டோடு இருக்கிறாள். எந்த நேரமும் நொறுக்குத் தீனியுடன் டிவிமுன் அமர்ந்திருப்பாள். “எங்காத்துல சமையல் பிரமாதமா இருக்கும். கை நனைச்சுட்டு போங்கோ” என்று எப்போது அவள் வீட்டு வழியே சென்றாலும் குரல் கொடுப்பாள். லலிதா மாமி பையனுக்கு லவ் லெட்டர் கொடுத்தாள் என்ற வழக்கு கொஞ்சம் நாள் முன்பாக அவள் மீதிருந்து அது அழிந்து விட்டது. லலிதா மாமியின் பையன் பார்க்க நன்றாக இருப்பான். பால் வடிந்து ஊற்றும் முகம். பஜாஜ் டிஸ்கவரில் சாலையில் வருவான். ஒருமுறை புஷ்பவள்ளி சைக்கிள் மீது நன்றாக விட்டான் என்றார்கள். அந்தச் சம்பவம் கூட அவளுக்குள் காதல் விதையை தூவி இருக்கலாம் என்று நான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

00000

ஞாயிற்றுக்கிழமை என்பதால் படுக்கையில் இருந்து சீக்கிரம் எழாமல் சோம்பலாய்க் கிடந்தேன். வெளியே சிறுவர்களின் கூச்சல் கேட்டபடி இருந்தது. பெண்களின் குரலும் கேட்டது. ‘அங்கெல்லாம் நீங்க போக வேண்டாம். மத்தவா கிட்ட உளறிட்டு திரியாதீங்கோ’ என்று குரல் கேட்கவும் என்னவோ நடந்திருக்கிறது என்று எழுந்து முகம் கழுவிக் கொண்டு வெளியில் வந்தேன். காரணம் சீக்கிரம் தெரிந்து போயிற்று.

ஊர்க்கோடியில் இருந்த கிணற்றருகே தர்மராசு மல்லாந்து கிடந்தான். கால்களை தரையில் பலமாய் உதைத்திருக்கிறான் என்பதற்கான அறிகுறிகளும் இருந்தன. சின்ன வயதில் இப்படி ஒரு சாவா? அக்ரஹாரத்து பிள்ளையார் தூரத்தில் இருந்து பார்த்தபடி தான் இருந்திருக்கிறார். சம்பவம் ஒருவேளை இரவில் நடந்திருக்கலாம். பெரியவர்கள் கைகட்டி ஓரமாய் நின்றிருந்தார்கள். என்ன செய்வது என்று யாருக்கும் தெரியவில்லை. போலீசுக்கு தகவல் சொல்லிடலாம் என்று யாருடைய குரலோ கேட்டது.

“பார்த்தியா தம்பி.. நான்சொன்னேன்ல சாமி தண்டிச்சுடுச்சு” என்றார் ஆச்சாரியார் என் அருகாமை வந்து. எனக்கு கோபமாயும் இருந்தது. சரி என்னதான் முடிவெடுப்பார்கள் என்று பார்க்க நின்றிருந்தேன். சிதம்பரம் தான் பேச்சை துவங்கினார்.

“செத்தவா என்ன ஜாதின்னெல்லாம் அக்ரஹாரத்துல யாருக்கும் தெரியாது. இருந்தாலும் பையனுக்கு பூணுல் மாட்டி விட்டு நீயும் பிராமணன் தான்னு சொல்லிண்டு பேசிண்டு வந்திருக்கோம். இப்போ செத்தவாளை எங்க நிஷ்டை செய்யுறது ஆச்சாரியாரே? குரு

பெரியவாளுக்கு சமமான நீங்களே சொல்லுங்கோ. அக்ரஹாரத்து பிராமணியத்தை பாதுகாக்க வேண்டியது உம்ம பொறுப்பு”

“தர்மசாஸ்திரத்துல இதுக்கு ஏதாவது இருக்கும். சாந்தி பண்ணிய பிற்பாடு தான் பிணத்தை கிளப்பணும். சாஸ்திரப்படி நாம நடக்கிறது தான் சரி.” என்றார் அவரும். இப்போது சுவாமிநாதன் என் அருகில் நின்றிருந்தவர் இடையில் புகுந்தார்.

“சநாதன தர்மத்தின்படி அக்ரஹாரத்துல இருந்து பிணம் போற வரைக்கும் பூஜை, ஸ்நானம், சந்தியா வந்தனம், சாப்பாடு எதுவும் நடக்கக் கூடாதுங்கறது எல்லோருக்கும் தெரியும். அதனால சீக்கிரம் முடிவு சொல்லுங்கோ! இறந்தவாளோட ரத்த சம்பந்தம் இங்க யாரும் இல்ல” என்றார். அர்த்தம் புரியாத மந்திரங்களால் நிரம்பியிருக்கும் பிராமணர்களின் தலையிருள் மந்திரங்களை விளக்கும் ஆச்சாரியார் கூட குழம்பிப் போய் யோசித்தார்.

“சாமி தண்டிச்சிருக்குண்ணா.. சாமியவே ஒரு வார்த்தை எதுக்கும் கேட்டுடுங்கோ” என்று ஒருவர் கூற நான் பேசத் துவங்கினேன்.

“ஆச்சாரியாரே! சாமி தண்டிச்சிருச்சுன்னு சொல்லி இது மாதிரி எத்தனை உயிர்களை சாகடிப்பீங்க? பையன் பிணம் வெய்யில்ல காஞ்சுட்டு இருக்கு தெரியுதா? இப்பப் போய் யோசனையா? இனிப்போய் சாஸ்திரம் படிச்சு நீங்க முடிவு சொல்லி.. பாவம் இது”

“பெரியவா பேசுறச்சே நீ வாயை மூடிண்டிரு”

“பூணூல் போட்டுட்டா மட்டும் பெருசில்ல ஆச்சாரியாரே! தலையிலயும் கொஞ்சம் வேணும். எனக்குத் தெரியாதா உங்க குணம்? அனாதை பையனுக்கு உதவி செய்ய மனசு வரலை பதிலா தோசமாம்! இன்னும் ஒருமணி நேரத்துல பிணம் கிளம்பியாகணும் இங்கிருந்து. பிராமணியத்தை யாரும் காப்பாத்த வேண்டாம். இதுல சாஸ்திரம் வேண்டாம் ஆச்சாரியாரே! மனித உடல் இறந்திடுச்சு. அதை அடக்கம் பண்றோம் அவ்ளோதான். ஒவ்வொரு வீட்டுக்கார ஆண்களும் ஆளுக்கு 50 ரூபா என்கிட்ட கொடுங்க. இல்ல குரு பெரியவா கிட்ட ரிப்போர்ட் பண்ணி முழு அக்ரஹாத்தையும் பஹிஸ்காரம் பண்ண வச்சிடுவேன்” என்றதும் அவரவர்கள் மடியிலிருந்து பணம் எடுத்து நீட்டினார்கள்.

“எல்லா வீட்டுலயும் அவன் உபகாரத்தை ஏத்துக்கிட்டதுக்கு கைமாறா இதை பண்ணுங்கோ”

அன்றே பதினொரு மணியளவில் தர்மராசுவின் பிணம் மின்மயான வண்டியில் கிளம்பியது. ஆச்சாரியார் அந்த வேனில் ஏறவில்லை.

# சொல்வதெல்லாம் மடமை (கலாட்டா)

நீதிபதிகளை விடவும் மிகவும் பொறுப்பாகவும், தேவை என்கிறபோது மீசையை முறுக்கி, கண்களை உருட்டி மிரட்டி, பயப்படுத்தி பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவரும் சாமார்த்தியமும், அநீதி கண்டு கொதித்துவிடும் குணமும் கொண்ட நேசனல் பொன்னையா ஒய் டிவியில் இரவு எட்டரை மணிமுதல் ஒன்பதரை மணிவரை பாதிக்கப்பட்டவர்களின் பிரச்சனைகளை அலசி ஆராய்ந்து தீர்ப்பு வழங்கும் நிகழ்ச்சி அனைத்து மக்களாலும் பாராட்டப்பட்ட நிகழ்ச்சி. அவரை நாமும் எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டலாம்.

எப்பேர்ப்பட்ட சிக்கலான பிரச்சனையானாலும் நடுவராக இருந்து நேர்மையான முறையில் நேசனல் பொன்னையா தீர்ப்பு வழங்குவதால் தமிழகமே அவரை நீதி தேவனாக வணங்குகிறது என்பதில் சிறிதளவும் ஐயம் இல்லை! இத்தனைக்கும் அவர் படிப்பு வெளியில் சொல்ல முடியாத படிப்பு தான். ஒய் டிவிக்காரர்களை தன் அடியாட்களைக் கொண்டு மிரட்டித்தான் இந்த நிகழ்ச்சிக்கே அவர் வந்தார் என்று பிரபல பத்திரிக்கை ஒன்று புள்ளி விபரங்களோடு எழுதி இருந்ததை இவர் மறுத்தார். மேலும் இன்னும் மூன்று பரம்பரைக்கான சொத்து வீட்டில் இருப்பதாயும், அதை உட்கார்ந்தோ இல்லை நின்றுகொண்டு சாப்பிட்டோகூட அழிக்க முடியாது என்றும் கூறியிருந்தார். மிரட்டி ஒரு சேனலில் நுழைந்து சம்பாதிக்கும் தேவை தனக்கு இல்லை என்றும் கூறினார்.

சமூகத்தில் தான் எத்தனை எத்தனை பிரச்சனைகள்? ஏழு பெண்டாட்டிக்காரன் பிரச்சனை, இரவில் வீடே அண்டாத மனைவிகள் பிரச்சனை, ஓடிப்போன மனைவியை தேடிப்போன கணவனின் பிரச்சனை, பக்கத்து வீட்டுக்காரன் பல்ட்டி அடித்த பிரச்சனை, தூங்கும் கணவன் தலையில் கல்லைப் போட்டு கொன்று கள்ளக் காதலனுடன் ஓடிய பெண்ணின் பிரச்சனை என்று சமூகத்தில் கமுக்கமாய் நடக்கும் விசயங்களை ஒய் டிவி இந்த சொல்வதெல்லாம் மடமை நிகழ்ச்சி மூலம் வெளியே கொண்டுவந்து தீர்ப்பையும் தருகிறது! இந்த நிகழ்ச்சியில் வருபவர்களெல்லாம் நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே! பணம் படைத்த முதலைகள் இந்த நிகழ்ச்சிக்கு பிரச்சனைகளை கொண்டு வருவதில்லை.

தமிழகத்தில் இந்த நிகழ்ச்சியை கண்கொண்டு பார்க்காதவன் ஒருவன் இருக்கிறான் என்றால் அது நான் ஒருவன் தான். ஒரு நாள்கூட நான்

பார்த்தது இல்லை. ஒய் டிவி எந்த நெம்பரில் வருகிறது டிவிப் பொட்டியில் என்றுகூட தெரியாது. அந்த சமயத்தில் என் அம்மா நாடகத்தில் மூழ்கி இருப்பார். பகலிலும் ஓடுகிறது என்கிறார்கள். மின்சாரம் இல்லாமல் என் அம்மா கரண்ட்டுக்காரனை திட்டிக் கொண்டிருக்கும். சொல்வதெல்லாம் மடமை நிகழ்ச்சி பார்க்காவிடில் சிலருக்கு சோறே இறங்குவதில்லை என்கிறார்கள்.

சட்டப்படி இணைந்த கணவன் மனைவியை முன்பெல்லாம் ஊர் நாட்டாமைகள் தான் பொது இடத்தில் அமர்ந்து இருதரப்பு நியாயங்களை கேட்டு அலசி சேர்த்தோ பிரித்தோ வைப்பார்கள். இன்று ஊர் நாட்டாமைகள் சுடுகாட்டில் படுத்திருக்கிறார்கள். அவர்களின் வாரிசுகள் சாப்ட்வேர் இஞ்ஜினியர்களாக வெளியில் இருக்கிறார்கள்.

ஒய் டிவியில் வரும் வழக்குகள் பெரும்பான்மையாக நான்கு பெண்டாட்டிக்காரன் வழக்குகளாகவே இருப்பதை கவனித்திருக்கலாம். இது ஆணாதிக்க சமூகம் தான் என்பதை பெண்களுக்கு சுட்டிக்காட்டிக் கொண்டேயிருக்கிறது. ஒரு ஆணாதிக்க சமூகத்தில் பெண்ணானவள் கட்டுப்பட்டு அடங்கித்தான் வாழவேண்டும் என்பது நியதியாகி விட்டது. கால காலமாக இருந்து வருவதை யாரும் புதிதாய் மாற்ற விரும்புவதில்லை.

பிரியத்துக்கு புருசனை அண்ணா என்றழைக்கும் பெண்மணிகள் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள். வாழ்க்கை எல்லோருக்குமே சிக்கல் நிறைந்ததாகத்தான் இருக்கிறது. மீடியாக்கள் இன்று கண்கொத்திப் பாம்புகளாக இருக்கின்றன. உங்கள் வீட்டு படுக்கை அறைக்குள்ளும் கூட அவை டிஜிட்டல் கேமராவுடன் எப்போது வேண்டுமானாலும் நுழையும் அபாயம் நெருங்கிக் கொண்டேயிருக்கிறது. புருசன் ஏமாற்றினான் என்றும், மனைவி ஏமாற்றினாள் என்றும் ஊரே கேளூ நாடே கேளென மீடியா அவர்களை அள்ளிக் கொண்டுபோய் பேசவைத்து கேட்கிறது.

வணக்கம்! வந்தனம்! நமோஸ்கார்! சொல்வதெல்லாம் மடமை நிகழ்ச்சிக்காக இன்று ஈரோடு மாவட்டம் ஈங்கூரைச் சேர்ந்த இருபத்தி நான்கு வயதுப் பெண் கமலா வந்திருக்கிறார். அவருக்கு எல். கே.ஜி. செல்லும் நிர்மலா என்கிற பாப்பா இருக்கிறது. இவரின் கணவர் முருகேசன் ஏற்கனவே திருமணமானவர். தன் முதல் மனைவி அமுதாவை விட்டு விட்டு இரண்டு வருடம் தனியாக சோகத்துடன் வாழ்ந்தவரை கமலா காதலித்து திருமணம் முடித்திருக்கிறார். கமலாவுடனும் அவர் கடந்த ஒருவருடமாக பாலியல் தொடர்பு வைத்துக்

கொள்வதில்லை என்ற பகீர் குற்றச் சாட்டுடன் இங்கே நம் ஒய் டிவிக்கு வந்திருக்கிறார். வாருங்கள் நாம் அவரையே கேட்டுப் பார்ப்போம்!

“வா கண்ணு! இவத்திக்கி ஷோபாவுல உக்காரு! உன்ற பேரு என்னன்னு சொல்லு கண்ணு!”

“எம்பட பேரு கமலவேணிங்க, சார்!”

“ரொம்ப சின்ன வயசா சிக்குன்னு லட்சணமா இருக்கே கண்ணு! உம்பட பிரச்சனைய எம்பட கிட்ட சொல்லு”

“எம்பட ஊட்டுக்காரரு தெனமும் என்னையக் கண்டுக்கறதில்லீங்கொ” என்று சொன்னவள் தன் முகத்தை கைகளால் மூடிக்கொண்டு ஊ ஊ என்று அழுகிறாள்.

“இங்க என்னையப் பாரு கண்ணு, அழப்புடாது பாத்துக்க! அப்புறம் நிகழ்ச்சிய பார்த்துட்டு இருக்குறவங்களும் சேர்ந்து ஆரம்பிச்ச ஒடனே அழுவ ஆரம்பிச்சுடுவாங்க கண்ணு! ஏன் ஊட்டுக்காரரு கண்டுக்க மாட்டீங்கறாரு? வயசானவரா? ஐம்பது வயசுக்கும் மேல ஆயிப்போச்சா?”

“இல்லீங்க சார் ஊ ஊ… அவருக்கு வர்ற தை பொறந்தா முப்பத்தி அஞ்சு வயசு ஆவப் போவுதுங்க”

“அதுக்குள்ள அவட்டை கழண்டு போச்சா அவருக்கு? அதிசீமா இருக்கு?”

“எனக்குத் தெரியலீங்களே!”

“உனக்குத் தெரிஞ்சிருந்தா இங்க ஏன் வந்து நிக்குறே! சரி நீயாச்சும் இலை மறைவு காய் மறைவா பேசிப் பார்த்தியா?”

“மரத்துல மறைஞ்சே பேசிட்டனுங்க! அடிக்கவே பல்லை கிஞ்சீட்டு வர்றாரு!”

“ஆம்பளைங்க முன்னாடி கவர்ச்சியா ஒரு மனைவி நடந்துக்கோணும் பாத்துக்க! அப்டியே லைட்டா துணிய சினிமாப் படத்துல வர்ற மாதிரி சைசா நெவுத்தி உட்டுட்டு ஊட்டுக்காரனை தூண்டோணும் அதுக்கு! நீ தான் கண்ணு ஏற்பாடு பண்ணிக்கோணும்”

“அதெல்லாம் வேலைக்கு ஆவலீங்க”

“நீ எப்படி கண்ணு முயற்சி பண்ணுனே? இங்க அப்படி செஞ்சு காட்டு!” என்றதும் கமலா அழுது கொண்டே ஒரு காலை உயர்த்தி மடித்து மாராப்பை சைடாக தள்ளி தன் அழகை வெளிக்காட்ட

முயற்சிக்கிறாள். ஒய் டிவி கேமரா கமலாவை குளோசப்பில் ஒரு ரவுண்டு காட்டுகிறது. டிவி கேமராக்காரன் படா கில்லாடி போலுள்ளது! இன்னொரு சுத்து வந்து காட்டினான் நிகழ்ச்சியை பார்க்கும் மக்களுக்கு. பொன்மேனி உருகுதே! என் ஆசை பெருகுதே! ஏதேதோ நினைவு தோணுதோ! பாடல் பின்னால் பாடியது அப்போது!

"இப்படி அழுதுட்டே முயற்சி பண்ணுனீன்னா நானே எந்திரிச்சு ஓடிப்போயிடுவன் பாத்துக்கவே"

"வீட்டுல இதுக்கெல்லாம் அழமாட்டனுங்க நானு. சினிமாவுல எத்தனை படத்துல பாத்துருக்கேன். ஒதட்டை கடிச்சுட்டு கண்ணை செருவுனாப்புல வச்சிக்கறது தானுங்க. ஆனா அவரு கண்டுக்கவே மாட்டாருங்க"

"இதுக்காவ அடிச்சி கிடிச்சு வெச்சுடுவாப்லையா அவுரு?"

"ஆமாங்கோ! ஒரு தடக்கா தூங்குறப்ப தூக்கத்துல தெரியாம அவரு காலு மேல எம்பட காலை போட்டுட்டனாட்ட இருக்குதுங்க. அந்தளவுக்கு ஆயிப்போச்சான்னு செவுனில ரெண்டு வீசிட்டாருங்க நடுச் சாமத்துல! அதுல இருந்து வெளித்திண்ணையில பாயப் போட்டு அஞ்சு மாசமா படுத்துக்கறாப்லைங்க!"

"கொழந்தை கிட்டவாச்சும் அன்பா பாசமா இருப்பாப்லையா?"

"அதெல்லாம் இருப்பாருங்க! எங்க போனாலும் பிஸ்கோத்து லொட்டு லொசுக்குன்னு தீம்பண்டமா வாங்கிட்டு வந்து அதுக்கு குடுப்பாப்லைங்க பெருந்துறை சிப்காட்டுல அவுருக்கு பைப் கம்பெனில வேலங்க. தெனமும் பத்து மணிநேரம் வேல செஞ்சுட்டு வருவாருங்க. வீட்டுச் செலவுக்கு பணமெல்லாம் குடுத்துருவாப்லைங்க. நல்ல மனுசன்"

"அப்படி நல்ல மனுசனை இப்படி ஊரே சிரிக்கும்படியா ஒய் டிவில கூட்டியாந்து உக்காத்தி வெச்சுட்டியேம்மா!"

"வெட்டு ஒன்னு துண்டு ரெண்டுன்னு நீங்க முடிவு பண்டிச் சொல்லிப் போடுவீங்க! வேற யாருகிட்டயின்னு நான் போயி எம்பட பிரச்சனையச் சொல்லுவேன்?"

"ஏங்கண்ணு, மொத மொதல்ல யாரு காதலைச் சொன்னது? அவரா நீயா?"

"என்ன இருந்தாலும் நானு பொம்பளை இல்லீங்களா.. அதனால நாந்தான் மொதல்ல சொன்னேன். அவரும் பொறவுக்கே ஐ லவ் யூன்னு

சொல்லிப் போட்டாருங்க.. ஊ ஊ..”

“அதுக்கு ஏன் கண்ணு திடீருன்னு அழுவுறே?”

“எனக்கு பழசெல்லாம் ஞாவகம் வந்துடுச்சுங்க ஊ.. ஊ”

“சரி நான் உனக்கு என்ன பண்ணோனும் கண்ணு?”

“ஒரு வருசத்திக்கும் முன்ன அவரு ஆம்பளையா எம்படகிட்ட நடந்துக்கிட்டாருங்க. அதே மாதிரி இனிமேலும் நடந்துக்கணும். சித்த நேம்பா அவுருகிட்ட சொல்லி புரிய வெய்யுங்க” என்று கமலா சொன்னதும் நேசனல் பொன்னையா நம்மைப்பார்த்து டிவித்திரையில் பேசுகிறார்.

“சொல்வதெல்லாம் மடமை நிகழ்ச்சியை பார்த்துக் கொண்டிருக்கும் நேயர்களே! இந்தப்பெண் தான் காதலித்தவரையே திருமணம் செய்து பிள்ளையையும் பெற்றிருக்கிறார். தனது பாலியல் தேவைக்காக தப்புத்தண்டாவுக்குள் இறங்காமல் நேராக நம்மிடம் பிரச்சனையை கொண்டு வந்திருக்கிறார். இம்மாதிரியான பத்தினித் தெய்வங்கள் கொங்கு மண்ணில் வாழ்வதால் தான் மழையானது கொசுறுத் தூறலாகவேனும் தூத்துகிறது! தன் கணவருக்கு இவர் சிட்டுக்குருவி லேகியம் தயார்படுத்திக் கொடுத்திருக்கலாம். ஆனால் இப்போது சிட்டுக்குருவிகளை நாம் பார்ப்பதே அரிதாகி விட்டது. இந்தப் பெண்ணின் கண்ணீரை நாம் துடைத்து வைக்க என்ன செய்யப் போகிறோம்? சிறிது இடைவெளிக்குப் பிறகு பார்ப்போம்.

“வணக்கம்! உங்க பேரு என்னங்க?”

“எம்பேரு முருகேசனுங்க”

“உங்களோட சொந்த ஊரை சொல்ல முடியுமுங்ளா?”

“நானும் ஈங்கூரே தானுங்கண்ணா! கமலாவை கட்டிட்ட நாள்ல இருந்து பைப் கம்பெனிக்கு போயிட்டு வந்துட்டு இருக்கனுங்க! சம்பளம் சேத்தி குடுக்கச் சொல்லியிருக்கணுங்க! பாக்கலாமுன்னு சொல்லியிருக்காங்க! பின்ன விக்குற வெலவாசில ரெண்டு குடும்பத்தை ஓட்டணுமுங்கள்ள!”

“கமலாவை நீங்க லவ் பண்ணித்தான் கட்டிக்கிட்டீங்களா?”

“ஆமாங்கண்ணா! அப்ப கமலா ஈங்கூர்ல நூலு மில்லுக்கு ஜிகுஜிகுன்னு போயிட்டு வந்துட்டு இருந்தாளுங்க. கூடவே தொணைக்கி இவ அக்கா ஈஸ்வரியும் போனாளுங்க. அவளும் எங்கிட்ட அதே நாள்ல காதலை

சொன்னாளுங்க!”

“அவளையும் கட்டிக்கிட்டீங்களா?”

“இல்லீங்க. அவளுக்கு மேல் வரிசைப் பல்லு எல்லாமும் வெளிய நீட்டீட்டு இருக்குமுங்க. தேங்கா துருவீன்னு தான் இவளும் அக்காளை கூப்பிடுவாளுங்க”

“பழிச்சு சொல்றது தப்புங்க முருகேசன். இந்த பொண்ணுகிட்ட சொல்லியிருக்கலாமே”

“அதுல என்னத்தீங்க தப்பு இருக்குது? நானே தேங்காதுருவீன்னு தான் கூப்பிடுவேன்”

“சரி இப்ப நீங்க ஒய் டிவிக்கு எதுக்கு தரத்தரன்னு கூட்டீட்டு வரப்பட்டீங்கன்னு தெரியுமா?”

“என்னைய உலகம் பூராவும் டிவி பொட்டீல காட்டத்தான? காட்டுங்க!”

“உங்க மனைவி உங்ககிட்ட இருந்து பிரிச்சு உடுங்கன்னு சொல்றாங்க! நீங்க அடிச்சு வச்சிடுவீங்களாம்”

“யாருங்க அவளுங்களா? ஊடுன்னு ஒன்னு இருந்தா நாலு சண்டை சச்சரவு இருக்கத்தானுங்க செய்யும்! அவ ஒரு கேனச்சீங்க! உப்பு எடுத்தாடின்னா சக்கரைய எடுத்துட்டு வந்து குடுப்பா! அவ நாயத்தை ஒரு நாயமுன்னு இங்க வேற கூட்டிட்டு வந்து உக்காத்தி வச்சுட்டு ரவுசு பண்ணீட்டு இருக்கீங்க. என்னைய உட்டுட்டு அப்புறம் சோத்துக்கு சைஞ்சக்கா போடுவாளுங்களாமா? யாருங்க இவளைக் காணமுன்னு ஈங்கூர்ல உக்காந்துட்டு இருக்காங்க? இவகிட்ட என்ன இருக்குது? இவ அப்பங்கிட்ட என்ன இருக்குது?

இவ அக்காளை பிடாரியூருக்கு கட்டிக்குடுத்தாங்க. மூனு வருசம் அவபிருசங்கூட பொழச்சுட்டு துரூவா சண்டைக் கட்டீட்டு அப்பன் ஊட்டுக்கு சொய்குன்னு வந்துட்டா! தேங்கா துருவி கையில ஒரு கொழந்தை வேற! நகையா போட்டு ரெண்டு புள்ளைங்களையும் இவங்கப்பன் கட்டிக்குடுத்தான்? ஒன்னுங் கெடையாது! நானு இவளை ஊட்டுல உக்காத்தி வச்சு சோறு போடறன்ல! ஒய் டிவிக்கும் வருவா, இன்னம் வேற டிவிக்கும் கூட வந்து உக்காந்து நாயம் கேப்பா! இவளைக் கட்டீட்டு எத்தனை இமுசுங்கறீங்க எனக்கு? தீவாளி, பொங்கலுன்னு ஒரு நோம்பி வரப்புடாது. சேல வேணும் சாக்கிட்டு வேணும் பாவாடை வேணுமுன்னு ஒரு மனுசனை அரிச்சு

எடுத்துடுவாளுங்க!”

“காதல் மனைவிக்கு கணவன் செய்யுற கடமைங்க முருகேசன் அது”

“மண்ணாங்கட்டி! ஊட்டுல பீரோவுல நூத்தம்பது பொடவை வச்சிருக்கா! பக்கத்தூட்டுல வேலை வெட்டின்னு போயிட்டு வர்ற பொம்பளை ஒன்னு இருக்குது. அது கூட ஒரு நாளு எங்கிட்ட சொல்லுது, உங்களையே கட்டீருக்கலாமாட்ட இருக்குது! வேலக்கி போயிட்டு இருக்குற எனக்கு சேலை எடுத்து தரமாட்டிங்றான் என் பிருசன். எங்கிட்ட ஆறு சேலை தான் இருக்குன்னு!”

“சரிங்க முருகேசன் வீட்டுல எப்பயும் திண்ணையில தான் பாயி விரிச்சு படுத்துக்குவீங்களா?”

“ஆமாங்கண்ணா”

“அது தப்பு தானே? கணவன் ஆண்மகனா இருந்தால் தான மனைவி மதிப்பு குடுப்பாங்க?”

“கொறட்டை போட்டுட்டு தூங்குவாளுங்க கமலா! ஒரு மனுசன் நிம்மதியா அவ பக்கத்துல படுத்து தூங்க முடியாதுங்க! வேலை செஞ்சுட்டு வந்த களைப்புல கெடந்தா இவ ஊருக்கே கேக்குற மாதிரி கொறட்டை போடுவா! வாரத்துல ஒரு நாளு தானுங்க குளிப்பா இவ” இன்னம் இத்தனை வயசாயும் பாயெல்லாம் ஈரம் பண்டி உட்டுருவா!”

“உங்களுக்கு ஒரே மனைவி இவங்க தானா முருகேசன்?”

“இவளுக்கும் முன்ன பெருந்துறையில அமுதான்னு பொண்ணை கல்யாணம் பண்ணி இருந்தனுங்க”

“ஏன் அப்புறம் கமலாவை கட்டிக்கிட்டீங்க? அது தப்புத்தானே?”

“கமலாகிட்ட சொல்லீட்டுத் தான் கட்டிக்கிட்டேனுங்க நானு. என்னமோ உலவத்தையே ஏமாத்திப் போட்டது மாதிரி பேசுறீங்க?”

“சரிங்க முருகேசன் அப்ப அவங்களை அதாவது அமுதாவை கமலா போட்டுக்குடுத்த திட்டப்படி கொன்னு போட்டு கட்டிக்கிட்டீங்க! சரிதான?”

“யோவ் திருவாத்தானய்யா நீயி? அமுதா அவளோட பிருசங்கூட பெருந்துறையில நிம்மதியா இருக்கா! கொன்னு போட்டதா சொல்றே?”

“ஓ! அப்ப அமுதாங்கறது யாரு? நேயர்களுக்கு தெளிவா சொல்லுங்க முருகேசன்”

“தெளிவா என்னத்தப் போயி நாஞ்சொல்றது? அமுதா என் மனைவி. நாலு மாசம் அவளோட குடும்பம் நடத்தினேன்.. முதல் இரவு கொண்டாடலாம்னு தெனமும் சொல்லுவா அவ. எனக்கு அப்படின்னா என்னன்னு தெரியாது அப்ப! பக்கத்து வீட்டுக்கு புதுசா கல்யாணம் பண்ண ஜோடி ஒன்னு வந்து தங்குச்சுங்க. அந்த வங்குவாலோட இவளுக்கு தொடுப்பாயி அமுதா முதல் இரவு கொண்டாடிட்டா. நான் ஈங்கூரு வந்துட்டேன். இப்ப அந்த வங்குவாலு ரெண்டு சம்சாரத்தோட இருக்கான்.”

“இப்ப கமலாகூட மட்டும் முதல் இரவு கொண்டாட்டம் நடத்துனீங்களா” என்றதும் முருகேசன் வெட்கமாய் ஷோபாவில் நெளிகிறார்.

“சரி நெளியாதீங்க முருகேசன் இடுப்பு புடிச்சுக்கப் போவுது. இப்ப கமலாவோட ஒரு வருசமா நீங்க முதலிரவு வச்சுக்கறதில்லீன்னு வந்திருக்காங்க. இதான் பாய்ண்ட்”

“ஆமாங்க அவளோட வச்சிக்கறதில்லீங்க நானு! அதுக்கு அவளோட சூரத்தனம் தானுங்க காரணம்”

“நீங்க அவங்ககிட்ட சொல்லியிருக்கலாமே”

“சொல்லிப் பார்த்தனுங்க நானு. தண்ணி வாத்துக்கறதுக்கும் இதுக்கும் சம்பந்தமே இல்லீங்குது. எருமை மாடெல்லாம் குளிக்குதாங்கறா! எனக்கு வெறுத்துப் போச்சு”

“அப்ப நீங்க வேற எடத்துல அதுக்கு பாத்துக்கறீங்க சரிதான”

“அதுக்குத் தானுங்க நானு இன்னொருத்திய கல்யாணம் பண்டிக்கிட்டேன்”

“என்னது? இது உங்க மனைவி கமலாவுக்கு தெரியுமா?”:

“நான் சொன்னாத்தானுங்க தெரியும்! நான் சொல்லலை. அவ அக்கா ஈஸ்வரியை கட்டிக்கிட்டனுங்க. அவகொழந்தையோட எங்கிட்ட வந்து கெணத்துல குதிச்சு சாவுறேன்னா! உசுருங்கள்ள, போனா வரவா போவுது? வேலைக்கும் கொழந்தைய வச்சுட்டு போவ முடியலீங்க மாமான்னு அழுதா! அந்த அழுவாச்சி அழுவுறாளுங்க. எனக்கே பாவமாப் போச்சு. நானு இருக்கப்ப சாவலாமான்னு சொல்லி பழைய கவுத்தை கழட்டி வீசிட்டு புதுசா மஞ்சள் கவுறு கட்டீட்டனுங்க”

“பொம்பளைங்க கண்ணை உங்க முன்னாடி கசக்கக் கூடாது. உடனே தாலிய கட்டிடுவீங்க? அவங்களை கிள்ளுக் கீரையா நெனச்சுட்டீங்க.

இதனால கமலாவுக்கு துரோகம் பண்றதா நினைக்கவே இல்லியா நீங்க?”

“நானென்ன இவளை உட்டுப்போட்டு ஓடிட்டனா? கிள்ளுக் கீரை, அகத்திக் கீரைன்னுட்டு”

“நீங்க செஞ்சது இப்ப சரியா? தப்பா? அதைச் சொல்லுங்க முருகேசன்”

“நாஞ் செஞ்சது சரிதானுங்க! கெணத்துல உழப்போன புள்ளையா காப்பாத்தி ஊரு தப்பா பேசக் கூடாதுன்னு தாலி கட்டி வச்சிருக்கேன். அவளும் என்னை சந்தோசமா வச்சிக்கறா! எப்ப நானு போயி வேணுமுன்னு நின்னாலும் பிலுக்காம நடந்துக்கறா!”

“நேயர்களே! தான் செய்ததை தவறே இல்லையென்று ஆணித்தரமாக பேசுகிறார் முருகேசன். ஒரு சிறு இடைவேளைக்குப் பிறகு நாம் ஈஸ்வரியுடன் பேசுவோம்!”

“வாங்க ஈஸ்வரி! இப்படி உக்காருங்க. அட சிரிப்பென்ன உங்களுக்கு? உக்காரத்தான சொன்னேன் நானு. பல்லு சுளுக்கிக்க போவுது. உங்க வீட்டுக்காரர் உங்களை எப்படி கூப்பிடுவாருன்னு சொல்லுங்க?”

“அவுரு தேங்கா துருவின்னு தான் கூப்புடுவாப்லைங்க! ஊரே அப்படித்தான் கூப்பிடும்”

“என்னையெ யாருன்னு தெரியுமா உங்களுக்கு?”

“உங்களைப் பார்த்தா எங்கூரு பெரிய கவுண்டராட்ட தெரியுதுங்க ஒரு அசப்புல”

“போச்சு போ! குழந்தை இருக்குதுன்னாங்க அது எங்க அம்மிணி?”

“அவத்திக்காலிக்கி துணிக்கு பொறவுக்காண்ட பிள்ளைய வச்சுட்டு நிக்காருங்க”

“உங்க தங்கச்சி வாழ்க்கையில பங்கு போட பாக்குறீங்களே இது எந்த ஊரு நியாயம் சொல்லுங்க பாக்கலாம்?”

“இது எங்க ஈங்கூரு நாயமுங்க! பங்கெனத்தீங்க பங்கு போட்டுட்டேன்? அவுரா தேடி வந்தாருங்க. சாவப்போறேன்னு சொன்னேன். வேண்டாமடித் தங்கமுன்னு சொல்லி தாலி கட்டுனாரு. தாலி கட்டின பொறவு அவுரு என்ன சொல்றாறோ அதுபடி நானு கேட்டு நடந்துக்கறனுங்க! எப்பவோ செத்து என்னையுங் கொழந்தையையும் இன்னேரம் இந்த மண்ணு தின்னிருக்கும். எங்கிட்ட ஏனுங்க இவரு வர்றாரு? நாயத்தை சொல்லுங்க! அவ இருக்குற அழகெங்கே? நானு

எங்கே?

என்னையப் பாத்து யாரு பல்லைக் காட்டுவாங்க? ஆனா அழகா இருந்தா மட்டும் போதுமுங்களா? குணம் வேணாமா? எங்கிட்ட அழகில்லீன்னாலும் குணம் இருக்குது. நானும் முன்ன அவருகிட்ட ஐ லவ் யூ சொன்னவ தானுங்களே! அப்போ அவரு அவ அழகுல மயக்கமாயி கட்டிக்கிட்டாரு அவளை. இப்போ என் குணத்துல மயங்கி கட்டிக்கிட்டாரு. ஏனுங்க திண்ணையில புருசனை படுக்கப்போட்டுட்டு காத்தாடி சுத்துற ஊட்டுக்குள்ள தூங்குற பொம்பளை பொழைக்குற பொம்பளைங்ளா? இல்ல நானு கேக்கேன்"

"அப்போ முருகேசனை அவரு மனைவியோட சேர்ந்து வாழ உட மாட்டிங்க நீங்க?"

"நானென்ன இழுத்துப் புடிச்சுட்டா வச்சிக்கிட்டு இருக்கேன்? வருவாப்ல போவாப்ல பணம் தருவாப்ல! நானென்னா சாமத்துலயும் எங்கிட்டவா இவரை புடிச்சுக்குறேன். காக்கா கூட பங்கித் தானுங்க திங்கிது! ஆனா நீங்க சொல்றதை பார்த்தா ஒரு யோசனை ஓடுதுங்க எனக்கு! நாஞ் சொன்னாப் போதும் கொன்னு போட்டு வாங்க கமலாவைன்னு! கொன்னு போட்டு வந்துடுவாப்லை. பிருசனை சந்தோசமா வச்சிக்கத் தெரியாதவ எல்லாம் டிவி பொட்டீல நாயம் கேக்க வந்துடறா!"

"நேயர்களே! இவர்கள் ஒவ்வொருவர் பேச்சுகளும் மிகத் தெளிவாகவே இருக்கின்றன. கொங்கு மக்களின் மண்ணின் மகிமையை நாம் இவர்களிடம் பார்க்கிறோம். உணருகிறோம்! தவறைக்கூட சரியாகவே இவர்கள் பார்க்கிறார்கள். சிறிய இடைவெளிக்குப் பிறகு அனைவரையும் வைத்துப் பேசி நாம் ஒரு முடிவுக்கு வருவோம்" நேசனல் பொன்னையா டிவியில் புன்னகைக்கிறார்.

"ஒய் டிவியின் சொல்வதெல்லாம் மடமை நிகழ்ச்சியின் இறுதிகட்டத்தில் இருக்கிறோம் நேயர்களே! இரண்டு அக்காக்களும் அவர்களின் ஒரு கணவரும் இங்கே தங்கள் குழந்தைகளோடு இருக்கிறார்கள். நீங்களே சொல்லுங்க முருகேசன் இவங்க ரெண்டு பேர்ல யாரு கூட நீங்க வாழ ஆசைப்படறீங்க?"

"எனக்கு தேங்காதுருவியோட இருக்கத்தான் ஆசைங்க"

"அப்ப கமலாவை என்ன பண்ணலாம்? உங்க கொழந்தைய என்ன பண்ணலாம்?"

"இவ்ளோ தூரம் ஒன்னுமில்லாத விசயத்துக்கு என்னை தரத் தரன்னு

இழுத்துட்டு சென்னை வரை வந்துட்டாளுங்க இவ! எனக்குன்னு ஊர்ல இருந்த மரியாதையை இவ கப்பலேத்தி உட்டுட்டாளுங்க! இனி ஊர்ல போயி யாரு முகத்துல முழிப்பனுங்க நானு? கமலா கூட வாழுற ஒவ்வொரு நிமுசமும் ஒய் டிவிக்கு இழுத்துட்டு போன கழுதை இதுதானன்னு பாக்குறப்பல்லாம் கோவம் வருமுங்க எனக்கு! கோவத்துல எப்பாச்சிம் கொன்னு போடுவனுங்க நானு. என்னோட தேங்காதுருவி வாழ்க்கை வீணாப் போயிடும்"

"கமலாக் கண்ணு நீ என்னம்மா சொல்றே?"

"நீங்களே பாருங்க அங்கெ! எம்பக்கத்துலியா அவரு நிக்காருன்னு? அவகிட்டத் தான இடிச்சுட்டு நிக்காரு! என் பாப்பாவையும் அவங்களே வளர்த்தட்டும். நானு உங்க கூட வந்துடறேன். அப்பலையாபுடிச்சு என்னாமா பேசுறீங்க அழகா!"

"எனக்கு இந்த நிகழ்ச்சியால ஏற்கனவே ரெண்டு பேரு மனைவியா இருக்காங்க கண்ணு"

"மூனாவதா நானும் இருக்கேனுங்க. முருகேசனை பாக்க கோவங் கோவமா வருதுங்க எனக்கு! கொலை பண்ணிடுவேன். போவச்சொல்லுங்க ஏற்காடு எக்ஸ்பிரஸைப் புடுச்சு ஊருக்கு!" என்றவள் நேசனல் பொன்னையாவிடம் போய் உரசிக்கொண்டு நிற்கிறாள்.

"நேயர்களே! இப்படியான வாழ்க்கையை நீங்கள் இதுவரை பார்த்திருக்கவோ கேள்விப்பட்டோ இருக்க மாட்டீர்கள்! ஒருவரை ஒருவர் புரிந்து விட்டுக் கொடுத்து வாழும் பண்பு எந்த பிரச்சனைகளுக்கும் வாய்ப்பைத் தராது! கமலா மாதிரியான புதுமைப்பெண்ணுடன் வாழ்வை துவங்குவது இனிதான ஒன்றுதான்! மேலும் அடுத்த நிகழ்ச்சிக்காக கோவையிலிருந்து நம் ஒய் டிவி அள்ளி எடுத்து வந்திருக்கும் பிரச்சனையை நாளை காண்போம்! வணக்கம்!"

# நான் ஒருத்தரை மனசுல நெனச்சிட்டேன்.

“அம்மா இல்லாத பொண்ணுன்னு உனக்கு அதிகம் செல்லம் குடுத்து வளர்த்துட்டேன்னு சொந்த பந்தத்துல எல்லோரும் என்கிட்ட பல தடவை சொன்னப்ப எல்லாம் என் மகளை அப்படித்தான் வளர்ப்பேன்னு மனசுல நெனச்சுக்குவேன். சாந்திமா! எந்த விசயத்துலயும் நீ சூட்டிகையாத்தான் இருப்பே. பெருந்துறை பெயிண்ட் கடைக்காரன் பிள்ளைக்கி வாய் ஜாஸ்தின்னு காதுப்பட பேசிட்டு போயிருக்காங்க.வாய் இருக்கிற பிள்ளை தான் இந்தக்காலத்துல பிழைக்கும். ஊமையா இருந்தா உலகம் ஏய்ச்சிடும். ஆனா உன்னைப்பத்தி ஒரு தகவல் கேள்விப்பட்டேன் சாந்திமா.படிக்கிற காலத்துல படிப்பு முக்கியம். நானெல்லாம் கையெழுத்துப் போட தெரிஞ்சாப் போவுதுன்னு ஆறாம் வகுப்போட பாடிப்பை விட்டுட்டவன். உன் அம்மா இறந்து பத்து வருசம் ஆயிடுச்சு. உனக்காகத்தான் இத்தனை சம்பாதிச்சும் போதும்னு நினைக்காம மறுபடி மறுபடி சம்பாதிக்கிறேன். கெட்ட சகவாசம் உனக்கு வேண்டாம் சாந்திமா.” நிதானமாய் ஷோபாவில் அமர்ந்தபடி பேசிக் கொண்டிருந்த அப்பா துரைசாமியை பார்த்தபடி எதிர் ஷோபாவில் சாந்தி அமர்ந்திருந்தாள்.

அப்பா எந்த விசயத்தை கெட்ட சகவாசம் என்று பேசுகிறாரோ அந்த விசயம் சாந்திக்கு உயிர் போன்றது. அப்பா இந்தப் பேச்சை கோபமாய் பேசவில்லை என்பது நிம்மதி தான். மற்ற அப்பாக்கள் போல இந்த நேரம் அடித்துத் துவைப்பதும், கொன்று விடுவேனென்று மிரட்டுவதும் சினிமாவில் தான் பார்த்திருக்கிறாள். சரி விசயத்தை யார் சொல்லியிருப்பார்கள்? டிடக்டிவ் ஏஜென்ஸியில் சொல்லி என் நடவடிக்கைகளை கண்காணித்திருப்பாரோ? இல்லை கூடவே படிக்கும் லலிதாவோ, சுந்தரியோ சொல்லியிருப்பார்களோ? யார் சொல்லி என்ன? பின்னால் தெரிய வேண்டிய ஒரு விசயம் முன்பே அப்பாவுக்கு தெரிந்து விட்டது.

“என்னம்மா யோசனையில் இருக்கே? இனிமேல் நல்ல பிள்ளையாய் படிப்பை மட்டும் பார்த்துக்கறேன், இது கடைசி வருசம் நல்லா படிச்சு பட்டம் வாங்கிடறேன், என் மேல கவலைப்படாதீங்கப்பான்னு ஒரு வார்த்தை சொல்லிட்டு போய் படுத்து தூங்குற வழியைப் பாரு சாந்திமா! மணி இப்பவே பத்தரை ஆயிடுச்சு” என்றார் துரைசாமி.

இவளுக்கு நினைவு தெரிந்த நாளில் இருந்து அப்பா கோபமாய்க்கூட

எதுவும் சொன்னதில்லை. இனியும் அப்படி செய்யக்கூடியவர் அல்ல என்ற நம்பிக்கையில் சாந்தி, ‘என்ன தப்பான விசயம் கேள்விப்பட்டீங்கப்பா? நான் ஒருத்தரை மனசுல நினைச்சுட்டேன். அவரை கட்டிக்கணுமுன்னு ஆசைப்படறேன். இது தப்பா அப்பா?’ என்றாள்.

“உன் அம்மா போனதுல இருந்து உனக்கு என்ன என்ன தேவையோ அத்தனையும் கண்ணும் கருத்துமா உனக்கு செஞ்சவன் நான் சாந்திமா. என் அக்காவும், என் தம்பியும் இன்னொரு கல்யாணம் கட்டிக்க எத்தனையோவாட்டி சொன்னாங்க. இன்னொரு அம்மா வேண்டாமுன்னு நீ அழுதே. எங்க வர்றவ உன்னை நோகடிச்சுடுவாளோங்கற பயத்துல நான் அந்த தப்பை செய்யலை. சீனாபுரத்துல இந்த வீடு, நானும் நீயும் போனதும் பகல்ல ஆள் இல்லாம பூட்டியேதான் கிடக்குது. என்ன சமையல் செய்யலாமப்பான்னு நீதான் கேக்குறே! இந்த நோம்பிக்கு என்ன கலர்ல ட்ரஸ் எடுத்துக்கட்டுமப்பான்னு நீதான் கேட்குறே! ஒருத்தனை விரும்புறதை மட்டும் திருட்டுத்தனமா வச்சுக்கறே. அடுத்தவங்க சொல்லி இந்தக் காதுல நான் கேட்க வேண்டிதா இருக்குது. என்ன சம்பாதிச்சு என்ன புண்ணியம்மா? பிள்ளையை வளர்க்கத் தெரியாம வளர்த்திட்டான் துரைசாமின்னு நாளைக்கு இந்த சீனாபுரம் பேசும். என் அக்கா பேசுவா. என் தம்பி பேசுவான். அப்போ நான் என் முகத்தை எங்கே கொண்டு போய் வச்சுக்க? சொல்லு சாந்திமா?” என்றார் துரைசாமி.

இப்போதைக்கு அப்பாவிடம் எதுவும் சொல்லாமல் படுக்கை அறைக்கு சென்று விடலாமா என்று யோசித்தாள் சாந்தி.

“எதைச் செய்ய வேண்டாமுன்னு சொல்றேனோ அதை செய்து பாக்கிற வயசு சாந்திமா உனக்கு. ஏன் சொல்றேன்னா நீ பின்னால வருத்தப்படும்படியா ஆயிடுச்சுன்னா என்ன பண்றதுன்னு தான் என் கவலை”

“அவரு ரொம்ப நல்லவருப்பா. எனக்காக உயிரையே தருவாரு” என்றாள் சாந்தி.

“சக்கரையின்னு பேப்பர்ல எழுதி தூளோட கொதிக்கிற தண்ணில போட்டு இறக்கி ஆத்திக் குடிச்சா காபி இனிக்காது சாந்திமா. டிகிரி வாங்கப்போற பொண்ணு நீ. பேசாம போய் தூங்கு. எதுக்கும் நான் சொன்னதை யோசனை பண்ணு” என்றவர் எழுந்து லுங்கியை சரி செய்து கொண்டே தன் அறை நோக்கிச் சென்றார். சாந்தி தன் அறைக்கு வந்து கட்டிலில் விழுந்தாள்.

சாந்திக்காக உயிரையே தருவதாகச் சொன்ன ரமேஷ் சினிமாவில் வரும் வில்லன்களைப்போல அழகானவனல்ல. எந்த நேரமும் லுங்கியில் பெருந்துறை ஈரோடு என்று வலம் வந்தவனைத் திட்டி ஜீன்ஸ் பேண்ட் அணிய வைத்தவள் சாந்தி தான். வார்த்தைக்கு வார்த்தை கெட்ட வார்த்தைகளைப் போட்டு பேசுபவன், தலையில் கொட்டிக் கொட்டி வைத்து இப்போது தெரியாமல் ஒரு வார்த்தை பேசினால் கூட இரண்டு கைகளையும் பயமாய் தலையில் வைத்துக் கொள்வான்.

முதலாக ஈரோடு செல்லும் பேருந்தில் கூட்ட நெரிசலில் தன்னை இடித்துக் கொண்டும் உரசிக் கொண்டுமிருந்த முகம் தெரியாத ஆளை படியில் தொங்கிக் கொண்டு வந்த ரமேஷ் தான் பார்த்து மேலேறி நுழைந்து வந்து அவனுக்கு செமத்தியாய் கொடுத்தான். ‘படிக்கப் போற பொண்ணுகளை இடிக்கவே வர்றியாடா நாயே’ கூட்டத்தில் யாருக்குமே இல்லாத தைரியம் அவனிடத்தில் இருந்ததில் லயித்து நிம்மதியானாள்.

தொடர்ந்து வந்த நாட்களில் பெருந்துறை பஸ் நிறுத்தத்தில் அடிக்கடி இவள் பார்வையில் அவன் தட்டுப்பட்டான் ரமேஷ். ஒருமுறை அவனே இவளிடம் பேசினான். ‘மேடம் யாராச்சிம் டிஸ்டர்ப் பண்ணா என்கிட்ட சொல்லுங்க, தட்டி லேப்பிடலாம்’ என்றவனிடம், ‘லேப்பிடறதுன்னா என்ன?’ என்றாள்.

அவன் சிரித்தான். ஏனோ சாந்திக்கு அவனை பிடித்துப் போயிற்று.

காலையில் கல்லூரிக்கு செல்லும் சமயம் மட்டுமே கண்ணில் படுபவன் மாலை நேரத்தில் பெருந்துறை பேருந்து நிறுத்தத்தையே இவள் சுற்றினாலும் கண்ணில் தென்பட மாட்டான். அதையும் ஒருநாள் அவனிடமே கேட்டாள் சாந்தி. ‘சார் சாயந்திரம் பிசியோ?’ என்று.

அவன் ஆமாம் என்றான். சென்னிமலை சாலையில் வண்டிக்கடை போடுவதாகவும், இட்லி, பணியாரம், யேவாரம் இரவு  பதினொரு மணிவரை பார்ப்பதாகவும் சொன்னான். படிப்பு? என்றவளுக்கு, ‘ஒன்பதாங் கிளாஸ் பெயில்’ என்று சொல்லிப் போய் விட்டான்.

சாந்தி இரவு பதினொரு மணி இருக்குமா? என்று சுவரில் கடிகாரத்தை பார்த்தாள். அது பதினொன்றைத்தான் காட்டியது. இந்த நேரம் வியாபாரத்தை முடித்திருப்பான். எதற்கும் அவனை கூப்பிட்டுப் பார்ப்போம் என்று தன் செல்போனில் அவனை கூப்பிட்டாள். அவனோ மூன்றாவது ரிங் போகையிலேயே எடுத்தான். அதிசயமாகத்தான் இருந்திருக்கும் அவனுக்கு. ‘இன்னும் தூங்கலியாடி நீ? படிச்சுட்டு இருந்தியா?’ என்றான். இவளோ அப்பா தன்னிடம் பேசிய விசயங்களை

அவனிடம் சுருக்கமாகச் சொன்னாள். ரமேஷ் அதன் பின் சொன்ன விசயம் அதைவிட அதிர்ச்சியாய் இருந்தது அவளுக்கு.

“உன் அப்பா நாலைஞ்சு ஆட்களோட மதியமா என் வீட்டை தேடி சந்தைக்கடைப் பக்கம் சுத்தி பவானி ரோட்டுல ரோட்டுல விசாரிச்சுட்டு போயிட்டாரு. வீட்டுல எங்கம்மா மட்டும் தான் இருந்திருக்குது. என்னைப் பத்தி பெருமையா அவனொரு வெளங்காதவன், தொட்டதுக்கெல்லாம் சண்டை போடுவான். எந்த வம்பு தும்புக்கும் வராம நாஞ் சொல்லி வச்சுக்கறேன்.. அடிச்சுக் கிடிச்சு வச்சிடாதீங்க, அவன் அப்பனில்லா பிள்ளையின்னு அழுது உன் அப்பாவை அனுப்பி வச்சிருக்குது. சாயந்திரம் வீடு போன என்னை உக்காத்தி வெச்சு புத்தி சொல்லுது எங்கம்மா. எனக்கா கோபமுன்னா கோபமுடி! உன் அப்பா பெயிண்ட் கடை தேடிப்போயி நாலு காட்டு காட்டலாமுன்னு கோபம்டி. உன் பொண்ணு என்னைத்தான் கட்டிக்குவா. சாந்தி எனக்குத்தான்! அப்படின்னு கத்திட்டு வரலாமுன்னு நெனச்சேன். நீ தலையில் கொட்டி வச்சிருவீன்னு நினைச்சுட்டு எதுக்கும் உன்கிட்ட ஒரு வார்த்தை சொல்லீட்டு பண்ணிக்கலாமுன்னு விட்டுட்டேன்” என்றான்.

“காட்டு காட்டறதுன்னா என்ன?” என்றாள் சாந்தி. அவன் போனில் சிரித்தான்.

“சிரிக்காத ரமேஷ். அப்புறம் நான் பிலாஞ்சிடுவேன்” என்றால் சாந்தி.

“என்னது பிலாஞ்சிடுவியா? பசுவோட சேர்ந்து பன்னியும் புல்லு திங்குது பார்த்தியா”

“ஆமா உன்கூட பேசினால் உன்னை மாதிரி தான் எனக்கும் பேச்சு வரும். பூவோட சேர்ந்து நாரும் மணக்குது. என்ன செய்யலாம் ரமேஷ்? எப்படியோ என் அப்பாவுக்கு விசயம் தெரிஞ்சிடுச்சு. எனக்காக என் அப்பா வில்லன் ரோல் பண்ணுவார் போல”

“நான் என்ன சொன்னாலும் மறுப்பு சொல்ல மாட்டீல்ல?” என்றான்.

“மறுக்க மாட்டேன்” என்றாள் உறுதியுடன்.

“சரி நிம்மதியா தூங்கு” என்றவன் போனை கட் செய்தான். அடுத்த நாள் சாந்தி வீட்டின் முன் பைக்கை நிறுத்தியவன் இரும்பு கேட்டை திறந்து விட்டு மீண்டும் பைக்கில் ஏறி உள்நுழைந்து புங்கை மரநிழலில் நிறுத்திவிட்டு படியேறினான். ‘சாந்தி.. சாந்தி’ என்று குரல் கொடுத்தபடி வீட்டினுள் நுழைந்தவன் காலேஜ் செல்ல தயாராகி புத்தகம், டிபன் பாக்ஸோடு தன் அறையிலிருந்து வெளி வந்தவள் இவனைப் பார்த்தாள்.

“எங்கே உன் அப்பா பெயிண்ட் கடைக்காரர்? அவர்கிட்ட சொல்லிட்டு உன்னை கூட்டிட்டு போறேன். இன்னிக்கு திண்டல் வேலாயுதசாமி கோவில்ல உனக்கும் எனக்கும் கல்யாணம். பத்தேகாலுக்கு நல்ல முகூர்த்த நேரம் இருக்கு” என்றவனுக்கு முகம் சுளித்து பழிப்புக் காட்டினாள் சாந்தி.

“பெரிய வீரர் தான்! எங்கப்பா வீட்டுல இல்லை. காலையில அஞ்சு மணிக்கே முக்கிய வேலை இருக்குன்னு காரை எடுத்துட்டு போயிட்டார். பூட்டின வீட்டு முன்னாடி நின்னுட்டு கஞ்சா கருப்பு தான் ஒரு படத்துல சவுண்டு குடுப்பான். அது மாதிரி நான் ஒருத்தி தான் இருக்கேன்னு சவுண்டு குடுக்க கூடாது” என்றாள் சாந்தி.

“தப்பிச்சிட்டாரா பெயிண்ட் கடைக்காரரு? இதுக்காக நம்ம கல்யாணம் நிக்கப்போறது இல்லடி. ஐயா வெள்ளை வேட்டி சட்டையில எப்படி மாப்பிள்ளை கணக்கா இருக்கனா?” என்றான்.

“என் கண்ணே பட்டுடும் போல இருக்கு. அந்த தாவாங்கட்டைக்கி கீழ இருக்குற கொஞ்சம் முடியை சவரம் செஞ்சிருக்கலாம்ல?”

“அது ஸ்டைலுடி” என்று ரமேஷ் சொன்ன போது துரைசாமியின் கார் உள்நுழைந்து வந்து வீட்டின் முன் நின்றது. டிரைவர் சீட் கதவை நீக்கி துரைசாமி மாலையும் கழுத்துமாக இறங்கினார். இடதுபுற கதவை அவர் நீக்கிவிட ரமேஷின் அம்மா லட்சுமி மாலையும் கழுத்துமாக காரிலிருந்து இறங்கி அவரை ஒட்டி நின்றாள். வீட்டு வாசல்படிக்கு வந்து நின்று பார்த்த இருவரும் அதிர்ச்சியாய் இவர்களை பார்த்தார்கள்.

“என்ன அண்ணனும் தங்கச்சியும் அப்படி வெறிக்க எங்களைப் பார்க்கீங்ச? சாந்திமா! ஓடிப்போயி ஆரத்தி கரைச்சு எடுத்துட்டு ஓடியா சீக்கிரம்” என்றார் துரைசாமி.

*******